பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 24 வியாழக்கிழமை (09~09~2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:289

# புலிகளின் எல்லைநிலை மீது புல்லுமலையில் தாக்குதல்!

## துணைப்படை உதவியுடன் இராணுவக் கொமாண்டோக்கள் நடத்தினார்கள் என்று விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,செப்ரெம்பர்9

**மட்டக்களப்பு, புல்லுமலையில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைமீது நேற்றுமுன்தினம் இரவு 10.15 மணியளவில் 'டசின்' கணக்கான ஆயுததாரிகளால் திடீர்த் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது. இதில் புலிகள் உறுப்பினர்கள் இருவர் காயமடைந்தனர். புலிகள் திருப்பிச் சுட்ட தில் தாக்குதலாளிகளில் இருவர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

**ஆயுதம் தரித்த துணைப் படையினரின் உதவியுடன் இராணுவக் கொமாண்டோக்களே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

மட்டக்களப்பு நகரில் இருந்து 65 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கின்ற புல்லுமலை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குமான எல்லையை யொட்டி இந்தப் பகுதி அமைந்துள்ளது,

செவ்வாய்க்கிழமை இரவு அப்பகுதிக்குள் துணைப் படையினரின் உதவியுடன் ஊடுருவிய ஆயுததாரிகள் அணி ஒன்று 10.15 மணியளவில் திடீரென விடுதலைப் புலிகளின் நிலைமீது தாக்குதல் நடத்தியது. புலிகளும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் தமது தரப்பில் இருவர் காயமடைந்தனர் என்றும் தாக்குதலாளிகள் தரப்பில் இருவர் உயிரிழந்தனர் என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

தாக்குதல் அணியில் கனரக ஆயுதங்கள் தாங்கிய 34 பேர் அடங்கியிருந்தனர் என்று கிழக்கிலுள்ள புலிகளின் மூத்த தளபதிகள் கூறினர்.

இராணுவக் கொமாண்டோ அணியைச் சேர்ந்தவர்கள், ஆயுதம் தாங்கிய துணைப்படையினரின் உதவியுடனேயே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

பதில் தாக்குதலை அடுத்துப் பின்வாங்கிய தாக்குதலாளிகள் தப்பிச் செல்லும்போது காயமடைந்த தமது சாகக்களை ஏற்றிச்செல்ல 'மக்' கண்ணி அகற்றும் குழுவின் ஊழியர்களை மிரட்டி

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நிலை தாக்கப்பட்டதற்கு படைத்தரப்புக்குத் தொடர்பு உண்டு

### மட்டு. - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர்

படையினரின் உதவியின்றி படையினரின் பிரதேசத்திலிருந்து வந்து புல்லுமலை எல்லைப்புறத்தில் எந்தவித தாக்குதலும் நடத்த முடியாது.

- இப்படித் தெரிவித்தார் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்.

நேற்றுமுன்தினம் இரவு புல்லுமலைப்பிரதேசத்தில்இடம்பெற்ற தாக்குதல்ச் சம்பவம் தொடர்பாக பி.பி.ஸியின் தமிழோசைக்கு நேற்றிரவு அளித்த செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். செவ்வியில் கௌசல்யன் மேலும் குறிப்பிடுகையில்:-

இந்தச் சம்பவம் ஓர் அப்பட்டமான போர்நிறுத்த மீறலாகும். இது தொடர்பாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதிகளிடம் கூறியிருக்கிறோம். (16ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமம் படைமுகாமில் சிப்பாய் சூட்டுக்கு இலக்காகி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,செப்.9

கொடிகாமம் பகுதியில் உள்ள படைமுகாம் ஒன்றில் நேற்றுப் பகல் இடம்பெற்ற சூட்டுச் சமபவம் ஒன்றில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

பத்தொன்பது வயதான நிஸந்த குமார கருணாரட்ண என்பவரே துப்பாக்கிக் குண்டு பாய்ந்து உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. இவரது நெஞ்சுப் பகுதியில் ரவை பாய்ந்திருந்தது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பதில் நீதிவான் மு. திருநாவுககரசு நேற்று மாலை குறிப்பிட்ட படைமுகாமிற்குச் சென்று சிப்பாயின் சடலத்தைப் பார்வையிட்டார். சடலத்தைக் கொழும்புக்கு அனுப்பிப் பிரேத பரிசோதனை நடத்தி சட்ட மருத்து[illegible]ரின் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கொடிகாமம் பொலீஸாருக்கு அ[illegible]த்தரவிட்டார். (ஐ)

## தாக்குதல் நடத்தியோரை உறுதிப்படுத்த முடியவில்லை

### மாவட்ட கண்காணிப்புக்குழுத் தலைவர்

மட்டக்களப்பு,செப்.9

புல்லுமலை எல்லையோரப்புறத்தில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துக்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதை எங்களால் உறுதி செய்ய முடியவில்லை. இப்படித் தெரிவித்தார் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் சுலான்ரிங்காட்தஜசன். நேற்றிரவு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இப்படித் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இது குறித்து உடனடியாக எம்மால் எதையும் கூறமுடியாது. நேற்றிரவு (நேற்று முன்தினமிரவு) ஏ-5 நெடுஞ்சாலையில் இருக்கின்ற புலிகளின் கடைசி எல்லைச்சாவடி தாக்கப்பட்டிருக்கிறது (16ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கமும் புலிகளும் மீண்டும் பேச்சு மேசைக்கு வரவேண்டும்

### அமெ. இராஜங்க அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு,செப்.9

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் விரைவில் மீண்டும் பேச்சு மேசைக்கு வரவேண்டும். இனப்பிரச்சனைக்கு பேச்சு மூலமே தீர்வுகாண வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார், பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பணிப்பாளர் தலைவர் தூதுவர் ஜே. கோபர் ப்ளெக்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ப்ளெக் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார். வந்த கையோடு அவர் மேற்கண்ட கருத்தை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் சமாதானத்தை (16ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தை விபத்தில் யாழ். வாசி நசியுண்டு பலி!

கொழும்பு,செப்.9

கொழும்பு, வெள்ளவத்தையில் பாதசாரிக் கடவை (மஞ்சள் கோடுகள்) ஊடாக வீதியைக் கடக்க முயன்ற வயோதிபப் பெண் ஒருவர் பஸ் மோதியதில் தலை நசியுண்டு பரிதாபகரமாக உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகாதேவா பரமேஸ்வரி (வயது-61) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார். வெள்ளவத்தைப் பொலீஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள பாதசாரிக் கடவை

(16ஆம் பக்கம் பார்க்க)

## அகாஷியைச் சந்திப்பார் அமைச்சர் கதிர்காமர்

டோக்கியோ,செப்.9

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகாரத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அந்த நாட்டின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷியைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். 6 நாள் உத்தியோகபூர்வ விஜயமாக கதிர்காமர் நேற்றுமுன்தினம் ஜப்பான் போய்ச் சேர்ந்தார்.

ஜப்பானிய நிதியமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரையும் கதிர்காமர் இந்த

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். படைகளின் தளபதி ஆயரைச் சந்தித்துப் பேச்சு

யாழ்ப்பாணம்.செப்.9

யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் நேற்று யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையைச் சந்தித்து, உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள கிறிஸ்தவத் தேவாலயங்களில் வழிபாடுகள் குறித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்று மாலை 4.30 மணியளவில் ஆயர் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

அதியுயர் பாதுகப்பு வலயப் பகுதியில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## முப்படைகள் மற்றும் பொலீஸின் சிரேஷ்ட படை அதிகாரியாக கடற்படைத் தளபதி நியமிப்பு

கொழும்பு,செப்.9

முப்படைகள் மற்றும் பொலீஸின் சிரேஷ்ட படை அதிகாரியாகக் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் தயாசந்தகிரி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் நேற்று வழங்கப்பட்டது.

படைகள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் வகையிலான இந்தப் பதவியில் இருந்து இராணுவத்தின் முன்னாள் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல அண்மையில் ஓய்வு

(16ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டவன் வெளியில் வெடிகுண்டு மீட்பு!

மட்டக்களப்பு , தாண்டவன்வெளி பிரதான வீதியில் கடையொன்றுக்கு முன்னால் கண்டெடுக்கப்பட்ட கைக்குண்டொன்று நேற்றுப் புதன் கிழமை காலை செயலிழக்கச் செய்யப்பட்டது.

கைவிடப்பட்ட நிலையில் கைக்குண்டொன்று காணப்படுவதாகப் பொதுமக்களிடமிருந்து பொலீஸாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து அங்கு விரைந்த மட்டக்களப்பு பொலீஸார் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டனர். இதனால், மட்டக்களப்பு பிரதான வீதியில் சுமார் 3 மணி நேரம் போக்குவரத்துத் தடை ஏற்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)



## சந்திரிகா-ரணில் இன்று சந்திப்பு!



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். தற்போதைய அரசியல் நிலைவரம் பற்றியும் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது மிக முக்கியமாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபின் அடிப்படையில் ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு சமாதானப் பேச்சை ஆரம்பிக்க முன்வருமாக இருந்தால் சமாதான முயற்சிகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்திருந்தது. இந்த நிலையில் லண்டனில் இருந்து நாடு திரும்பியதும் ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவர் ரணிலைச் சந்தித்து இன்றைய நெருக்கடி நிலை தொடர்பாகப் பேசுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அத்தகைய சந்திப்புக்கு இன்று ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

தேங்கிப்போயுள்ள சமாதான முயற்சிகளை முன்னகர்த்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் 13ஆம் திகதி இலங்கை வருகின்றார்.

கடந்த மாத இறுதியில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்துப் பேசிய பின்னர் அவர் இலங்கைக்கு வரவிருக்கின்றார். 6 நாள்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# யாழ். பல்கலையின் வெளிவாரி மாணவருக்கு ஞாயிறன்று வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.9

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பதிவுசெய்த முதலாம் வருட மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிறுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


முதற்கலைமாணி, வணிகமுதற்தேர்வு மற்றும் இசை, நாட்டியம் ஆகிய துறைகளில் வெளிவாரியாகப் பதிவு செய்தவர்களுக்கே இந்த வழிகாட்டல் வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிவாரித் தேர்வு நாடியாகப் பதிவுகளை மேற்கொண்டவர்கள் தங்களுடைய பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கு அவசியமான தகவல்களை வழங்குவதும், பதிவுகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்குவதுமே இந்த வழிகாட்டல் கருத்தரங்கின் முக்கிய நோக்கம் என வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகின் இணைப்பாளர் கலாநிதி எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த வழிகாட்டில் கருத்தரங்கில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை - யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகினால் நடத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகளை இம்மாதம் வெளியிடுவதற்குத் தாம் ஏற்பாடு செய்ததாகவும் - எனினும், தற்போது பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தம் காரணமாக உரிய நேரத்தில் பெறுபேற்றை வெளியிடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் - அவர் தெரிவித்தார். (எ-5)

# புதிய கட்டடக் கூரை சாய்ந்தது



யாழ்ப்பாணம்,செப்.9

யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் சமுர்த்தி அலுவலகக் கட்டடத்தின் சிமெந்துக் கூரை நேற்றுத் திடீரென சரிந்து வீழ்ந்தது.

நேற்றுக் காலை 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றபோது செயலக வளாகத்தினுள் சனநடமாட்டம் அதிகமாக இருந்தது. எனினும், தெய்வாதீனமாக பொதுமக்கள் எவரும் சிமெந்துக் கூரையினுள் அகப்படவில்லை.

பல லட்சம் ரூபா செலவில் சுமார் 40 அடி நீளத்தில் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (எ-9-6-68)

# பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியரின் சம்பளப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி

கொழும்பு,செப்.9

பல்கலைக்கழக கல்விசார ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகாண்பது பற்றித் தீவிர கவனம் செலுத்தப்படுகின்றது என ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிர்வாகம் சம்பந்தமான நிரந்தர ஆணைக்குழுவின் தலைவர் திஸ்ஸ தெய்வேந்திரா தெரிவித்திருக்கிறார்.

அரசதுறை ஊழியர்கள் எதிர்நோக்கும் சம்பளப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பரிந்துரைகளைத் தாங்கள் ஏற்கனவே பூர்த்திசெய்துள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசதுறையில் உள்ள ஊழியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு என பரிந்துரை வழங்கத் தமது ஆணைக்குழு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது எனவும் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் சொன்னார்.

சம்பள முரண்பாட்டை ஆட்சேபித்தும் சம்பள உயர்வு கோரியும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நடத்திவரும் பணிப்பகிஷ்கரிப்பால் நாட்டில் உள்ள பன்னிரண்டு பல்கலைக்கழகங்களும் நேற்று எட்டாவது நாளாகவும் செயலிழந்திருந்தன.

ஊழியர்களின் போராட்டத்தைச் சமரசமாகத் தீர்க்க எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகள் மற்றும் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்துள்ளன.

ஊழியர்களின் கோரிக்கையால் எழுந்துள்ள பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர, இலங்கை அபிவிருத்தி நிர்வாகத் திணைக்களம் சம்பள விவகாரம் தொடர்பாக முன்வைத்துள்ள யோசனைகளை நடைமுறைப்படுத்துவதே ஒரேவழி என ஊழியர் தொழிற்சங்கச் சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார். (க)

# போலி 'லைசென்ஸ்' வைத்திருந்தவருக்கு இரண்டு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை

போலிச் சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருந்த நபர் ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் 2 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

போலிச் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தி வாகனம் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் ஆத்திகுடி வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த சண்முகநாதன் சுரேஸ்குமார் என்பவரைக் கடந்த மே மாதம் 20 ஆம் திகதி கோப்பாய் பொலீஸார் கைதுசெய்து யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இதுதொடர்பான தொடர்விசாரணைகள் யாழ். நீதிமன்றத்தில் இடம்பெற்றது. இறுதிக் கட்ட விசாரணைகளின் முடிவில் நேற்று இதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டது.

நேற்றைய தினம் இது தொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ். நீதிமன்ற நீதிபதி ஆர். ரி.விக்னராஜா முன்னிலையில் இடம்பெற்றபோது குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனை அடுத்து அவருக்கு 2 வருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கி நீதிவான் உத்தரவிட்டார். (எ-5)

# அமைச்சர்கள் எம்.பிக்களின் சம்பளங்கள் அதிகரிப்பு

கொழும்பு,செப்.9

அமைச்சர்களதும் நாடாளுமன்ற உறுப்பினர்களதும் சம்பளங்கள் இவ்வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாதாந்த சம்பளங்கள் 23 ஆயிரத்திலிருந்து 32 ஆயிரத்து 575 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேபோல் அமைச்சர்களின் சம்பளம் 29 ஆயிரத்திலிருந்து 33 ஆயிரத்து 640 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் இவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் 15 ஆயிரம் ரூபா எரிபொருள் கொடுப்பனவு தொடர்ந்து வழங்கப்படும். இந்த 15 ஆயிரம் ரூபாவும் கொழும்பிலிருந்து அவர்கள் இருக்கும் தேர்தல் தொகுதியைப் பொறுத்து அதிகரித்து வழங்கப்படும்.

இத்துடன் கையடக்கத் தொலைபேசிக் கொடுப்பனவாக 2 ஆயிரம் ரூபாவும் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கான ஐந்நூறு ரூபாவும தொடர்ந்து வழங்கப்படும்.

பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதியரசர்களின் சம்பளங்களை அதிகரிப்பதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதையடுத்து அமைச்சர்களதும் நாடாளுமன்ற உறுப்பினர்களதும் சம்பளங்களும் அதிகரிக்கப்படுகின்றன.

நீதியரசர்களின் சம்பள உயர்வுகள் தொடர்பான தீர்மானம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. (ப)

# எம்.பிக்களுக்கு சம்பள உயர்வா? இல்லை என்கிறார் ஜெயராஜ்!

அமைச்சர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கும் திட்டம் எதுவும் அரசுக்கு இல்லை. அப்படி வழங்கப்பட்டிருப்பதாக நாட்டு மக்களுக்குத் தவறான செய்திகளை வழங்கிய ஆங்கில மற்றும் சிங்களப் பத்திரிகையின் செய்தியாளர்களை அழைத்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என சபாநாயகரைக் கோருகிறார்.

- இப்படி நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே.

நேற்று நாடாளுமன்றில் நிதி திருத்தச் சட்டத்தின் இரண்டாவது மதிப்பீட்டின்போது நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நீதிபதிகளுக்கும், நீதியரசர்களுக்கும் சம்பள உயர்வு விடயத்தில் தீர்வு காணப்படல் வேண்டும். அதற்கான பிரேரணை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

எம்.பிக்கள், அமைச்சர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு எவ்வித தீர்மானத்தையும் நாம் எடுக்கவில்லை. இருப்பினும் நீதிபதிகள் மற்றும் நீதியரசர்களின் சம்பள உயர்வுகளோடு எமது சம்பளத்தையும் உயர்த்துப் போகின்றோம் என்ற செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதுகுறித்து உடனடியாக விசாரணை நடத்தப்படல் வேண்டும். நாடு பொருளாதார ரீதியாகப் பாரிய சிக்கலில் இருக்கின்றபோது எமது சம்பளத்தை நாம் அதிகரிப்பது நாட்டுக்குச் செய்யும் துரோகமாகும் - என்றார் அவர். (க)

# 'அக்ரஹார' திட்டத்தின் கீழ் கிடைக்கும் சலுகைகள் சில நிறுத்தப்பட்டன

அரச அலுவலர்களுக்கான காப்புறுதி (அக்ரஹார) திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுவந்த வெளிப்புறச் சிகிச்சை மற்றும் மூக்குக் கண்ணாடிகளுக்கான செலவுகளை மீளளிப்புச் செய்வது நிறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், விவாகமாகாத அலுவலர்களின் பெற்றோர் மட்டும், தங்கிவாழ்பவராகக் கருதப்படுவதுடன் தங்கி வாழ்பவர் பட்டியல் உள்ள சகோதரர், சகோதரிகள் நீக்கப்படல் வேண்டும்.

மேற்படி திருத்தங்கள் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் எஸ்.சீ. மன்னம்பெரும சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டு தொடக்கம் காப்புறுதியாளர்களுக்கு கூடிய நலன்கள் கிடைக்கக்கூடியவாறு காப்புறுதித் திட்டத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். (எ-117)

# மிருசுவில் பிரவச விடுதி திங்கள் முதல் இயங்குகிறது

தென்மராட்சி,செப்.9

மிருசுவில் ஆஸ்பத்திரியின் பிரசவ விடுதி கடந்த திங்கட்கிழமை முதல் இயங்கத் தொடங்கியுள்ளது. குடும்பநல சேவையாளர் ஒருவர் கடமைகளைப் பொறுப்பேற்றதையடுத்து பிரசவ விடுதி இயங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இந்தப் பிரசவ விடுதிக் கட்டடம் புனரமைக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்ட போதிலும் விடுதி வசதியில்லாததால் குடும்பநல சேவையாளர்கள் இங்கு கடமையாற்ற முன்வரவில்லை.

தற்போது விடுதி புனரமைக்கப்பட்டு குடும்பநல சேவையாளர் பொறுப்பேற்றதையடுத்து பிரசவ விடுதி மீண்டும் இயங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)




யாழ். பல்கலைக்கழக மாணவன் முகமாலை சேகரின் (விழிப்புலனற்றவர்) "கொட்டுக்கடப்பு" சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்று நடைபெற்றது. நூலின் முதற்பிரதியை விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் க.குமாரவடிவேலிடமிருந்து பல்கலைக்கழகப் பதில் நூலகர் செல்வி எஸ்.அருளானந்தம் பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்ட கலாநிதி க.சிதம்பரநாதன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா, நூலாசிரியர் முகமாலை சேகர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன், மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராஜா, பேராசிரியர் என்.ஞானக்குமாரன், வண.பிதா இரா.ஸ்ராலின் அடிகளார் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட்-2004


ஆஸ்திரேலியா


நியூஸிலாந்து


இலங்கை


தென்ஆபிரிக்கா


இந்தியா


பாகிஸ்தான்


இங்கிலாந்து


மேற்கிந்தியத் தீவு


கென்யா


சிம்பாப்பே


பங்களாதேஷ்


அமெரிக்கா

**தென்னாபிரிக்கா**

கிரேம்ஸ்மித், (அணித்தலைவர்), மார்க் புட்சர், நிக்கிபோஜே, அலன்டௌசன், ஜீன் போல்டுமினி, ஹேர்சல்கிப்ஸ், ஜக்கலிஸ், லான்ஸ் குளூஸ்னர், லாங்வெல்ட், நிற்னி, றொபின் பீற்றர்சன், ஷேன் பொலக், ஜக்று டொல்ப், மாட்டீன் வன்ஜாஸ்வெல்ட்.

**இலங்கை**

மார்வன் அத்தப்பத்து, (அணித்தலைவர்), உப்புல் சந்தன, டி.எம்.டில்ஷான், டில்கார பெர்னாண்டோ, அவிஷ்க குணவர்த்தன, சமன் ஜயந்த, சனத் ஜயசூரிய, மஹேல ஜயவர்த்தன, கௌசல் லொக்கு ஆராய்ச்சி, பர்வேஷ் மஹ்றூப், லசித் மலிங்க, குமார் சங்ககார, சமிந்தவாஸ், நுவன் சொய்ஸா.

**அமெரிக்கா**

றிச்சாட் ஸ்ராபின் (அணித்தலைவர்), றொகான் அலெக்ஸாண்டர், அஜாஸ்அலி, டொனோவன் பிளாக், ஜினேஸ் தேசாய், நஸீர் இஸ்லாம், ஹவாட் ஜோன்சன், மார்க் ஜோன்சன், கினேற்றன் லம்பேட், ஸ்ரீவ்மஸ்யா, ஜாவிட் நஸீர், சாள்ஸ்ரீட், லெயோன் றொமேறோ, ரசீட் ஷியா.

**மேற்கிந்தியா**

பிரையன் லாரா, (அணித்தலைவர்), பிராட்ஷோ, பிராவோ, கொட்னி பிறவுண், சந்தர்போல், கொலிமோர், மேர்வின் டிலான், கிறிஸ்கெய்ல், றியான் ஹிண்ட்ஸ், வேவல் ஹிண்ட்ஸ், சில்வெஸ்ரர் ஜோசப், றிக்காடோ பவல், டெரன் சாம்மி, சாம்நரேஸ் சர்வான்.

**சிம்பாப்பே**

தைபு, (அணித்தலைவர்), சிக்கும்பற, டிலோன் ஏபிரகாம், டக்ளஸ் ஹொண்டோ, மார்க்வேட்ஸ், மட்ஸிகென்யேரி,

முபாரிவா, நிக்லா, பன்யங்கரா, றெயின்ஸ்போட், சிபந்தா, பிரெண்டன் டெய்லர், உத்சேயா, மார்க் வெர்மியூலன்.

**ஆஸ்திரேலியா**

றிக்கிபொண்டிங் (அணித்தலைவர்), மைக்கல் கிளார்க், அடம் கில்கிறிஸ்ட், ஜேசன் கிலெஸ்பி, இயன் ஹார்வி, மத்தியு ஹைடன், பிரட் ஹொக், மைக்கல் கஸ்பரோவிச், பிரட்லீ, டரன் லீமன், டேமியன் மாட்டின், கிளென் மகராத், அன்ட்றூ சிமென்ஸ், ஷேன் வட்சன்.

**பங்களாதேஷ்**

ராஜின்சலா (அணித்தலைவர்), அப்தாப் அகமட், முகமட் அஷ்ரபுல், தாரிக் அஸிஸ், தபாஸ் பஸ்யா, பைசல் குசைன், நஸ்முல் குசைன், நபிஸ் இக்பால், காலித் மசூத், காலித் மஹ்முத், ஜாவிட் ஓமர், முகமட் ரபீக், முஸ்பூர் ரகுமான், மஞ்சுரல் இஸ்லாம் ரானா.

**இங்கிலாந்து**

மைக்கல் வோகன், (அணித்தலைவர்), விக்ரம் சோலங்கி, அன்ட்றூஸ்ரஸ், மார்க்கஸ் ரெஸ்கோதிக், போல்கொலிங்வூட், அன்ட்றூ பிளிண்டொப், அன்ரனி மெக்ராத், கிறீன் ஜோன்ஸ், அலெக்ஸ் வோர்ப், ஜேம்ஸ் அண்டர்சன், ஹேரத்பேர்ட்டி, ஆஸ்லிகில்ஸ், டெரன் கௌவ், ஸ்ரீவ் ஹார்மிசன்.

**இந்தியா**

சௌரவ்கங்குலி (அணித்தலைவர்), அஜித் அகார்கர், பாலாஜி, ராகுல் ட்ராவிட், றொகான் கவாஸ்கர், முகமட் கைப், தினேஸ் கார்த்திக், அனில் கும்ளே, வி.வி.எஸ்.லக்ஸ்மன், ஆசிஸ் நெஹ்றா. இர்பான்பதான், ஷேவாக், ஹர்பஜன் சிங், யுவராஜ்சிங்.

**கென்யா**

ஸ்ரீவ் ரிக்கோலா, (அணித்தலைவர்), ஜோசப் அபாபு, ரஜீப் அகா, கிரேஸ்மோடி, தோமஸ் ஒடயோ, பீற்றர் ஒன்கொண்டா, லமெக் ஒன்யங்கோ, கென்னடி ஒட்டினோ, மொறிஸ் ஓமா, பிறின்சால் பட்டேல், மல்தார் பட்டேல், ரவீந்துஷா, மாட்டின் சுஜி, றொனி சுஜி.

**நியூஸிலாந்து**

ஸ்ரீபன் பிளமிங் (அணித்தலைவர்), நதன் அஸ்ரில், இயன்பட்லர், கிறிஸ் கெய்ன்ஸ், கிறிஸ்ஹறிஸ், ஹாமிஸ் மார்சல், பிரண்டம் மக்குலம், கிரேக் மகமிலன், கைல்மில்ஸ், ஜேகப் ஓராம், மைக்கல் பப்ஸ், ஸ்கொட் டைரிஸ், டெரல் டஃபி, டானியல் வெட்டோரி.

**பாகிஸ்தான்**

இன்சமாம் உல்ஹக் (அணித்தலைவர்), அப்துல்ரசாக், அசார் மஹ்மூத், இம்ரான் பர்காத், மொகமட் சமி, மொயின்கான், நவீட் உல்குசைன், சல்மான்பட், சஹீட் அப்ரிடி, சொகைப் அக்தர், சொகைப் மாலிக், யசிர் ஹமீட், யூனுஸ்கான், யூசுப்யுகானா.

# மினி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற

# 12 அணிகள் களத்தில்

நான்காவது மினி உலகக் கிண்ணப் போட்டிகள் நாளை இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ளன. 12 நாடுகள் கலந்துகொள்ளும் இந்தப் போட்டிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியுடன் நிறைவடையும்.

கிண்ணத்தைக் கைபற்றும் நோக்குடன் 12 நாடுகள் களமிறங்கவுள்ளபோதும் கிண்ணத்தைக் கைப்பற்றக்கூடிய வாய்ப்பு ஒருசில அணிகளுக்கே உண்டென்பதை மறுப்பதற்கில்லை.

கடந்த ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு இருப்பதாகக் கருதப்பட்ட அணிகள் சில தற்பொழுது பலமான நிலையில் இல்லை. அதேவேளை, உலகக் கிண்ணப் போட்டியின்போது பலமற்ற நிலையில் இருந்த அணிகள் சில தற்பொழுது பலமான நிலையில் உள்ளன.

இதனால் போட்டிகளின் முடிவுகள் ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாகவும் அமையலாம். உலகக் கிண்ணத்தை வென்ற ஆஸ்திரேலிய அணி இப்பொழுதும் அதே பலத்துடனேயே உள்ளது. இங்கிலாந்து, இலங்கை, நியூஸிலாந்து, பாகிஸ்தான் ஆகிய அணிகள் தற்பொழுது பலமான நிலையில் உள்ளன,

தென்னாபிரிக்கா, மேற்கிந்தியா, இந்தியா ஆகிய அணிகள் பழைய நிலையில் இல்லை என்றே கூறவேண்டும். ஆனாலும் கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில் முடிவுகள் தீர்மானிக்கப் படமுடியாதவையே.

நான்கு பிரிவுகளிலும் பலமான இரு அணிகள் இடம்பெற்றுள்ளன. மூன்றாவது அணி பலமற்ற அணியாக உள்ளது. இதனால் இரண்டு போட்டிகளில் வெற்றியீட்டும் நான்கு அணிகள்தான் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெறவுள்ளன.

'கரணம் தப்பினால் மரணம்' என்பது போல ஆஸ்திரேலிய அணியை நியூஸிலாந்து அணி வெற்றியீட்டினால் ஆஸ்திரேலிய அணி அவுட். தென்னாபிரிக்க அணியை மேற்கிந்திய அணி வெற்றியீட்டினால் தென்னாபிரிக்க அணி அவுட். இந்திய அணியை பாகிஸ்தான் அணி வெற்றியீட்டினால் இந்திய அணி அவுட். இலங்கை அணியை இங்கிலாந்து அணி வெற்றியீட்டினால் இலங்கை அணி அவுட்.

ஆகவே, போட்டிகள் யாவும் அணிகளைப் பொறுத்தவரையில் பலப்பரீட்சைதான். சிம்பாப்பே, கென்யா, பங்களாதேஷ், அமெரிக்கா ஆகிய அணிகள் ஏனைய அணிகளின் வீரர்களுக்குச் சாதனைகளைக் கொடுப்பதற்காகவே களமிறங்குகின்றன. ஆயினும், கென்ய அணியைப் பொறுத்தவரையில் திடீரென்று பொங்கி எழவும் கூடும். கடந்த உலகக்கிண்ணப் போட்டியொன்றில் அது இலங்கை அணியை வெற்றியீட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால், இலங்கையணியைப் பொறுத்தவரையில் தற்பொழுது மிகவும் பிரகாசமான வாய்ப்புக்களைப் பெற்று வருகின்றது. தென்னாபிரிக்க அணியுடனான தொடர்வெற்றி, ஆசியக் கிண்ணச் சம்பியன் என்பன அதற்கு மேலும் பலத்தைக் கொடுத்துள்ளன. அந்தப் பலத்துடன் களமிறங்கும் இலங்கை அணி 96 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வென்ற அணிக்கு நிகராக மாறுமா?

முரளிதரன் இல்லாத இலங்கை அணி, டெண்டுல்கர் இல்லாத இந்திய அணி. எது பலமாகவுள்ளது என்றால் அது இலங்கை அணி என்றுதான் சொல்லவேண்டும். முரளிதரன் இல்லாமல் தென்னாபிரிக்க அணியுடனான ஐந்து போட்டிகளையும் அது வெற்றியீட்டியது. ஆனால், டெண்டுல்கர் இல்லாமல் ஹொலண்டில் நடைபெற்ற முத்தரப்புத் தொடரையோ அல்லது இங்கிலாந்து அணியுடனான தொடரையோ இந்திய அணியால் வெல்ல முடியவில்லை.

இதற்கு இந்திய அணித் தேர்வும் ஒரு காரணமாக உள்ளது. துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு ஆகியவற்றில் திறமை காட்டாத வீரர்களையே திரும்பத்திரும்ப அணியில் இடம்பெறச் செய்யாமல் ஏனைய வீரர்களுக்கும் வாய்ப்புக்கள் கொடுக்கலாம். ஹேமங் பதானி, சஞ்சய் பங்கார், சடகோபன் ரமேஸ், தினேஸ்மொங்கியா, முரளிகார்த்திக், கௌதம் காம்பீர் ஆகியோரையும் பயன்படுத்தலாமே.

இது விடயத்தில் பாகிஸ்தான் அணி, மேற்கிந்திய அணி, இங்கிலாந்து அணி போன்றவற்றைப் பார்த்தாவது இந்திய அணி திருந்துமா? ஒவ்வொரு போட்டித் தொடர்கள் ஆரம்பிப்பதற்கு முன்பும் வெற்றிக்கிண்ணம் தமக்கே என்று வாய்ச்சவடால் விடுவதை அணித்தலைவர் கங்குலியும் முன்னாள் அணித்தலைவர் ஸ்ரீகாந்தும் கைவிடுவார்களா?

**ஜெயஸ்ரீ**

எவ்வாறாயினும் தற்பொழுது இங்கிலாந்து சென்றுள்ள 14 பேர் கொண்ட இந்திய அணி கிண்ணத்தை வெல்லுமா? பொறுத்திருந்துபார்ப்போம் அதற்கு முதலில் பாகிஸ்தான் அணியை வெற்றிபெறவேண்டும். பின்னர் அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெறவேண்டும். அதன் பின்புதான் கிண்ணத்தைப் பற்றிச் சிந்திக்க முடியும். டெண்டுல்கர் இல்லாமல் கிண்ணத்தை வென்றால் அது கங்குலி தலைமையிலான இந்திய அணிக்கு ஒரு சாதனையாகவே அமையும்.

ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, இங்கிலாந்து, இலங்கை ஆகிய நான்கு அணிகளும் அண்மையில் பெற்ற வெற்றிகள் ஏனைய அணிகளுக்கு அச்சுறுத்தலாகவே உள்ளன. ஒன்றை ஒன்று வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றப் போவது எந்த அணி? ரசிகர்களே 25 ஆம் திகதி வரை பொறுத்திருப்போம். அதுவரையில் போட்டிகளை ரசிப்போம்.

**பிரிவு 'ஏ' - ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, அமெரிக்கா**
**பிரிவு 'பி' - தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ்.**
**பிரிவு 'சி' - பாகிஸ்தான், இந்தியா, கென்யா.**
**பிரிவு 'டி' - இலங்கை, இங்கிலாந்து, சிம்பாப்பே.**

## மலரும் நினைவுகள்

**கஜனி**

கிரிக்கெட் விளையாட்டுப் பிறந்த இலங்கிலாந்தில் நான்காவது மினி உலகக் கிண்ணப் போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கு அடுத்ததாக மிகவும் சிறப்பாக நடத்தப்படும் போட்டி இதுவாகும். இந்தப் போட்டிகள் முதன்முறையாக இங்கிலாந்தில் நடைபெறுகின்றன.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இலங்கை, இந்தியா, நியூசிலாந்து, தென் ஆபிரிக்கா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மேற்கிந்திய தீவுகள், சிம்பாப்பே ஆகிய 'டெஸ்ட்' அந்தஸ்துள்ள நாடுகளும் கென்யா மற்றும் அமெரிக்கா ஆகிய 'டெஸ்ட்' அந்தஸ்துப் பெறாத நாடுகளும் இப்போட்டிகளில் கலந்துகொள்ளுகின்றன.

இந்தப் போட்டிகள் இங்கிலாந்திலுள்ள எஜ்பஸ்டன், ஓவல் மற்றும் நோஸ்போல் ஆகிய மூன்று மைதானங்களில் நடைபெறவுள்ளன. 1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட முதல் போட்டித் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணியைத் தோற்கடித்து தென் ஆபிரிக்க அணி சம்பியனானது.

இந்தப் போட்டிகள் பங்களாதேஷின் டாக்கா நகரில் நடைபெற்றன. அடுத்து இடம்பெற்ற இரண்டாவது போட்டித் தொடர் 2000 ஆம் ஆண்டில் கென்யாவில் நைரோபி நகரில் நடைபெற்றது. இதில் இந்திய அணியைத் தோற்கடித்து நியூசிலாந்து அணி சம்பியனானது. மூன்றாவது போட்டித் தொடர் 2002 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் இலங்கை - இந்திய அணிகள் மோதின. சீரற்ற காலநிலை காரணமாக இறுதிப்போட்டிக்கு இரண்டு நாள்கள் நடைபெற்ற போதிலும் அந்த இரண்டு நாள்களிலும் போட்டி முடிவுறாத நிலையில் இரு நாடுகளும் சம்பியன்கள் என்று தீர்மானிக்கப்பட்டது.

**போட்டி அட்டவணை**

**முதல் சுற்றுப் போட்டிகள்**

| | |
|---|---|
| செப்.10 | இங்கிலாந்து எதிர் சிம்பாப்பே |
| | நியூஸிலாந்து எதிர் அமெரிக்கா |
| 11 | இந்தியா எதிர் கென்யா |
| 12 | தென்னாபிரிக்கா எதிர் பங்களாதேஷ் |
| 13 | ஆஸ்திரேலியா எதிர் அமெரிக்கா |
| 14 | இலங்கை எதிர் சிம்பாப்பே |
| | பாகிஸ்தான் எதிர் கென்யா |
| 15 | மேற்கிந்தியா எதிர் பங்களாதேஷ் |
| 16 | ஆஸ்திரேலியா எதிர் நியூஸிலாந்து |
| 17 | இலங்கை எதிர் இங்கிலாந்து |
| 18 | தென்னாபிரிக்கா எதிர் மேற்கிந்தியா |
| 19 | இந்தியா எதிர் பாகிஸ்தான் |
| | **அரையிறுதிப் போட்டிகள்** |
| 21 | 'ஏ' பிரிவில் முதலிடம் பெறும் அணி எதிர் 'டி' பிரிவில் முதலிடம் பெறும் அணி |
| 22 | 'பி' பிரிவில் முதலிடம் பெறும் அணி எதிர் 'சி' பிரிவில் முதலிடம் பெறும் அணி. |
| 25 | இறுதிப் போட்டி |

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.9

யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் நடைபெற வுள்ள தமிழ் இலக்கிய விழா பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி மாலை 4 மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாகாணக கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கமும் மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திருமதி என்.சிறிதேவியும் கலந்துகொள்ளவுள்ளனர். (10-13)


**புதிய பாட நெறிகள்**

1. DIP. IN MS OFFICE
2. DIP. IN DESKTOP PUBLISHING
3. DIP. IN HARDWARE TECHNOLOGY
4. DIP. IN VIDEO MIXING
5. DIP. IN COMPUTER ACCOUNTING

VISUAL BASIC
C''

**START 11-09-04**

பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், உத்தியோகத்தர்கள், ஆகியோருக்கென விசேட கட்டணக் கழிவில் இப்பாடநெறிகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

STP Your Partner in IT Solution

வடமாகாணத்தில் London city & guilds இனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு பயிற்சி நிலையம்


## நடமாடும் சேவை

வலி.வடக்கு,செப்.9

யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் நடத்தி வரும் நடமாடும் சேவையின் 7ஆவது சேவை நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு குருநகர் சென்.றோக் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜே/67 திருநகர், ஜே/70 குருநகர் கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை இச்சேவையில் கலந்து பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் பெறல், தேசிய அடையாள அட்டைகள் பெறாதவர்களுக்கு அதனைப்பெற நடவடிக்கையெடுத்தல், பெயர் மாற்றம், தொலைந்த தேசிய அடையாள அட்டைகள் பெற நடவடிக்கையெடுத்தல், வாக்காளர் இடாப்பு பதிவுகளை மேற்கொள்ளுதல் உட்படத் திருமணப்பதிவுகள் சம்பந்தமாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (10-86)

## கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு

திருகோணமலை,செப்.9

திருகோணமலை முத்தமிழ் வளர்கலை மன்றத்தின் ஏற்பாட்டில் ஈழத்து இலக்கியச் சோலையின் 18ஆவது வெளியீடான ஜெ.மதிவதனியின் 'எண்ண ஊர்வலம்' என்ற கவிதைத்தொகுப்பு நூல் வெளியீடு எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை விக்னேஸ்வர மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

கலாபூஷணம் தாபி சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் நூலின் முதற்பிரதியினை இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் தியாகராஜா ஈஸ்வரபாதம் பெற்றுக் கொள்ளவுள்ளார். தொடர்ந்து ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் திருமதி சித்தி பத்மநாதனும் சிறப்பு விருந்தினர் பொ.அன்புரட்ணமும் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வின்போது கராத்தேயில் சர்வதேச தரக் கறுப்புப் பட்டி பெற்றமைக்காக துவாரகா சௌந்தரராஜன் விபுலானந்தன் மேரிசாந்தி ஆகியோரும் ஆங்கில மொழியில் செய்தி வாசிக்கும் போட்டியில் முதலிடம் பெற்ற சுந்தரலிங்கம் கிஷோதரப் பிரஷாத்தும் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (10-203)

## சேவைநலன் பாராட்டு

வடமராட்சி,செப்.9

வடமராட்சி கிழக்குப் பிரதேச உதவி அரசாங்க அதிபராகக் கடந்த 7 ஆண்டுகளாகக் கடமையாற்றி இளைப்பாறிச் சென்றுள்ள வி.பி. வேலாயுதபிள்ளைக்கு பிரதேசத்தின் கிராமங்கள் தோறும் சேவை நலன் பாராட்டு விழாக்கள் அந்தந்த கிராமிய பொது அமைப்புக்களால் நடத்தப்பட்டு வருகின்றன. (10-173)

## முதலாமாண்டு நிறைவுவிழா

இலங்கை வர்த்தக வங்கியின் நெல்லியடிக் கிளையின் முதலாம் ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இதனை ஒட்டி வர்த்தக வங்கியின் நெல்லியடிக் கிளையின் செயற்பாடுகள் தொடர்பாக ஒலிபெருக்கியுடன் கூடிய பிரசார வாகனம் ஒன்றில் வீதிகள், கிராமங்கள் தோறும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (10-173)

## நியமனம்

தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிற்சியை முடித்து வெளியேறிய ஆசிரியர்களில் 12 பேர் மருதங்கேணி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு நியமனம் பெற்றுள்ளனர். (10-173-152)


**லொறி விற்பனைக்கு**

புதிய உட்கட்டமைப்புடன் (New Body) 26ஸ்ரீ5XXX தொடரிலக்கமுடைய ISUZU Japan லொறி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:இ.சிறிதரன், மாளிகாவத்தை, சங்கானை, T.P.: 0712 380 367 (36220)



**ஓராண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 11.08.1926
மறைவு 22.08.2003

அமரர் சதாசிவம் சொக்கலிங்கம்

அன்பால் எம்மை அணைத்து அறிவால் எம்மை உயர்த்தி பண்பால் போற்றிட வாழ்ந்திட்ட எம் தெய்வமே! ஓராண்டு அல்ல எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சிலே என்றும் நிலைததிருக்கும்.

96, இராஜேஸ்வரி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (36231) (32-18)

- குடும்பத்தினர்.



**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

அன்னையின் அரவணைப்பில் 15 - 04 - 1933



ஆண்டவன் அடியில் 23 - 08 - 2003

**அமரர் அப்பாத்துரை யோகீஸ்வரர்**

(ஓய்வுபெற்ற இலிகிதர், உள்ளகக் கணக்காய்வாளர் உள்ளூராட்சித் திணைக்களம்)
காட்டுவளவு, வல்வெட்டித்துறை

ஏகாதசித் திதி:- 10.09.2004

"விழிக்கு ஒளி போல்
கரைதேடும் படகிற்கு கலங்கரை விளக்கம் போல்
எமது வாழ்க்கைக்கு வழி காட்டிய
அன்புத் தெய்வமே! ஆண்டுகள்
எத்தனை சென்றாலும்
உங்கள் அன்பு முகம்
எமது நெஞ்சை விட்டகலாது"
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (10.09.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்புத் தந்தையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

தற்போதைய முகவரி:
இல.59, ஐயனார் கலட்டி,
முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை. (36232)(42-18-32)

தகவல்:
யோ.கண்ணன். (மகன்).



**பெண் வேலையாள் தேவை**

எமது தொலைத் தொடர்பு நிலையத்துக்கு பெண் வேலையாள் ஒருவர் தேவை. கணனி அறிவுள்ளவர் விரும்பத்தக்கது. உடன் நேரில் வரவும
தொடர்பு:
2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
T.P.: 2765, 5469
(சி-37541)



**யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன்**

**ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு**

விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள், அரச, தனியார் அலுவலர்கள், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், வீட்டுப்பெண்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள்

**முற்றிலும் புதிய முறையில் முழுமையாகக் கதைப்பதற்கான வகுப்புகள்**

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் 6000/=, சிங்களம் 4000/=

50% கட்டணம்

இன்னும் 3 நாள்கள் மட்டுமே!

11.09.2004 வரை சலுகைக் கட்டணத்துடன்

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு, மானிப்பாய், சாவகச்சேரி, ஆவரங்கால், பருத்தித்துறை உட்பட யாழ்ப்பாணத்தில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் வகுப்புகள் இடம்பெறும்.

நாடு தழுவிய பொதுப் பரீட்சை **October 30, 2004**

மேலதிக விவரங்கள்:
யாழ்.கொழும்பு தலைமையகத்தில் அல்லது வகுப்புகள் நடைபெறும் இடங்களில்! (37494)(32-18)

**SAAMSTECH**
Psalm Institute of Engineering and Technology
Colombo Head Office: 22 -1/4, Galle Road, Dehiwala. 0115540200
Jaffna Head Office: 841, Hospital Road, Jaffna. T.P.No. 077 3068968.



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

உயர்திரு. E.K. இராஜேஸ்வரன்
(கணக்காளர், உயர் தொழிநுட்பக் கல்லூரி)



இவர் அகில இலங்கை சமாதான நீதிவானாகப் பதவி ஏற்றதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். இவர் மேலும் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று இவரின் சேவைகள் தொடர பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
**மொடர்ன் ரெடிமேட் காட்சியறை**
ஊழியர்கள்.
இல.23, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.
இல. 8A, நவீனசந்தை (உட்புறம்), சாவகச்சேரி.
(36228) (32-18)



**திருமண அழைப்பு**

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஆவணி மாதம் 25ஆம் நாள் (10.09.2004) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.22 தொடக்கம் 10.58 மணிவரையுள்ள புநர்பூச நட்சத்திரமும் துலாலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன் திருநிறை செல்வன்
**கங்காதரன்**
(ஆசிரியர்)
(கிளி/ வட்டக்கச்சி மகாவித்தியாலயம். வட்டக்கச்சி)
அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி
**பகீரதி**
(ஆசிரியை)
(யா/அத்தியார் இந்துக் கல்லூரி. நீர்வேலி )
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் மணி மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைககின்றோம்.

தங்கள் நற்பிரசன்னத்தை நாடும்:
இருவீட்டார் அழைப்பு

தற்.முக: திரு.கதிரவேலு பாலசிங்கம்.
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.
நிர.முக: திரு.திருமதி யோ.சின்னத்தம்பி,
இல. 155/3, திருவையாறு,
கிளிநொச்சி.

திரு.திருமதி சின்னத்துரை
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(36237) (13-18-32)

உதயன்

## விதைத்ததைத்தானே அறுக்கமுடியும்!

வண்டியில் பூட்டப்பட்ட மாடுகள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு திசையில் வண்டியை இழுக்கவேண்டும். அப்போது தான் வண்டி நேர்த்தியாகவும் வேகமாகவும் முன்நகரும்.

அதைவிடுத்து ஒவ்வொரு மாடும் ஒவ்வொரு திசைக்கு வண்டியை இழுத்தால் வண்டி நகரமாட்டாது. அதுமட்டுமன்றி, உடைந்துபோகும்.

இதுதான் இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் நிலைமையும் கூட.

ஆட்சிக் கடிவாளத்தைக் கையில் வைத்திருக்கும் ஜனாதிபதியோ ஒவ்வொரு நேரத்துக்கு ஒவ்வொரு திசையில் வண்டி மாடுகளை விரட்டுகின்றார். அவரது கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி ஆவர்த்தனம் வாசிக்கின்றார்கள். பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியோ, கூட்டமைப்பின் மற்றைய பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிர்த்திசையில் ஆட்சி வண்டியை இழுத்துச் செல்லத் துடியாய்த் துடிக்கிறது. கூட்டமைப்பில் உள்ள மக்கள் ஐக்கிய முன்னணியின் தினேஷ் குணவர்த்தனா போன்றோர் ஜே.வி.பியின் பேரினவாதப் பேரிகைக்கு ஒத்து ஊத முயல்கின்றனர். கூட்டமைப்பின் ஏனைய இடதுசாரிகளோ எந்தப் பக்கம்போவது என்று புரியாமல் தடுமாறுகின்றார்கள். ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தாவோ, புலி எதிர்ப்புப் புராணம் பாடிக்கொண்டு எப்படியாவது ஆட்சி வண்டியில் தனக்கு ஓரிடம் கிடைத்தால் போதும் என்று அணிசேர்ந்து 'அபஸ்வரம்' பாடிக்கொண்டிருக்கின்றார்.

இவ்வாறு நாலாபுறமும் இழுபடுவதால் முன்னேயும் நகராமல் பின்னேயும் செல்லாமல் வண்டி குடைசாயும் நிலையில் அல்லாடுகின்றது.

நாட்டு மக்களோ பாவம். வாக்களித்த குற்றத்துக்காக இவ்வளவையும் பார்த்துக்கொண்டு - இவற்றின் விளைவுகளைச் சகித்துக்கொண்டு - வாளாவிருக்கின்றனர்.

இதையே புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும் அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

*"தமிழினத்தின் தேசியப் பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாணும் விடயத்தில் இந்த அரசு நாளுக்குநாள் குழப்பமான செய்திகளையும், தகவல்களையும் வெளியிட்டு வருவதோடு, முன்னுக்குப்பின் முரணான நிலைப்பாடுகளையும் பிரதிபலித்து வருகின்றது"* - என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கொண்ட கட்சிகளையும் குழுக்களையும் ஆட்சியைக் கைப்பற்றவேண்டும் என்ற அதிகார ஆசையை நிறைவுசெய்யும் ஒரே நோக்கத்துக்காக அணி சேர்த்துக்கொண்டு, கூட்டமைத்ததன் விளைவுகளை ஜனாதிபதி இப்போது அனுபவிக்கின்றார்.

தனது 'குழப்பக் கூட்டமைப்பின்' தொல்லை தாங்க முடியாமல் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் கூட்டத்தில் பொரிந்து தள்ளியிருக்கின்றார் ஜனாதிபதி. சந்திரிகா குமாரதுங்க.

*"கடவுள் புண்ணியத்துக்குக் கேட்கிறேன் - தயவு செய்து வடக்கு - கிழக்கு நெருக்கடியை எழுப்பிப் பிரச்சினைகளை உண்டு பண்ணாதீர்கள். அந்த விடயத்தை என்னைக் கையாளவிடுங்கள். தேவையில்லாமல் பகிரங்கமாக அது பற்றிக் கருத்து வெளியிட்டு விடயங்களைக் குழப்பியடிக்காதீர்கள்"* - என்று கடந்த திங்களன்று நடைபெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் விசனத்துடனும் - அதேசமயம் விநயமாகக் கூறுவது போன்றும் - கோரிக்கை விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி.

இந்தக் கோரிக்கையைத் தனது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பிக்களிடம் மட்டுமன்றி, அக்கூட்டத்துக்கு வந்திருந்த ஜே.வி.பியின் எம்.பிக்களிடமும் அவர் முன்வைத்துள்ளார். எனினும், ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ இந்தக் கூட்டத்துக்குச் சமுகம் தந்திருக்கவில்லை.

இந்த இனப்பிரச்சினை விடயத்தில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் யாரேனும் விரும்பினால் அதற்குப் பகிரங்க மேடைகளை நாடுவதை விடுத்து, தன்னிடம் நேரே வந்து தெரிவிக்கலாம் என்றும் ஜனாதிபதி அந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டாராம்.

ஆனால், ஜனாதிபதியின் இந்தக் கோரிக்கையும் வழிகாட்டலும் ஜே.வி.பியியைப் பொறுத்தவரை 'செவிடன் காதில் ஊதிய சங்கு' போன்றதுதான் என்று தெற்கு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

எந்த அமைதிப் பேச்சுகளும் இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்படுவதை எப்படியேனும் தமது கட்சி எதிர்த்தே தீரும் என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அடித்துக் கூறுகின்றார்.

நிலைமையைப் பார்க்கும்போது, இந்த ஆட்சி வண்டில் நாலாபுறமும் இழுபட்டு சின்னாபின்னமாவது தவிர்க்க முடியாதது போலவே தோன்றுகின்றது.

இந்தக் குழப்பங்களுக்கு மத்தியில் அமைதி முயற்சிகளை ஜனாதிபதி முன்னெடுத்துச் செல்வது என்பதும் துர்லபமே என்று படுகின்றது.

சுருக்கமாகச் சொல்வதானால், விதைத்ததை அறுக்கிறார் ஜனாதிபதி குமாரதுங்க. பேரினவாதத்துக்கு உரமூட்டிய பாவத்தைச் சுமந்துதானே ஆகவேண்டும்!

# இலங்கைத் தமிழர் இன்னல் தீர்க்க இந்திய அரசு உதவ வேண்டும்

## உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.9

இலங்கைத் தமிழர்களின் இன்னல்கள் தீரவும் அவர்கள் தமது தாயகத்தில் அமைதியாக வாழவும் ஆவன செய்யவேண்டும் என்று உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் இந்திய அரசிடம் கோரியுள்ளது.

கடந்த மாதம் இந்தியாவின் புதுவை மாநிலத்தில் இடம்பெற்ற உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் உலகளாவிய 9ஆவது மாநாட்டிலேயே இயக்கம் இக் கோரிக்கையை விடுத்துள்ளது.

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் அகிலத் தலைவர் ப.கு.சண்முகம் (மலேஷியா) தலைமையில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் இயக்கத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட அமரர்களின் உருவப் படங்கள் திரைநீக்கம் செய்துவைக்கப் பட்டன. மாநாட்டையொட்டி மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

உலகத் தமிழர்களுக்கென உலகத் தமிழ்க் கூட்டுக்கல்வி கலாசாரமையம், உலகத் தமிழர் ஆவணக்காப்பகம் என்பன நிறுவப்படும் என இயக்கத்தின் செயலாளர் நாயகம் துரை.கணேசலிங்கம் தனது சிறப்புரையில் தெரிவித்தார்.

தமிழில் வழிபாடு, தமிழ் ஆண்டு, தனித் தமிழ் அகராதி, தமிழ் வழிக் கல்வி முறை, உலகத் தமிழர் கொடி, கீதம், உடை, உலகவங்கி என்பன தொடர்ந்தும் பேணப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில வருமாறு:-

★ உலகளாவிய ரீதியில் தமிழ்க் கல்விப் பாடத்திட்டம் ஒன்றை உருவாக்குதல்.

★ திருவள்ளுவர் ஆண்டையும், தமிழ் வழிபாட்டு முறையையும் நடைமுறைப்படுத்தல்.

★ உலகத் தமிழர் பொதுவிழாவாகத் தைப்பொங்கல் திருநாளை ஏற்றுக் கொள்ளுதல். (8-202)

# இந்தியாவிலிருந்து திரும்பிய குடும்பங்களுக்கு உதவி

யாழ்ப்பாணம்,செப்.9

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிச் சொந்த இடங்களில் மீண்டும் குடியேறிய யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 24 குடும்பங்களுக்கு மீன்பிடி உபகரணங்களை ஐ.ஓ.எம். நிறுவனம் அண்மையில் வழங்கியது.

யாழ்ப்பாணப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் என்.பாலசுப்பிரமணியம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஐ.ஓ.எம்.என்ற சர்வதேச நிறுவனத்தினால் ஆஸ்திரேலிய நாட்டின் நிதியுதவியுடன இவ்வுபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஐ.ஓ.எம். நிறுவனத்திட்ட அலுவலர் ந.உதயகுமார் உபகரணங்களை வழங்கினார். (8)





இந்தியாவில் அகதிகளாகத் தங்கியிருந்து பின்னர் தாயகம் திரும்பிய யாழ். பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மீனவக் குடும்பங்களுக்கு ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஐ.ஓ.எம். நிறுவனத்தின் திட்ட அலுவலர் ந.உதயகுமார் உரையாற்றுவதையும், பயனாளிகள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

### மாணவர்கள் வீடு திரும்பினர்

கடந்த 2ஆம் திகதி காணாமற்போனதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த இருமாணவர்களான செல்வமோகன் அகிலன் (வயது 13), நவரத்தினம் ஸ்ரீராம் (வயது 13) ஆகிய இருவரும் வீடு திரும்பியுள்ளனர் என அவர்களின் உறவினர்கள் தமக்குத் தகவல் தந்துள்ளனர் என ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (10-173-7)

# வேலைநிறுத்தத்தால் பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகள் முற்றாகப்பாதிப்பு

யாழ்ப்பாணம்,செப்.9

யாழ். பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டுவரும் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் கற்றல் செயற்பாடுகள் அனைத்தும் பாதிப்படைந்துள்ளன.

நாடளாவிய ரீதியில் அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சங்கங்கள், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் சில கோரிக்கைகளை முன்வைத்துக் கடந்த முதலாம் திகதிமுதல் தொடர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் அனைத்துப் பல்கலைக்கழகச் செயற்பாடுகளும் செயலிழந்தன. எனினும், யாழ். பல்கலைக்கழகமும் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்திற்குக் கற்றல் செயற்பாடுகளைப் பாதிக்காத வண்ணம் ஆதரவு வழங்கி வந்தது.

தற்போது யாழ். பல்கலைக் கழகப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் ஊழியர்கள் தவிர ஏனைய அனைத்துத் தரப்பினர்களும் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டு வரும் இந்தப் போராட்டத்தினால் தற்போது நடைபெற்றுவந்த கலைப்பீடப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதாக கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்தார். (10-5)

# தியாகதீபம் திலீபன் நினைவுநாளில் மாணவர்கள் பட்டி அணிய ஏற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.9

தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நாள்களில் மாணவர்கள் திலீபனின் திருவுருவம் தாங்கிய பட்டி அணிந்து நினைவு தினத்தை அனுஷ்டிக்கக் கல்விக்கழகம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் அனைவரும் தியாகதீபம் திலீபனின் திருவுருவம் தாங்கிய பட்டி அணிந்து எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, கல்விசார் குழுவினர்களால் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இரத்ததானம், சிரமதானம் போன்றவற்றுடன் கிராமமட்டத்தில் தகவல் தொழில்நுட்ப அறிவினைப் புகட்டுதல், வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், பார்வை குறைந்த மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்குதல் மற்றும் பாடசாலை, சமூக மட்டத்திலான சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்துதல், திலீபனின் கருத்துக்கள் வரலாற்று அம்சங்கள் பற்றிய அறிவினை மாணவர்கள் மத்தியில் புகட்டுதல், பாடசாலைகள், கல்வி நிறுவனங்களில் தியாகி திலீபனின் நினைவு தினம் தொடர்பான பதாகைகள் தொங்க விடப்படல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாகக் கல்விக்கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (10-13)

### நாளை

ஆவணி 25

வெள்ளிக்கிழமை

(10.09.2004)

திதி : ஏகாதசி

பிற்பகல் 5.04 வரை.

நட்சத்திரம்: புனர்பூசம்

பிற்பகல் 12.17 வரை.

சுபநேரம்: 6.03 - 7.33

ராகுகாலம்: 10.33 - 12.03

(பழைய நேரப்படி)

# யாழ்.குடாநாட்டில் மினிபஸ்களின் கட்டணம் விரைவில் உயரலாம்!

## சிற்றூர்திச் சேவைச் சங்க வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.9

யாழ். குடாநாட்டில் அனைத்துப் பாதைகளிலும் சேவையிலீடுபடும் மினிபஸ் வண்டிகளின் கட்டணம் விரைவில் அதிகரிக்கப்படவுள்ளது.

குடாநாட்டிலுள்ள சில சிற்றூர்திச் சேவைச் சங்கங்கள் தத்தமது பாதைகளில சேவையிலீடுபடும் மினிபஸ் வண்டிகளின் கட்டணத்தை ஏற்கனவே அதிகரித்துள்ளன. ஏனைய சில சிற்றூர்த்திச் சேவைச சங்கங்கள் இன்னமும் கட்டண உயர்வு எதனையும் செய்யவில்லை.

சகல பாதைகளிலும் சேவையிலீடுபடும் மினிபஸ் வண்டிகளின் கட்டணத்தை விரைவில் அதிகரிப்பதற்குரிய நடவடிக்கைகளை யாழ். மாவட்டச் சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் சங்கம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. இன்னும் ஒரு தடவை டீசலின் விலை அதிகரிக்கப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அவ்வாறு உயரும் பட்சத்தில் மினிபஸ் வண்டிகளின் அதிகரித்த கட்டணம் உறுதி செய்யப்பட்டுச் சகல பாதைகளிலும் சேவையிலீடுபடும் மினிபஸ் வண்டிகளிலும் அவ்வப்பாதைக்குரிய கட்டண விவரம் கொண்ட பட்டியல் ஒட்டப்பட்டுப் பயணிகளுக்குத் தெரியப்படுத்தப்படும் எனச் சிற்றூர்திச் சேவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (10-173)

### உதயவாக்கு

அமைதியை நாடும் வேண்டுகோள்தான் பிரார்த்தனை.

# ஒவ்வொரு பிரஜையையும் அடகு வைத்துவிட்டே ஆட்சி நடத்துகின்றனர் இப்போதைய அரசினர்

## சாடுகிறார் ஐ.தே.கட்சி எம்.பி.கபீர் ஹாஸிம்

"நாட்டை மாறிமாறி ஆட்சி செய்துவரும் பெரும்பான்மை அரசியல் கட்சிகளுக்கு இனப் பிரச்சினை ஒரு கால்பந்து போல் ஆகிவிட்டது. மாறி மாறி உதைத்துத் தள்ளுகின்றனரேயன்றி, குறிப்பிட்ட இலக்கை நோக்கி பந்து போடப்பட வில்லை. கடந்த ஐம்பது ஆண்டுகளாக நாம் கண்ட உண்மை இதுதான்" - என்கிறார் தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன். (7ஆம் பக்கத்தில் அவரது விவரமான உரை)

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ ஜே..எம்.லொக்குபண்டார தலைமையில் நாடாளுமன்றம் கூடியது.

வழமையான வாய்மூல விடைக்கான வினாக் களுக்கு அமைச்சர்கள் பதிலளித்தனர்.

அமைச்சர்கள் பதில் அளித்தபின், தமிழ்த் தேசியக் கூட்டணி உறுப்பினரான இரா.சம்பந்தன் சபாநாயகரின் அனுமதியுடன் கவன ஈர்ப்பு விசேட உரை ஒன்றை நிகழ்த்தினார்.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுகள் உடனடி யாக ஆரம்பிக்கப்படவேண்டும். அமைச்சர்களும், ஜனாதிபதியும் பேசுவது ஒன்றாகவும், செய்வது ஒன்றாகவும் இருக்கின்றது. இதனால், தமிழ் மக கள் நம்பிக்கை இழந்த நிலையில் இருக்கின் றனர். எனவே, சமாதானப் பேச்சுக்களை ஆரம் பிக்க வேண்டும். இடைக்கால நிர்வாகசபை வழங்கப்படவேண்டும் - என இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.

இங்கு ஒரு விடயம் குறிப்பிடப்பட வேண்டும். எதிரணியில் இருந்து யார் பேசினாலும் அதற்கு இடையூறு விளைவிப்பதும், கூச்சல் போடுவதும ஜே.வி.பி.யினரின் வழமை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சம்பந்தன், சமாதானப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் எனறும இடைக்கால நிர்வாகசபை வழங்கப்பட வேண்டும என்றும் வலியுறுத்திய போதும் கூட அவர்கள் வழமைக்கு மாறாக அமைதியாக இருந்தனர். ஒருவேளை, இரா.சம்பந்தன் ஆங்கிலத்தில் உரையாற்றியதால் அது ஜே.வி.பி.யினருக்கு விளங்கவில்லையோ தெரியவில்லை.

### இ.தொ.காவின்நிலைப்பாடு

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் மிகவும பரபரப்பாகவும், ஆவலுடனும் எதிர்பார்க்கப்பட்ட விடயம். இ.தொ.காவினரின் நிலைப்பாடு பற்றி யதுதான்.

சந்திரிகா அம்மையாரின் அரசுக்கு இலங்கைத தொழிலாளர் காங்கிரஸ் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும் என்று அதன் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் அறிவித்தபின் முதன்முறையாக இ.தொ.காவினர் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இவர்கள் சபைக்கு வரும்போது ஆளும்கட்சி யினர் ஆரவாரமாக வரவேற்பார்கள் என்று எதிர் பார்க்கப்பட்ட போதும் ஆளும் கட்சியினர் கண்டும காணாதது போலவே இருந்தனர்.

முதலாவதாக இ.தொ.காவின் கண்டி மாவட்ட எம்.பி.பைஸல் முஸ்தபாவும், தேசியப் பட்டியல் எம்.பியான வி.புத்திரசிகாமணியும் சபைக்குள் வந்து சிறிது நேரம் இருந்துவிட்டு எழுந்துசென்றனர்.

சுமார் ஒரு மணி நேரத்தின் பின் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான், பிரதித்தலை வர் எம்.எஸ்.செல்லச்சாமி, ஜெகதீஸ்வரன் ஆகி யோர் கூட்டாகச் சபைக்குள் வந்து வழமைபோல் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்துகொண்டனர்.

எதிர்பார்ப்புகள் உப்புச் சப்பற்றதாகிவிட்டன. என்றாலும், சபையில் தொடர்ந்து இருந்த வி.புத திரசிகாமணி எம்.பி.நிதித் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்திலும் கலந்துகொண்டார்.

### நிதிக்கட்டளைகள் திருத்தச் சட்டம்

நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் குறிப் பிடப்பட்டிருந்தபடி வெளிநாட்டவர்கள் காணி களைக் கொள்முதல் செய்யும்போது நூறுவீத வரி அறவிடுவதற்கு வழிவகுக்கும் வகையில் நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கட்டளைகள் திருத்தச்சட்டம் தொடர்பான ஒத்தி வைக்கப்பட்ட விவாதம் ஆரம்பமானது.

நிதி அமைச்சர் இவ்விடயம் தொடர்பாகச் சபை யில் பிரஸ்தாபித்தபோது, எதிர்க்கட்சிக் கொறடா வான மஹிந்த சமரசிங்க இந்தச் சட்டமூலத்தை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பதாகவும், அதே வேளை, வாக்கெடுப்பிற்கு விடக் கேட்கப் போவதில்லை என்றும் சொன்னார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் ஜெயராஜ பெர்னாண்டோபுள்ளே குறுக்கிட்டு "ஏன் சபையில உங்களுக்குப் பெரும்பான்மை இல்லாமல் போய் விட்டது என்ற பயத்தினாலா வாக்கெடுப்பு கேட்கவில்லை?" என்று கேள்வி எழுப்பினார்.

"உங்களுக்குப் பெரும்பான்மை கிடைத்து விட்டது என்று கனவு காணவேண்டாம். தக்க சமயத்தில் பதிலடி கொடுப்போம். தயாராக இருங் கள்" - என எதிர்க்கட்சிக் கொறடாவான மஹிந்த சமரசிங்க அமைச்சர் ஜெயராஜுக்குப் பதிலடி கொடுத்தார்.

### ராஜித விவாதம்

எதிர்க்கட்சிகளின் தரப்பில் முன்னாள் காணி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன விவா தத்தை ஆரம்பித்தார்.

இந்த அரசு கொண்டுவந்துள்ள இப்புதிய நிதிச்சட்டம் சர்வதேச தொடர்புகளில் இருந்து இலங்கையைத் துண்டாக வேறுபடுத்தும் ஒரு திட்டமாகும்.

இச்சட்டம் வெளிநாட்டு முதலீட்டாளர்களின தும், தொழிலதிபர்களினதும் ஆர்வத்தை இல்லாதொழித்துவிடும்.

வெளிநாட்டு வருமானம் முற்றாகவே தடைப பட்டுவிடும்-என்று கூறினார் ராஜித சேனாரத்ன.

### கபீர் ஹாஸிம் உரை

தொடர்ந்து ஐ.தே.க.எம்பியான கபீர் ஹாஸிம் உரையாற்றினார்.

தேசிய சொத்துக்களைக் கொள்ளையடித்தும், தீ வைத்தும், நாசப்படுத்திய ஜே.வி.பியினர் இன்று தேசிய நலன் குறித்து ஒப்பாரி வைப்பது தான் வேடிக்கையாக இருக்கின்றது. கடந்த காலங்களில் விலைவாசி உயர்வைக் கண்டித் தும் சம்பள உயர்வைக் கேட்டும் வீதிப் போராட் டம் நடத்திப் பிரபல்யம் அடைந்த ஜே.வி.பியினர் இப்பொழுது வாயை மூடிக்கொண்டிருப்பது ஏன்?

உங்களுடைய கொள்கையை அடகுவைத்து விட்டீர்களா? எங்கே உங்களுடைய ஆர்ப்பாட்ட மும், ஊர்வலம்? - எனக் கேள்வி எழுப்பிய கேகாலை மாவட்ட (ஐ.தே.க) நாடாளுமன்ற உறுப்பினரான கபீர் ஹாஸிம் ஜே.வி.பியினர் அரசியல் தற்கொலை செய்துகொண்டுவிட்ட னர் என்றார்.

தேசிய சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண டும். தனியார் துறையினர் நாட்டின் செல்வங் களைச் சுரண்டுகின்றனர் என்று ஜே.வி.பியினர் ஒப்பாரிவைக்கின்றனர்.

இவர்களுடைய தேசியவாதம் உண்மை யானால் அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்ட காணிகள் 22 தனியார் கம்பனிகளிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளன. பல கம்பனிகள் வெளிநாட்டவர் களுக்குச் சொந்தமானவை.

முடியுமானால் தோட்டக்கம்பனிகளுக்கு 50 வருட ஒப்பந்த அடிப்படையில் தாரை வார்க் கப்பட்டுள்ள அரச காணிகளை மீண்டும் அரசு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கமுடியுமா? - என்றும் கபீர் ஹாஸிம் சவால் விடுத்தார்.

20 வருடங்களாக சீரழிக்கப்பட்ட நாட்டை இரண்டே ஆண்டுகளில் கட்டி எழுப்பினோம். ஆனால், இன்று சாதாரண சாப்பாட்டுப் பார்சல் 50 ரூபாவுக்குமேல் விலை ஏறிவிட்டது. பஸ் கட்டணம், பால்மா வகை மற்றும் மருந்து, உண வுப் பொருள்கள், எரிபொருள்கள் எல்லாவற் றினதும் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஆனால், அமைச்சர் மங்கள சமரவீரவோ பொருள்களின் விலைகள் குறைந்துவிட்டன என ரூபவாஹினியில் பேசுகின்றார். இந்த மனிதன் எந்த உலகத்தில் இருக்கின்றார் என்பது தெரியவில்லை.

ஒவ்வொரு பிரஜையையும் அடகுவைத்து, கடன்பெற்று, இவர்கள் ஆட்சி நடத்துகின்றனர் டொலரில் பெற்ற கடனை ரூபாவில் செலுத்த முடியாமல் தடுமாடுகின்றனர். - என்றும் கபீர் ஹாஸிம் சுட்டிக்காட்டினார்.

### அஜித் குமாரவின் பதில்

இவருடைய பேச்சுக்குப் பதில் அளிப்பது போல் ஜே.வி.பி.உறுப்பினரான அஜித்குமார உரையாற்றினார்.

வேலை வெட்டி இல்லாத போதுதான் மூளை ஒன்றாக வேலை செய்யும் என்பார்கள். இது உண்மை என்பதை ஐ.தே.கவினர் இப்பொழுது ஊர்ஜிதப்படுத்துகின்றனர் என்றார் அஜித்குமார.

வெளிநாட்டவர்கள் காணிகளைப்பெறும்போது



நாடாளுமன்றிலிருந்து...

நூறுவீத வரி அறவிடும் முறை ஒன்றும் புதிதல்ல. இரண்டு வருடங்களின் முன்பு ஐ.தே. க.அரசினால் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட விடயத்தை இப் பொழுது நாம் தோண்டி எடுத்துள்ளோம். இதனால தேசியவருமானம் பலமடங்கு அதிகரிக்கும் - என்று நம்பிக்கை தெரிவித்தார் அவர்.

### சம்பிரதாயம் புரியாத ஈழவேந்தன் எம்.பி.

மதியபோசன இடைவேளையின் பின் சபை கூடுவதற்கான கோரம் மணி அடித்தது. உறுப் பினர்கள் தமது ஆசனங்களில் வந்து அமர்ந்து கொண்டிருந்தனர்.

அவ்வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டணி தேசியப்பட்டியல் உறுப்பினரான ஈழவேந்தன் தனது ஆசனத்தில் இருந்து எழும்பிச்சென்று சபையின் குறுக்காக நடந்து மறுபுறத்திலிருந்த பிரதமருடன் பேசமுயன்றார்.

அப்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சபைக்கு குறுக்கே வரவேண்டாம் எனப் பலமுறை கூறியும் - கையால் சைகை காட்டியும் - அத னைப் பொருட்படுத்தாமல் பிரதமரை நோக்கி வந்தார் ஈழவேந்தன்.

அப்போது குறுக்கிட்ட சபைச் சிற்றூழியர் ஒருவர் வந்து ஈழவேந்தன் எம்.பியை எதிர் கட்சிகளின் பக்கம் அழைத்துச் சென்றார்.

'அனுபவம் மிக்க சீனியர்' என்று தம்மைக் கூறிக்கொள்ளும் ஈழவேந்தன் எம்.பிக்கு கோரம மணி ஒலிக்கும் போது சபைக்குக் குறுக்கே சென் றால் அது கட்சி மாறுவதாகக் கருதப்படும் என் பது தெரியாமல் இருந்தது தான் வேடிக்கை.

### நிதி அமைச்சர் பேச்சு

இறுதியாக நிதிக் கட்டளைகள் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்திற்கு நிதி அமைச் சர் கலாநிதி சரத் அமுனுகம பதில் அளித்தார்.

இந்தச் சட்டத்தின் மூலம் வெளிநாட்டவர்கள காணி வாங்குவதற்கு எந்தவிதமான தடையை யும் ஏற்படுத்தப்படவில்லை.

வெளிநாட்டவர்களிடம் மேலதிக வரிவிதிக் கும் சட்டம் ஏற்கனவே அமுலில் இருந்த ஒன்று தான். 2002 ஆம் ஆண்டில் வரவு - செலவுத் திட்டத்தின்போது இச்சட்டம் நீக்கப்பட்டது.

இதனால், காணிக்கொள்வனவில் பெருமளவு மோசடிகள் இடம்பெற்றன. வெளிநாட்டவர்கள் குறைந்த தொகைக்கு காணிகளைப் பெற்று பல மடங்கு கூடுதலான விலைக்கு வேறு நிறு வனங்களுக்கு விற்றுள்ளனர். இதில் பலகோடி டொலர்கள் மோசடி செய்யப்பட்டுள்ளன. இவற்றை எல்லாம் தடுக்கும் வகையிலேயே நூறுவீதம் வரி அறவிடப்படும் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது - எனக் கூறினார் நிதி அமைச்சர் சரத் அமுனுகம.

எதிர்க்கட்சிகளின் எதிர் ஆட்சேபனையுடன் இருந்த திருத்தச் சட்டம், வாக்கெடுப்பு இன்றி சில திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

### கூட்டமைப்பு - ஈ.பி.டி.பி. சூடான மோதல்

மாலையில் கடற்றொழில், நீரியல் வளங்கள் ஒழுங்குவிதிகள் தொடர்பான விவாதம் ஆரம்ப மானது. அமைச்சர் சந்திரசேன விஜேசிங்க பிரேரணையை முன்வைத்தார்.

அப்போது விவாதம் சம்பந்தப்பட்ட ஒழுங்கு விதிகளைப் பற்றியதாக இல்லாமல் தனிப் பட்டநபர்களின் விடயங் கள் தொடர்பாகத் திசை திரும்பின.

முன்னாள் அமைச்சர் மஹிந்த விஜயசேகரவுக் கும் ஜே.வி.பி.யினருக்கும இடையில் பலத்த வாக்கு வாதம் ஏற்பட்டது.

இவர்களுடைய மோதல்களை எல்லாம் மிஞ்சிவிட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும ஈ.பி.டி.பியினருக்கும் இடை யிலான மோதல்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. உரையாற்றும்போது, இன்றைய அரசு இலங்கை - இந்திய மீனவர்களை மோதவிட்டு வேடிக்கை பார்க்கின்றது என்று . குற்றஞ் சாட்டினார்.

தொடர்ந்து உரையாற்றிய ஈழவேந்தன் எம்.பி. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேரடியா கவே தாக்குதாக்கு என்று தாக்கினார்.

'தமிழ்த் துரோகி' என்றும் 'கொலைகாரன்' என்றும் அவரை ஈழவேந்தன் வர்ணித்தார்.

இதனால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக கும், ஈழவேந்தனுக்கும் இடையில் பலத்த கருத்து மோதல் ஏற்பட்டது.

ஈழவேந்தனுடன் கூட்டமைப்பு எம்.பிக்களான கஜேந்திரனும், சுரேஷ் பிரேமச்சந்திரனும் சேர்ந்து கொண்டனர்.

ஊடகவியலாளர்களான அற்புதன், நிமல ராஜன் ஆகியோரைக் கொலை செய்தவர் டக்ளஸ் தேவானந்தாவே, அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற சின்னபாலாவின் கொலைக்கும் இவர் காரணமாக இருக்கலாம் என்றும் ஈழவேந்தன் குற்றம் சாட்டினார்.

இடையில் கஜேந்திரன், கர்ணகடூரமான வார்த்தைகளால் டக்ளஸைத் திட்டித்தீர்த்தார்.

அப்போது அமைச்சர் டக்ளஸ் இவர்களுக் குப் பதிலடி கொடுத்துக் கொண்டே இருந்தார். அமைச்சருடைய 'மைக்' முடுக்கி விடப்படாத தினால் அவர் என்ன கூறுகின்றார் என்பதைத் தெளிவாகக் கேட்கமுடியவில்லை.

ஈழவேந்தனின் நேரம் முடிந்ததால் மைக் நிறுத்தப்பட்டது. இடியுடன் கூடிய மழை ஓய்ந் தது போல் சபையில் அமைதி ஏற்பட்டது.

ஈழவேந்தனின் உரையைத் தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பதில் அளிப் பார் என எதிர்பார்க்கப்பட்டபோதும் 'அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிரித்துக் கொண்டே சபையிலிருந்து வெளியேறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்க ளான பத்மினி சிதம்பரநாதன், அரியநேந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் வடக்கு - கிழக்கு மாகாண மீனவர்கள் அனுபவிக்கும் சிரமங்களை எடுத்துக் கூறி அவர்களுக்கு விமோ சனம் வழங்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். கடற்றொழில், நீரியல் வள ஒழுங்கு விதிகள் திருத்தச் சட்டம் சபையில் ஏகமன தாக நிறைவேற்றப்பட்டது. (க-3)

## இ.தொ.காவின் எம்.பிக்கள் எதிர்க்கட்சிப் பக்கமே அமர்ந்தனர்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிபந் தனையற்ற ஆதரவை அரசுக்கு வழங்கப்போகின றது என உத்தியோகபூர்வமாக அறிவித்த பின்ன ரும் இ.தொ.காவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்திற்கு வந்து வழமைபோல எதிரணி வரிசையிலேயே அமர்ந தனர்.

இ.தொ.கா. ஆளுந்தரப்புக்கு ஆதரவு தருவ தாக அறிவித்த பின்னர் நேற்றுமுன்தினம் நாடாளு மன்றம் முதல் தடவையாகக் கூடியது.

நாடாளுமன்றம் கூடியபோது இ.தொ.காவின் கண்டி மாவட்ட எம்.பியான பைஸல் முஸ்த பாவும், தேசியப்பட்டியல் எம்.பி.புத்திரசிகாமணி யும் வழமைபோல வந்து எதிரணியில் தமது ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். எவ்விதமான கலகலப்பும் ஏற்படவில்லை.

சிறிது நேரத்தின் பின் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான், பிரதித் தலைவர் எம்.எஸ்.செல்லச்சாமி, ஜெகதீஸ்வரன், முத்து சிவலிங்கம் ஆகியோர் புடைசூழ வந்து எதிர்க் கட்சி வரிசையில் அமர்ந்துகொண்டார்.

# ஈழத் தமிழர்கள் குறித்துப் பேச டக்ளஸுக்கு என்ன அருகதை?

## நாடாளுமன்றில் அவர்மீது சீறிப் பாய்ந்தார் ஈழவேந்தன்

கொழும்பு,செப்.9

'தமிழரின் துரோகி நீர், ஈழத் தமிழரின் பிரச் சினைகள் குறித்துப் பேச உமக்கு என்ன அரு கதை? தப்பித்தவறி நாடாளுமன்றத்துக்குள் வந்தவர் நீர். எம்மோடு விவாதம் செய்வதற்கு உமக்கு என்ன உரிமை உள்ளது?' - இப்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நோக்கி உணர்ச்சி பொங்க ஆவேசமாகப் பாய்ந்தார் தமி ழர் கூட்டமைப்பு எம்.பியான மா.க.ஈழவேந்தன்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கடற் றொழில், நீரியல்வள சட்ட ஒழுங்கு விதிகளுக் கான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற் றிய சமயமே ஈழவேந்தன் எம்.பி.இவ்வாறு சீறிப்பாய்ந்தார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் சபையில் அவர் பேசத் தொடங்கிய போது அதைக் குறுக்கீடு செய்து கேள்விகளைத் தொடுத்தார் அமைச்சர் டக்ளஸ தேவானந்தா. இதனால், ஆத்திரமுற்ற ஈழவேந்தன் உணர்ச்சி பொங்க ஆவேசமாக இப்படி உரையாற்றினார்.

ஈழவேந்தன் தொடர்ந்து கூறியதாவது:-

தமிழ்நாட்டிலே கொலை, கொள்ளைச் சம்ப வங்களுடன் சம்பந்தப்பட்ட உம்மை சிறையில் அடைத்தார்கள். பின்னர் எப்படி இங்கு வந்தீர் என்பதே எனது பிரதான கேள்வியாகும். பத்திரி கையாளர்கள் நிமலராஜன், அற்புதன் பின்னர் சின்னபாலாவின் கொலைகளுக்கும் காரண கர்த்தா யார்? அது வேறுயாருமல்ல; நீர்தான். டக்ளஸ் தேவானந்தாவே! எமது பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. உம்மை மீண்டும் மீண்டும் எச்சரிக்கிறேன். எமது பிரச்சினையில் தலை யிட்டு எம்மை வெறிகொள்ள வைத்துவிடாதீர்.



தீவுப்பகுதிகளில் எமது மீனவர்கள் படும் துன்பங் களுக்குக் காரணமானவர் இந்த டக்ளஸ்தான்.

கருணா என்ற கரு நாகத்துடன் இணைந்து மனித விழுமியங்களுக்கு மாறாக நடந்துகொள்ளும் உம்மை மீண்டும் எச்சரிக்கின்றேன்.

சிங்களக் கடற்படையினர் தமிழருக்குச் சொந்தமான கடற்பரப்பில் தமிழ் மீனவர்களுக்கு செய்யும் தீங்குகளைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. சிங்கள அரசு தமிழரின் நிலத்தைப் பறித்து எம்மை அடிமைப்படுத்தப் பார்க்கின்றது.

தமிழகத் தமிழர்களும் ஈழத்தமிழர்களும் மொழியால்-இனத்தால்- ஒற்றுமைப்பட்டவர்கள். சிங்களக் கடற்படை எம்மை மோதவிட்டு வேடிக்கை பார்க்கின்றது - என்றார் ஈழவேந்தன். (ஐ-க)

# சமாதான முயற்சிகளுக்கு எதிரான சக்திகள் யுத்தமற்ற நிலை நீடிப்பதையே விரும்புகின்றன

## நாடாளுமன்றத்தில் சம்பந்தன் உரை

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன் நேற்றுமுன்தினம் நாடாளு மன்றத்தில் ஆற்றிய உரை இது. இந்த உரையின் ஒருபகுதி நேற் றைய உதயனின் தலைப்புச் செய்தி யாக வெளியாகி இருந்தது.**

இலங்கை அரசு ஒருபோதும் தான்கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில்லை என்பது தமிழ்மக்களின் நீண்டகாலக் கசப்பான அனுபவமாகும்.

15ஆண்டுகளுக்கு முன்பாக சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளுக்கு அரசமைப்பு ரீதியாக உத்தியோகபூர்வமாக சம அந்தஸ்து வழங்கப்பட்டது. இச்சட்டம் இலங்கை அரசின் கருத்துடன் கவனிக்கப்படுவதில்லை. இலங்கை அரசு தொடர்ந்தும் தமிழ் மக்களுடன் சிங்களத்தில் மாத்திரமே கடிதத் தொடர்புகளை மேற்கொண்டு வருகின்றது. இது தமிழ்மக்களுக்கு அரசமைப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ள உரிமையை மறுப்பதாக அமைவதுடன், அவர்களுக்குப் பாரிய அசௌகரியங்களையும் அவமரியாதையையும் ஏற்படுத்துகின்றன. பொதுத்துறை, தொழில்வாய்ப்பு, பொருளாதாரம், சமூக மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளில் தமிழ் மக்கள்மீது திட்டமிட்ட முறையில் பாரபட்சம் காட்டப்படுவது தொடர்கிறது.

வடக்கு - கிழக்கில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முறையாகச் செயற்படும் பட்சத்தில், அது தங்களுடைய அவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடியதான கருவியாக அமையலாம் என்று தமிழ்மக்கள் கருதுகின்றனர். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை இறுதித் தீர்மானத்துக்கான வழியை வகுக்கும்; அத்துடன், அவ்வாறு காணப்படும் தீர்மானம் முறையாக நடைமுறைப்படுத்தப்படும் என்ற நம்பிக்கையை தமிழ் மக்களுக்குக் கொடுக்கும்.

### ஒப்புயர்வற்ற பிரதிநிதிகள் என்ற அந்தஸ்து புலிகளுக்கு ஏன்?

வடக்கு - கிழக்கில் உண்மையான சுயாட்சி ஒன்றை வழங்குவதில் இலங்கை அரசின் இதயசுத்தி குறித்து தமிழ்மக்கள் பாரிய ஐயம் கொண்டுள்ளார்கள். இந்தச் சிந்தனை தமிழ் மக்களின் கடந்தகால துன்பமான அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அரசின உள்ளேயும் வெளியேயும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ள அரசியல் சக்திகள் தமிழருக்கு எதிராக எடுத்துள்ள நிலைப்பாடு காரணமாக தமிழ்மக்கள் கொண்டுள்ள ஐயம் பலமடைந்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கும் அதனைத் தொடர்ந்து பேச்சு மூலம் இறுதித் தீர்மானம் காணுவதற்குமான பெரும்பான்மைப் பலத்துடனான ஆணையை தமிழ்மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கினார்கள்.

பேச்சு நடைமுறையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஒப்புயர்வற்ற பிரதிநிதித்துவ அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதைத் தமிழ்மக்களின் கடந்தகாலக் கசப்பான அனுபவங்கள் ஊடாகப் பார்க்கவேண்டும். மிதவாதத் தமிழ் அரசியல் தலைவர்களுக்குக் கொடுத்த உறுதிமொழிகளை இலங்கை அரசு ஒருபோதும் கௌரவிக்கவில்லை. தமிழ் மக்களை பலாத்காரம் மூலம் தங்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரலாம் என்று இலங்கை அரசு நம்பி, அவர்கள் மீது வன்செயலைக் கட்டவிழ்த்துவிட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டமும் அவர்களின் தியாகமும் தான் சர்வதேச அனுசரணையுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு மூலம் தீர்வுகாண வேண்டும் என்பதையும் இராணுவத் தீர்வுகாண முடியாது என்பதையும் இலங்கை அரசை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்தித்தன.



பெரும்பாலான தமிழ்மக்களின் தெளிவான அபிப்பிராயமும் இதுவாகும். கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்மக்கள் தங்களின் ஏகப் பிரதிநிதி தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற அங்கீகாரத்தை வழங்குவதற்கு இக்காரணிகள் ஒட்டுமொத்தமாகப் பங்களிப்புச் செய்தன.

இவ்வாறான உண்மை சார்ந்த யதார்த்த நிலையைப் புரிந்துகொள்ளத் தவறுவது சமாதான நடைமுறையை முன்னெடுத்துச் செல்ல உதவாது. இதற்கு முரணாக தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய தீர்மானம் ஒன்றைக் காணுவதை எதிர்க்கும் சக்திகளின் பிடிவாதப் போக்குக்கு ஊக்கமளிப்பதாக இது அமையும்.

### கிழக்குப் பிரச்சினை புலிகளின் உள்விவகாரம்

மட்டக்களப்பு - அம்பாறை பிராந்தியத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினை, அவ்வியக்கத்தின் உள்விவகாரமாகும்.

இருப்பினும், யுத்தநிறுத்தம் பராமரிக்கப்படும் என்றும் சமாதான நடைமுறை தொடரும் என்றும் இலங்கை அரசு தெளிவாகத் தெரிவித்துள்ளது. ஆனால், அரசின் ஒரு பிரிவினர் - அமைச்சரவை மட்டத்தில் கூட - பிரிந்து சென்றவர்களுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு மேலும் பிரிந்து செல்வதற்கு ஊக்கமூட்டுவதுடன் எது விதத் தீர்வுகளும் வருவதையும் தடுப்பதில் ஈடுபட்டுள்ளனர். தமிழ் அரசியல் கூலிப்படைகளின் செயலாகவே தமிழ்மக்கள் இதனைப் பார்க்கின்றனர். தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதே தமிழ் மக்களின் அக்கறையாக உள்ளது. தமிழ்மக்களின் அபிப்பிராயப்படி அவ்வாறான அரசியல் கூலிப்படைகளின் பங்கு, மோதலை நீடிக்கவே செய்யும்.

ஆயுதப் படைகளில் சில பிரிவினரும் ஆயுதப்படையினருடன் சேர்ந்து செயற்படும் தமிழ் இராணுவத் துணைக்குழுக்களைச் சேர்ந்தவர்களும் பிரிந்து சென்றவர்களுடன் கூட்டுச் சேர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் மீதும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சிவில் சமூக உறுப்பினர்கள்மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்பதை அண்மையில் இடம்பெற்ற சில நிகழ்வுகள் திடமாகத் தெரிவிக்கின்றன. கொலைகளும் பதில் கொலைகளும் இடம்பெறுகின்றன. சமாதான நடைமுறையைப் பாதிக்கக்கூடியதான இராணுவ பரிமாணத்தைக் கொண்டதாக இந்நிகழ்வுகள் அமைந்துள்ளன.

மீண்டும் யுத்தம் வருவதை எவருமே விரும்பவில்லை. ஒவ்வொருவருக்கும் பெரும் அழிவை ஏற்படுத்துவதாக யுத்தம் அமையும். எவ்வாறாயினும், தமிழ்மக்களின் துன்பங்கள், அவர்களின் இழப்புக்கள் ஆகியன நீடிப்பதற்கு 'யுத்தமற்ற வெறுமையான நிலைவரம் ஒரு சாட்டாக இருக்கமுடியாது, சமாதான நடைமுறைக்கு தீங்குவிளைவிக்கும் சக்திகள் 'யுத்தமற்ற', 'சமாதானம் இல்லாத' நிலையை நீடிக்கவே விரும்புகின்றன. தமிழ்மக்களின் துன்பங்கள் மற்றும் அவர்களுக்குத் தொடர்ந்து ஏற்படுத்தப்படும் இழப்புக்கள் குறித்து இச்சக்திகளுக்கு அக்கறை கிடையாது.

### ஜனாதிபதி கூறியதும் கூறாததும்

10.06.2000 இல் தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவைச் சந்தித்தது. அச்சந்திப்பின்போது, தாம் ஆரம்பத்தில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளுடன் சேர்த்தே மையப் பிரச்சினைகள் குறித்து பேச்சு நடத்துவதற்கு விரும்பினார் எனவும் -

கூடிய நேரம் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகள் சம்பந்தமாகவும் குறைவான நேரம் மையப் பிரச்சினைகள் குறித்தும் பேசலாம் எனத் தாம் ஆரம்பத்தில் வலியுறுத்தினார் எனவும் -

ஆனால், இப்போது இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளின் சில அம்சங்கள் குறித்துத் தாம் சில மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருப்பினும், அதனை மாத்திரம் அடிப்படையாக வைத்துப் பேச்சை ஆரம்பிப்பதற்குத் தாம் தயாராக இருக்கிறார் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகள் குறித்து உடன்பாடு காணப்படுமிடத்து, அந்த உடன்பாடு எழுத்துருவம் பெறவேண்டும் என்றும் இறுதித் தீர்மானத்துக்கான பேச்சு ஆரம்பமாக வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதுடன் இறுதித் தீர்வுக்கான மையப் பிரச்சினை பற்றிய பேச்சு ஆரம்பமாக வேண்டும் என்றும் எமது கடந்தகால அனுபவங்களைக் கருத்திற்கொண்டு, உடன்பாட்டை அமுல்நடத்துவதில் அரசுக்குள்ள உறுதிப்பாட்டை நாம் காண விரும்புகின்றோம் என்றும் வலியுறுத்தினோம். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை முன்மொழிவுகள் தொடர்பான அரசின் மாற்று முன்மொழிவுகள் பற்றி எமக்கு அச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்கப்படவில்லை.

சமாதான நடைமுறைக்கான அணுகுமுறை கொள்கைப்பிடிப்புள்ளதாக அமையவேண்டும் என்பதையும் அந்த அணுகுமுறை அவரவருக்கு ஏற்ற சந்தர்ப்பவாத அடிப்படையில் அமையக்கூடாது என்பதையும் வலியுறுத்திக்கூற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புகின்றது.

கடந்த 55 வருடங்களாகப் பிரதான அரசியல் கட்சிகளால் 'அரசியல் உதைபந்து' ஆக தமிழ்த் தேசியப் பிரச்சினை பாவிக்கப்பட்டு வருவதன் காரணமாக இப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணப்படாதிருந்து வருகிறது. இரண்டு தசாப்தகால யுத்தத்தின் பின்னரும் யுத்தம் ஏற்படுத்திய விளைவுகள் பற்றிய யதார்த்தத்தை உணரமுடியாத நிலையில், நேர்மையும் வாய்மையும் இல்லாத சமாதான நடைமுறை வெற்றிபெற முடியாது. இது துக்ககரமான ஒன்றாக அமையும். அரசின் சிரேஷ்ட உறுப்பினர்களின் அறிக்கைகள் அபாய அறிவிப்பை ஏற்படுத்தியுள்ளன.

### சமாதான நடவடிக்கைகளை நெருக்கடி நிலையிலிருந்து மீட்பது அரசின் பொறுப்பு

சமாதான நடைமுறை தொடர்பான தற்போதைய நெருக்கடி முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்பது அவசியமானதாகும். சமாதான நடைமுறையை மீட்டெடுக்கவேண்டியது, முக்கியமாக இலங்கை அரசின் கடமையாகும். சமாதான நடைமுறை தொடர்பான தனது நடத்தையின் தரம் குறித்து இலங்கை அரசு எடுக்கும் பரிகாரம் கொடுக்கக்கூடிய நடவடிக்கைகளே தற்போதைய நிலைவரத்தில் ஒரு ஆரோக்கியமான திருப்பத்தை ஏற்படுத்த முடியும். வெவ்வேறு காரணங்களைக் கூறி விடுதலைப் புலிகள்மீது குற்றங்களைச் சுமத்துவதன்மூலம் இலங்கை அரசு தான் விட்ட பாரிய தவறுகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளமுடியாது.

அக்கறைக்குரிய விடயமான சிறுவர் ஆள் சேர்ப்புக் குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. சிறுவர் ஆள்சேர்ப்பை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமைப்பீடம் அங்கீகரிக்கவில்லையென்று விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உறுதியுரை வழங்கியுள்ளார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு விடுதலைப் புலிகள் 'யுனிசெவ்' அமைப்புடன் இணைந்து செயல்படுவதும் அதில் முன்னேற்றம் காணப்படுவதும் எல்லோரும் அறிந்ததே.

இது விடயமாக விடுதலைப் புலிகளுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து பணியாற்றும். எவ்வாறாயினும், தமிழ்ச் சமூகத்தின் வறுமைப்பட்ட பிரிவினரின் குழந்தைகளின் நிலைபற்றி குறிப்பிட்டாக வேண்டும். இக்குழந்தைகள் பெரும்பாலும் ஆதரவற்ற நிலைக்கு ஆளாகியுள்ளன. யுத்தத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ்க்குழந்தைகள் தான். மூர்க்கமாக யுத்தத்தை நடத்தியவர்கள், தமிழ்க்கிராமங்கள் மீது விமானக்குண்டுத் தாக்குதல் மற்றும் எறிகணைத் தாக்குதல்களை நடத்திப் பல்லாயிரக்கணக்கான தமிழ்க் குழந்தைகளை வீடிழந்தவர்களாக ஆக்கியவர்கள் மற்றும் மீண்டும் யுத்தம் வரவேண்டும் என்று விரும்புபவர்கள் இன்று தமிழ்க் குழந்தைகளாக வாதிடுவது வெறும் போலி நடிப்பாகும். சமூகத்தின் வறுமைப்பிரிவைச் சேர்ந்த குழந்தைகளின் நலன்கள், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒழுங்கு ஒன்றின்கீழ் போதுமான முறையில் கவனிக்கப்படும்போது நன்கு பேணப்படும்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் தாமதமின்றிப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படியும், அதன்மூலம் ஜூன் 10ஆம் திகதி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தூதுக்குழுவைச் சந்தித்தபோது ஜனாதிபதி தெளிவாகக் கூறிய நிலைப்பாட்டை நடைமுறைப்படுத்தும்படியும் அரசைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

சமாதான நடைமுறை முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும், மற்றும் யுத்தநிறுத்தம், நிற்கவேண்டும் என்று விரும்புகின்ற அனைத்து அரசியல்வாதிகளும் அந்த நோக்கத்தை அடைவதற்கு நல்லெண்ண உணர்வுடன் ஒருமித்துச செயற்படுவதற்கு முன்வரவேண்டும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அழுத்திக் கேட்டுக்கொள்கின்றது.

(க-3)

---

# கொள்ளைகளில் ஈடுபட்ட இருவருக்கு 14 வருடச் சிறை

## வவுனியா நீதிமன்றம் வழங்கியது

வவுனியா,செப்.9

வவுனியாவில் இடம்பெற்று வந்த பல்வேறு கொள்ளைகளுடன் தொடர்புபட்டவர்கள் எனக் கருதப்படும் இருவருக்குத் தலா 14 வருடச் சிறைத் தண்டனையும், 60 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டன.

வவுனியா நீதிவான் எம்.இளஞ்செழியன் இந்தத் தீர்ப்பை நேற்றுமுன்தினம் வழங்கினார். கடந்த ஓகஸ்ட் முதல் இந்த வருடம் மார்ச் வரையான காலத்தில் வவுனியாவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் வீடுடைப்பு, ஆயுதக் கொள்ளை போன்ற 60 சம்பவங்களில் பிரதான சூத்திரதாரிகள் இவர்கள் என நீதிமன்றில் கூறப்பட்டது.

பணம், நகைகள் எனச் சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதிக்குப் பொருள்கள் கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அவை நீதிமன்ற விசாரணையில் அடையாளம் காட்டப்பட்டன.

இச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படுகின்ற ஜோன்ஸன், விக்னேஸ்வரன் ஆகியோரும் மற்றும் மூவரும் வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலும் வைத்துக்கைது செயயப்பட்டனர். அவர்களுக்கு எதிராக முப்பது வழக்குகள் தனித்தனியாகவும், ஒன்றாகவும் பதியப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றன.

மேற்படி இருவருக்கும் எதிரான வழக்குகளில் அவர்களுக்கு மொத்தம் 32 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், விசாரணைகளின்போது அவர்கள் பொலீஸாருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியதையும், குற்றங்களை ஒப்புக்கொண்டதையும் ஏற்கனவே, அவர்கள் சிறையில் இருந்ததையும் கருத்தில்கொண்ட நீதிவான் பல்வேறு வழக்குகளின் சிறைத் தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்கப் பணித்தார்.

இதனால், அவர்கள் இருவரும் 14 வருட சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது. மற்றைய மூவருக்கு எதிரான விசாரணை 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(க-3-164)

# கடவுச்சீட்டு வழங்குவதில் புதிய பாதுகாப்பு நடைமுறை

கடவுச்சீட்டு வழங்குவதில், குடிவரவு, குடியகல்வு திணைக்களம், புதிய பாதுகாப்பு நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

போலி ஆவணங்களைக் சமர்ப்பித்து அதிகமானோர் கடவுச்சீட்டு பெறுகின்றனர். இதனைத் தடுக்கும் முகமாகவே திணைக்களம், இந்த நடவடிக்கையை அறிமுகப்படுத்தியுள்ளது என திணைக்களக் கட்டுப்பாட்டாளர் ஏ.ஜினதாச தெரிவித்தார்.

புதிய நடைமுறையின்படி, ஆவணங்களை நேரடியாக அலுவலர்களிடம் சமர்ப்பிக்க முடியாது. பரிசீலனை மற்றும் ஆராய்வு எனும் புதிய பிரிவுக்கேற்ப சமர்ப்பிக்க வேண்டும்.

இந்தப் புதிய பிரிவு, ஆவணங்களை அக்கு வேறு ஆணிவேறாகப் பரிசீலிக்கும். இதற்கென வீசேட அதிகாரிகள் பயிற்றப்பட்டுள்ளனர். 12 பேர் அடங்கிய இக்குழுவில் அதிகமானோர் திணைக்களத்தை சேராதோர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

புதிய நடைமுறையினால் கடவுச்சீட்டு வழங்குவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

எனினும், ஹஜ் கடமைக்காக மக்கா செல்லவிருப்போருக்கும் அவசியம் எனத் திணைக்களம் கருதும் சூழ்நிலையிலும் விசேட கடவுச்சீட்டு வழங்க திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என குடிவரவு, குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர் மேலும் தெரிவித்தார். (க-3-9)

# பொலீஸாரின் சோதனை

கொடிகாமம் நகரப் பகுதியில் பொலீஸாரினால் வாகன சோதனை நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

வாகனங்கள், மோட்டாார் சைக்கிள்கள் என்பன மறிக்கப்பட்டு வரி, காப்புறுதிப் பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன சோதனையிடப்படுவதுடன் மோட்டார் சைக்கிளில் செல்வோர் இரண்டு பேரும் தலைக் கவசம் அணியவேண்டும் எனவும் அணியாமல் செல்வோரும் குற்றப்பணம் செலுத்த வேண்டும் எனவும் பணிக்கப்படுகிறார்கள்.

அதேவேளை, வேகக் கட்டுப்பாடுகளை மீறுவோரும் குற்றப்பணம் செலுத்தப் பணிக்கப்படுகின்றனர். (10-74)

# காஸ் விலை அதிகரிப்புக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் அனுமதியின்றி சமையல் எரிவாயுவின் விலைகள் அதிகரிக்கப்பட்டதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருகின்றது.

மேற்படி அதிகாரசபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமலேயே ஷெல் காஸ் சிலிண்டர் ஒன்று 99ரூபாவாலும் லாப் காஸ் சிலிண்டர் ஒன்று 70 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன என அந்த அதிகாரசபை கூறுகிறது.

இந்த விலை ஏற்றங்கள் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்டவிதிமுறைகளுக்கு முரணாகவே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தியாவசியப் பொருள்பட்டியலிலுள்ள பொருள் ஒன்றின் விலையை அதிகரிப்பதாயின், நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் அனுமதி எழுத்துமூலம் கோரப்பட்டு அதற்கான பதில் 30 நாள்களுக்குள் கிடைக்காத பட்சத்திலேயே விலை உயர்வை ஒருதலைப் பட்சமாக மேற்கொள்ளமுடியும்.

எனினும், காஸ் விலை ஏற்றம் தொடர்பாக, ஷெல்காஸ் நிறுவனம் விடுத்த கோரிக்கைக்கான கால அவகாசம் இம்மாதம் 10ஆம் திகதிவரை இருக் கும்போது, அதற்கி டையில் விலை உயர் வுத் தீர்மானத்தை அந்நிறுவனம் தன் னிச்சையாக மேற் கொண்டிருப்பது சட்ட விரோதமானது என நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. அதனால அந்த நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது என மேற்படி அதிகாரசபையின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

அதேவேளை, விலையேற்றம் தொடர்பான கடிதத்தை ஜூலை 30 ஆம் திகதி நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையிடம் சமர்ப்பித்ததாகவும் அதன்படி, ஒகஸ்ட் 29 ஆம் திகதி அதற்கான கால அவகாசம் முடிந்துவிட்டதாகவும் அதன்பின்பே காஸின் விலையை உயர்த்துவது தொடர்பான தீர்மானத்தை மேற்கொண்டதாகவும் ஷெல்காஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.


## பாராட்டி வாழ்த்துகிறோம்



நேர்மையுடனும், விவேகத்துடனும் பணியாற்றி சங்கானைக் கல்விக் கோட்ட கல்வி வளர்ச்சிக்கு உரமூட்டிய சங்கானை கல்விக்கோட்ட அதிகாரி

**திரு.சி.செல்லையா**

அவர்கள் அகவை அறுபதை அடைந்து அரச சேவையிலிருந்து இன்று ஓய்வுபெறுகிறார். இவர் ஆற்றிய கல்விப்பணிகளை நன்றியுடன் நினைத்துப் பாராட்டுவதுடன் இவர் தமது ஓயவுக்காலத்தில் தேக ஆரோக்கியத்துடனும் மன மகிழ்வுடனும் வாழ வழக்கம்பரை அம்மனை வழுத்துகின்றோம்.

திரு.கா.நடராசா (முன்னாள் அதிபர், யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.)
திருமதி க.மகாதேவன் (யா/வைத்தீஸ்வராக் கல்லூரி)
செல்வி வா.கேதீஸ்வரி (யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.)

பண்ணாகம்,
சுழிபுரம்.

(சி-37527)



## பொன்விழா வாழ்த்து

இன்று (09.09.2004) வியாழக்கிழமை தமது ஐம்பதாவது ஆண்டு திருமண நிறைவு நாளைக் கொண்டாடும்



**திரு. திருமதி செல்வத்துரை சரஸ்வதி**

சிறுப்பிட்டி எனும் சிறு பூமிதனில்
நல் மக்கள் இருவரைப் பெற்று
அன்புப் பேரர்களைக் கண்டின்புற்று
நற் சமுதாய சேவையும் செய்து
நலமுடன் வாழும் இத்தம்பதிகள்
என்றும் வளமுடன் நூறாண்டு வாழ்க!

தகவல்:
திருமதி த.ராஜினி,
நுணாவில் மேற்கு, நுணாவில்.

வாழ்த்துவோர்:
சகோதரர், மக்கள், மருமகள், பேரப்பிள்ளைகள்.

(36170)(42-14-16-32)



வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து)

**திக்கம் வடிசாலை சுற்றுப்புற மதில் கட்டுவதற்கு கூலிக்கான கேள்வி**

அல்வாயில் உள்ள திக்கம் வடிசாலையின் தெற்குப்புறம் அத்திபாரம் இடப்பட்ட நிலையில் உள்ள 100அடி நீள மதில் 7 1/2 அடி உயரத்தில் கட்டுவதற்குக் கூலிக்கு மட்டும் கூறுவிலை கோரப்படுகிறது. விண்ணப்பப்பத்திரங்களை வடிசாலையிலுள்ள அலுவலகத்தில் ரூபா 10 செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.

விண்ணப்பங்கள் யாவும் 18.09.2004ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலதிக விளக்கங்களை வடிசாலையின் வேலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பொதுமுகாமையாளர்,**
**வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம் (வ.து),**
**52, சோமசுந்தரம் ஒழுங்கை,**
**சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.** (சி.37525)(39-14-16-32)



வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து).

**லொறி திருத்தம் செய்வதற்கான கூறுவிலை கோரல்**

எமது சமாசத்திற்குச் சொந்தமான 26-5387 இலக்கம் கொண்ட **B.M.C.** லொறி திருத்தம் செய்வதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

1. முகப்பு ரிங்கர் வேலை
2. உடற்கோப்பு மறுசீரமைப்பு செய்தல்
    1. தளபாடம் கூலியுடன் மொத்தச் செலவு
    2. தளபாடம் இல்லாமல் கூலி மட்டும்
3. மின் இணைப்பு
4. வர்ணம் பூசுதல்
5. எழுத்துவேலை

மேற்படி வேலைகளுக்கான கூறுவிலையை 20.09.2004ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு *பொது முகாமையாளர், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இல. 52, சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

அலுவலக நேரத்தில் வாகனத்தைப் பார்வையிடலாம்.

**- பொதுமுகாமையாளர்.**

(C/37526)(42-14-16-32)



# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.06.2003இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் யா/ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | பின்வரும் திகதிகளுக்கு முன்பு அடகு வைத்த நகைகள் | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|---|
| 01 | யாழ்.பிரதான வீதி - 104 | 30.06.2003 | 02.10.2004, | மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
| 02 | நெல்லியடி - 106 | 30.06.2003 | 03.10.2004,<br>04.10.2004, | |
| 03 | யாழ்.ஸ்ரான்லி வீதி - 030 | 30.06.2003 | 09.10.2004, | மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
| 04 | சங்கானை - 108 | 30.06.2003 | 10.10.2004,<br>11.10.2004, | |
| 05 | சாவகச்சேரி - 110 | 30.06.2003 | 16.10.2004, | மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
| 06 | வல்வெட்டித்துறை - 141 | 30.06.2003 | 17.10.2004,<br>18.10.2004,<br>19.10.2004,<br>20.10.2004 | |
| 07 | சுன்னாகம் - 109 | 30.06.2003 | 23.10.2004, | மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
| 08 | பருத்தித்துறை - 285 | 30.06.2003 | 24.10.2004, | |
| 09 | யாழ்.பல்கலைக்கழகம் - 162 | 30.06.2003 | 25.10.2004, | மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
| 10 | யாழ்.கன்னாதிட்டி - 284 | 30.06.2003 | 26.10.2004,<br>27.10.2004. | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**யாழ்ப்பாணம் / வன்னி.**

(C/37507)(42-14-16-32)

# தமிழீழ மீட்புநிதி மீளப்பெறுவோர் விவரம் - 2004

யாழ்ப்பாணம், செப்.8

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளப்பெறுவோரில் நல்லூர் (ஒரு தொகுதி) உதவி அரச அதிபர் பிரிவில் தெரிவானோர் விவரம் வருமாறு:-

## நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு

ந/ 110 திரு. நாகமுத்து முத்துக்குமாரு
ந/ 156 திரு. சுப்பையா தியாகராஜா
ந/ 184 திரு. நா.சிவகுரு நடராசா
ந/ 301 திரு. கந்தையா விநாயகமூர்த்தி
ந/ 532 திரு. அம்பலவாணர் செல்வரட்ணம்
ந/ 577 திருமதி. அரியநாகேஸ்வரி கிருஷ்ணபிள்ளை
ந/ 586 திரு. துரையப்பா நடராசா
ந/ 592 திரு. சண்முகம் விஜெயரத்தினம்
ந/ 594 திரு. பாலகிருஷ்ணன் முத்துக்குமாரு
ந/ 611 திரு. செல்லப்பா சுப்பிரமணியம்
ந/ 705 திரு. ஐயாத்துரை கயிலாயநாதன்
ந/ 726 திரு. மாணிக்கவேல் மகேசரெட்ணம்
ந/ 831 திரு. சின்னத்தம்பர் சிவபாதசுந்தரம்
ந/ 835 திரு. சீவரெட்ணம் உதயகுமார்
ந/ 846 செல்வன். சின்னராசா சண்முகானந்தன்
ந/ 858 திரு. முருகேசு சோமசுந்தரம்
ந/ 946 திரு. விசுவநாதி கந்தையா
ந/ 1055 திரு. கந்தையா சபாபதிப்பிள்ளை
ந/ 1056 திருமதி. ஜெயரஞ்சிதம் சிவலிங்கம்
ந/ 1104 திருமதி. தெய்வநாயகி சுந்தரலிங்கம்
ந/ 1159 திரு. சின்னப்பா கார்த்திகேசு
ந/ 1200 திரு. நல்லதம்பி விசுவநாதபிள்ளை
ந/ 1208 திரு. வல்லிபுரம் பேரம்பலம்
ந/ 1226 திரு. ஆ.சரவணமுத்து இராஜேந்திரம்
ந/ 1263 திருமதி. சவுந்தரம் விஜயரத்தினம்
ந/ 1346 திரு. கணபதி சிவலிங்கம்
ந/ 1359 திரு. கார்த்திகேசு தருமலிங்கம்
ந/ 1408 திரு. சிவராஜா சிவஜீவன்
ந/ 1464 திரு. பொன்னம்பலம் பொன்னுத்துரை
ந/ 1487 திரு. சீவரத்தினம் தாமோதரம்பிள்ளை
ந/ 1506 திரு. கந்தையா கணபதிப்பிள்ளை
ந/ 1548 திரு. செல்லையா திருநாவுக்கரசு
ந/ 1621 திரு. செல்லையாஐயர் மகேஸ்வரக்குருக்கள்
ந/ 1669 திரு. பொன்னம்பலம் சேனாதிராசா
ந/ 1686 திரு. கந்தையா செல்லையா
ந/ 1700 திரு. பொன்னர் செல்லையா
ந/ 1705 திரு. கந்தையா செல்லத்துரை
ந/ 1727 திரு. சின்னத்தம்பி தம்பிஐயா
ந/ 1746 திரு. வேலுப்பிள்ளை அரியரத்தினம்
ந/ 1847 திருமதி. அமிர்தம் துரையப்பா
ந/ 1884 திரு. சின்னத்தம்பி காராளசிங்கம்
ந/ 1955 திரு. கந்தையா வைத்திலிங்கம் நவரட்ணம்
ந/ 1986 திருமதி. புனிதவதி கணேசலிங்கம்
ந/ 1992 திரு. பொன்னையா இரத்தினம்
ந/ 2036 திரு. தம்பி சிவராசா
ந/ 2040 திரு. சின்னத்தம்பி சிவசம்பு
ந/ 2191 திரு. நடராசா மகேஸ்வரன்
ந/ 2227 திரு. முருகேசு நடராசா
ந/ 2306 திரு. சுப்பையா வரதராஜேஸ்வரமுதலி
ந/ 2373 திரு. பாவிலு தேவசகாயம்பிள்ளை
ந/ 2385 திரு. முருகேசு விசுவலிங்கம்
ந/ 2453 திரு. சண்முகானந்தம் சிறிவிவேகானந்தராசா
ந/ 2456 திரு. கனகசபை சிவராமலிங்கம்
ந/ 2561 திருமதி. அன்னலட்சுமி ஜெகநாதன்
ந/ 2667 திரு. உலகநாதன் இராசசுப்பையா
ந/ 2696 திரு. ஐயாத்துரை சின்னத்துரை
ந/ 2735 திரு. குமாரசுவாமி சதாசிவம்
ந/ 2829 திரு. சபாரத்தினம் அருளம்பலம்
ந/ 2878 திருமதி. நவரத்தினம்மா முத்தையா
ந/ 3159 திரு. பொன்னையா நடராசா
ந/ 3252 திரு. பொன்னம்பலம் செல்வரத்தினம்
ந/ 3258 திருமதி. சுரேந்தினி பாலகிருஷ்ணன்
ந/ 3286 திரு. சுந்தரம் சுப்பிரமணியம்
ந/ 3355 திரு. விசுவலிங்கம் திலகராயர்
ந/ 3357 திரு. இரத்தினசபாபதி தவபாலன்
ந/ 3388 திரு. வயித்தியநாதர் ஐயம்பிள்ளை

அம்பலவாணர்

ந/ 3409 திரு. மாணிக்கம் கந்தையா
ந/ 3448 திருமதி. விக்கினேஸ்வரி தம்பித்துரை
ந/ 3520 திருமதி. மனோன்மணி ஞானரட்ணம்
ந/ 3532 செல்வன். கோபாலகிருஷ்ணபிள்ளை

தவலிங்கம்

ந/ 3625 திருமதி. செல்வராணி பொன்னுத்துரை
ந/ 3693 திருமதி. அழகம்மா முருகையா
ந/ 3716 திரு. நாகமுத்து இராசையா
ந/ 3750 திரு. செல்லையா சுரேந்திரன்

நர்ச்சினார்க்கினியன்

ந/ 3777 திரு. செல்லத்தம்பி சீவரத்தினம்
ந/ 3788 திரு. சின்னத்துரை கனகரத்தினம்
ந/ 3810 செல்வி. ஜெகதீஸ்வரி அழகரெட்ணம்
ந/ 3825 திரு. சபாபதிப்பிள்ளை பொன்னுத்துரை
ந/ 3839 திரு. செல்லத்துரை இராசையா
ந/ 3846 திரு. கந்தையா நல்லையா
ந/ 3891 திரு. வேலுப்பிள்ளை பொன்னுத்துரை
ந/ 3931 திரு. செல்லையா கனகரத்தினம்
ந/ 3966 திரு. இராமசுவாமி ராஜேஸ்வரன்
ந/ 3976 திரு. சதாசிவம் சிவனடியார்
ந/ 3992 திரு. சரவணமுத்து சுப்பிரமணியம்
ந/ 4058 திரு. தம்பிப்பிள்ளை கனகரத்தினம்
ந/ 4124 திரு. வைரமுத்து முதலித்தம்பி
ந/ 4160 திரு. துரையப்பா சிவராசா
ந/ 4161 திரு. நாகமுத்து சபாரெத்தினம்
ந/ 4191 திருமதி. அன்னப்பிள்ளை சுந்தரம்பிள்ளை
ந/ 4247 திரு. வேலாயுதர் தம்பிஐயா
ந/ 4284 திரு. நாகமணி சிவராமன்
ந/ 4326 திரு. கனகரத்தினம் இராசேந்திரா
ந/ 4349 திருமதி. தங்கம்மா பொன்னுத்துரை
ந/ 4372 திருமதி. சித்திரா திருக்கமலநாதன்
ந/ 4383 திருமதி. வசந்தாதேவி மனோகரன்
ந/ 4393 திரு. சின்னப்பு வல்லிபுரம்
ந/ 4417 திரு. நடராசா மயில்வாகனம்
ந/ 4439 திருமதி. அன்னசோதி சோமசுந்தரம்
ந/ 4467 திரு. பாலசற்குணம் குணபாலன்
ந/ 4478 திருமதி. நித்தியானந்தபூபதி சண்முகலிங்கம்
ந/ 4514 திரு. நாகலிங்கம் பாலகுமாரன்
ந/ 4544 திரு. அம்பலவாணர் மயில்வாகனம்
ந/ 4684 திரு. சிவசிதம்பரம்பிள்ளை சதாசிவம்பிள்ளை
ந/ 4693 திருமதி. திலகவதி இராசரத்தினம்
ந/ 4718 திரு. ஐயாம்பிள்ளை ஆறுமுகம் கந்தையா
ந/ 4719 திரு. செல்லத்துரை கனகரெத்தினம்
ந/ 4765 திரு. சபாபதி வேலாயுதபிள்ளை
ந/ 4766 திருமதி. தங்கம்மா சோமசுந்தரம்
ந/ 4770 திரு. என்றிஜெகோவரட்னம் உலகசேகரம்
ந/ 4830 திரு. முத்துக்குமாரு இரத்தினசிங்கம்
ந/ 4894 திருமதி. கனகரஞ்சிதம் வைத்திலிங்கம்
ந/ 4911 திரு. சுப்பையா அழகரத்தினம்
ந/ 4916 திரு. செல்லப்பா சின்னத்தம்பி
ந/ 5018 திரு. சதாசிவம் சிவதாசன்
ந/ 5092 திரு. சரவணமுத்து தனபாலசிங்கம்
ந/ 5106 திரு. கந்தையா செல்வத்துரை
ந/ 5109 திரு. அப்பாத்துரை கைலாயபிள்ளை
ந/ 5165 திரு. இரத்தினசிங்கம் துரைவீரசிங்கம்
ந/ 5193 திரு. வேலுப்பிள்ளை இரத்தினசபாபதி
ந/ 5236 திரு. கதிரவேலு செல்வரத்தினம்
ந/ 5295 திரு. அப்பையா கந்தையா
ந/ 5304 திரு. வயிரமுத்து சின்னத்துரை
ந/ 5325 திரு. சின்னத்துரை திருவிளங்கம்
ந/ 5328 திரு. பொன்னையா குமாரசாமி
ந/ 5352 செல்வி. சுதா குமாரசாமி
ந/ 5378 திருமதி. சிவபாக்கியம் இராசதுரை
ந/ 5387 திருமதி. நாகம்மா தில்லையம்பலம்
ந/ 5389 திரு. கதிர்காமு கணபதிப்பிள்ளை
ந/ 5425 திரு. சிவஞானம் சிவக்கொழுந்து
ந/ 5472 திரு. இராசா குமாரசாமி
ந/ 5520 திருமதி. லீலாலோகேஸ்வரி குமாரகுலசிங்கம்
ந/ 5533 திரு. கதிர்காமர் சுப்பிரமணியம்
ந/ 5537 திரு. சபாபதி மார்க்கண்டு
ந/ 5541 திரு. சுப்பையா ஆறுமுகம்
ந/ 5557 திருமதி. நவரத்தினம்மா சிவஞானம்
ந/ 5743 திரு. சின்னத்தம்பி திருவிளங்கம்
ந/ 5762 திரு. கனகசபை சின்னத்துரை
ந/ 5773 திரு. அப்பாப்பிள்ளை சபாரத்தினம்
ந/ 5788 திரு. கந்தையா இராசையா
ந/ 5817 திரு. ஆசீர்வாதம் லூத்தையா
ந/ 5871 செல்வி. சூரியகுமாரி கந்தையா
ந/ 5911 திரு. கந்தையா அசோகன்
ந/ 5922 திரு. சண்முகம் சோமசுந்தரம்
ந/ 5937 திருமதி. இந்திராதேவி பாலசிங்கம்
ந/ 5966 திரு. சரவணமுத்து நல்லையா
ந/ 6030 திரு. சிதம்பரப்பிள்ளை செல்லத்துரை
ந/ 6075 திருமதி. நல்லம்மா முருகேசு
ந/ 6233 திருமதி. செல்லம்மா அருணாசலம்
ந/ 6239 திரு. வேலுப்பிள்ளை கந்தையா
ந/ 6241 திரு. சின்னப்பு தம்பிராசா
ந/ 6278 திரு. நன்னி சிங்கராசா
ந/ 6300 திரு. சின்னப்பொடி செல்லையா
ந/ 6315 திருமதி. இராசமணி இராசையா
ந/ 6321 திரு. தம்பு கனகசபை
ந/ 6332 திரு. பொன்னுத்துரை சோமசுந்தரம்
ந/ 6451 திருமதி. இரத்தினம் குமாரசாமி
ந/ 6472 திரு. கணபதிப்பிள்ளை இளையதம்பி
ந/ 6481 திரு. வேலாயுதம் சரவணமுத்து
ந/ 6484 திரு. நடராசா ஸ்ரீசோமசேகரம்
ந/ 6512 திருமதி. சறோஜினிதேவி மரியதாஸ்
ந/ 6515 திருமதி. பாலநாகம்மா குமாரசாமி
ந/ 6519 திருமதி. பூரணம் பொன்னம்பலம்
ந/ 6530 செல்வி. றெனி மனுவல்ப்பிள்ளை
ந/ 6549 திரு. சின்னத்தம்பி ரகுலேந்திரன்
ந/ 6554 திருமதி. சறோஜினிதேவி குகேஸ்வரராஜா
ந/ 6686 திருமதி. தர்மலதா சத்தியானந்தன்
ந/ 6744 திரு. சின்னையா சந்திரசேகரம்
ந/ 6747 திரு. இரத்தினசிங்கம் சேனாதிராசா
ந/ 6806 திருமதி. ஈஸ்வரி சிவகுரு
ந/ 6816 திரு. செல்லத்துரை பாலச்சந்திரன்
ந/ 6879 திருமதி. சியாமளேஸ்வரி ஜெகநாதக்குருக்கள்
ந/ 6880 திருமதி. பேள்செல்வமணி தம்பியப்பா
ந/ 6919 திரு. பொன்னம்பலம் அமரசிங்கம்
ந/ 6920 திரு. வைரவி டானியல்
ந/ 6922 திரு. ஆழ்வாப்பிள்ளை சண்முகம்
ந/ 6979 திருமதி. செல்வராணி கிருஷ்ணபிள்ளை
ந/ 6988 திருமதி. முத்தம்மா இராமசாமி
ந/ 7082 திரு. கோவிந்தபிள்ளை கந்தையா
ந/ 7089 திருமதி. சாந்தி வரவேஸ்வரன்
ந/ 7105 திரு. பிறெற்றிக் நோயல் ஏபிரகாம்
ந/ 7129 திருமதி. இராசம்மா செல்லத்துரை
ந/ 7134 திரு. ஜோன்பிள்ளை இரவீந்திரகுமார்
ந/ 7155 திருமதி. சுகிர்தரத்தினம் கந்தையா
ந/ 7168 திரு. வல்லிபுரம் சத்துருசிங்கம்
ந/ 7180 திரு. தம்பிப்பிள்ளை ஆறுமுகம்
ந/ 7204 திரு. சுந்தரராஜா பாலசுப்பிரமணியம்
ந/ 7210 திரு. கிருஷ்ணர் குமாரசாமி
ந/ 7218 திருமதி. இரத்தினம் ஆறுமுகம்
ந/ 7269 திரு. சின்னப்பு சூசைப்பிள்ளை
ந/ 7272 திரு. சவரிமுத்து ஜேம்ஸ்
ந/ 7308 திரு. ஆதர்கணேசபிள்ளை ஜோசப்
ந/ 7319 திரு. செல்லத்துரை பஞ்சாட்சரம்
ந/ 7360 திருமதி. சுமதி தெய்வேந்திரன்
ந/ 7367 செல்வி. சுகந்தி தியாகராஜா
ந/ 7520 திரு. சுவாம்பிள்ளை மார்க்கண்டு
ந/ 7528 திரு. காசிப்பிள்ளை சத்தியதீசன்
ந/ 7581 திரு. நாகலிங்கம் கந்தசாமி
ந/ 7585 திரு. ஆறுமுகம் அருளானந்தம்
ந/ 7607 திருமதி. பூரணம் செல்லப்பா
ந/ 7626 திரு. இரத்தினம் குமாரதாஸ்
ந/ 7634 திருமதி. பூபதி சிற்றம்பலம்
ந/ 7660 திருமதி. அருளம்மா கந்தசாமி
ந/ 7668 திரு. கந்தையா சண்முகராசா
ந/ 7672 திரு. இரத்தினம் சிவநாதன்
ந/ 7737 திரு. வைரவநாதன் கந்தசாமி
ந/ 7852 திரு. வில்வரசரட்ணம் சுப்பையாஸ்ரீபன்
ந/ 7853 திருமதி. மேரி கனகசுந்தரம்
ந/ 7863 திரு. செல்லப்பா கனகரட்ணம்
ந/ 7873 திருமதி. தங்கலட்சுமி இராசையா
ந/ 7904 திரு. நாகமணி நடராசா
ந/ 7932 திருமதி. பரமேஸ்வரி தம்பிப்பிள்ளை
ந/ 8017 திரு. செபஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
ந/ 8022 திருமதி. சிவபாக்கியவல்லி நடராஜா
ந/ 8030 திருமதி. பாறுபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை
ந/ 8055 திருமதி. கனகம்மா அரசரத்தினம்
ந/ 8081 திருமதி. செல்லம்மா சோமசுந்தரம்
ந/ 8128 திரு. லோறன்ஸ்பிலிப் அலோசியஸ்
ந/ 8199 திரு. செல்லப்பா தில்லையம்பலம்
ந/ 8211 திருமதி. சிவகாமிப்பிள்ளை வைரவநாதன்
ந/ 8214 திருமதி. செல்லம்மா கந்தையா
ந/ 8240 திரு. சின்னத்தம்பி நவரெத்தினம்
ந/ 8251 திரு. சுப்பிரமணியம் முருகேசு
ந/ 8275 திரு. சபாரத்தினம் தியாகராஜா
ந/ 8336 திரு. பொன்னையா விநாயகமூர்த்தி
ந/ 8359 திரு. சின்னர் சுப்பிரமணியம்
ந/ 8377 திரு. கனகசபை ஜெகநாதன்
ந/ 8381 திருமதி. நாகரெத்தினம் மயில்வாகனம
ந/ 8395 திருமதி. பூமணி இராசேந்திரம்
ந/ 8415 திரு. கந்தர் சின்னத்தம்பி
ந/ 8495 திரு. சுப்பிரமணியம் சண்முகராசா
ந/ 8520 திருமதி. தவமணி கதிரவேல்
ந/ 8542 திரு. சின்னப்பு கந்தையா
ந/ 8555 திருமதி. இராசம்மா சின்னத்துரை
ந/ 8606 திருமதி. இராசலட்சுமி பத்மநாதன்
ந/ 8633 திருமதி. கமலாம்பிகை பரமநாதன்
ந/ 8640 திருமதி. செல்வமணி சுப்பிரமணியம்
ந/ 8680 திருமதி. வரதலட்சுமி சோமசூரியசிங்கம்
ந/ 8739 திரு. நாகமணி கார்த்திகேசு
ந/ 8748 திருமதி. பாக்கியம் மதியாபரணம்
ந/ 8781 திருமதி. ராஜேஸ்வரி சுந்தரலிங்கம்
ந/ 8783 திருமதி. தெய்வானைப்பிள்ளை நடேசு
ந/ 8798 திரு. சரவணமுத்து செல்லத்துரை
ந/ 8830 திரு. சின்னப்பொடி அப்புக்குட்டி
ந/ 8925 திருமதி. நல்லம்மா நடராஜா
ந/ 8951 திரு. வைரமுத்து நாகலிங்கம்
ந/ 8971 திருமதி. தங்கம்மா சபாபதி இராசா
ந/ 8984 திரு. வயிரமுத்து தருமலிங்கம்
ந/ 8996 திருமதி. தங்கம்மா செல்லையா
ந/ 9025 திருமதி. கனகாம்பிகை முருகையா
ந/ 9033 திருமதி. பத்மாதேவி கோபாலகிருஷ்ணன்
ந/ 9095 திருமதி. ஈஸ்வரி நடராஜா
ந/ 9115 திரு. முத்து நடேசு
ந/ 9184 திருமதி. ஜெயராணி தங்கராஜா
ந/ 9205 திருமதி. சிகாமணி சுப்பையா
ந/ 9230 திருமதி. இராசம்மா சதாசிவம்
ந/ 9284 திருமதி. அன்னம் நடராஜா
ந/ 9285 திரு. சபாபதி தனபாலசிங்கம்
ந/ 9290 திரு. இராசையா சின்னராசா
ந/ 9300 திரு. வல்லிபுரம் பரமலிங்கம்
ந/ 9313 திரு. வேலுப்பிள்ளை தம்பு
ந/ 9315 செல்வி. மகேஸ்வரி தம்பிமுத்து
ந/ 9320 திருமதி. ஈஸ்வரி சபாரட்ணம்
ந/ 9330 திருமதி. விஜயகுமாரி இரட்ணநாதன்
ந/ 9362 திருமதி. தெய்வானைபிள்ளை கோவிந்தபிள்ளை
ந/ 9398 திரு. கந்தர் பொன்னையா
ந/ 9445 திரு. பஸ்தியாம்பிள்ளை மரியாம்பிள்ளை
ந/ 9477 திரு. கந்தையா கதிரவேலு
ந/ 9506 திரு. கோவிந்தர் பொன்னுத்துரை
ந/ 9518 திரு. செல்லத்துரை செல்லையா
ந/ 9532 திரு. கந்தையா அரியகுட்டி
ந/ 9537 திரு. கணபதிப்பிள்ளை கந்தையா
ந/ 9583 திரு. கந்தசாமி புஸ்பராசா
ந/ 9620 திரு. செல்லையா இராசதுரை
ந/ 9657 திருமதி. இராசம்மா வேலுப்பிள்ளை
ந/ 9663 திரு. நாகமுத்து கணபதிப்பிள்ளை
ந/ 9679 திரு. சிதம்பரப்பிள்ளை செல்லையா
ந/ 9701 திருமதி. செல்லம் சிவசுப்பிரமணியம்
ந/ 9703 திரு. தாமோதரம்பிள்ளை மயில்வாகனம்
ந/ 9718 திருமதி. சின்னத்தங்கச்சி துரைச்சாமி
ந/ 9719 திரு. சரவணமுத்து நடராசா
ந/ 9724 திரு. ஆறுப்பிள்ளை சின்னத்துரை
ந/ 9801 திரு. வல்லிபுரம் கந்தையா
ந/ 9807 திருமதி. இராசமலர் நவரத்தினம்
ந/ 9811 திருமதி. புவனேஸ்வரி கனகசபாபதி
ந/ 9824 திருமதி. நல்லம்மா செல்லையா
ந/ 9842 திருமதி. சரஸ்வதி பேரின்பநாயகம்
ந/ 9877 திருமதி. நாகம்மா வேலாயுதபிள்ளை
ந/ 9884 திரு. கந்தையா சின்னராசா
ந/ 9922 திருமதி. சரஸ்வதி நாகலிங்கம்
ந/ 9927 திரு. சிதம்பரநாதன் சிவநாதன்
ந/ 9940 திரு. இராமுப்பிள்ளை பொன்னையா
ந/ 10039 திரு. சபாபதி தம்பித்துரை
ந/ 10048 திருமதி. வள்ளியம்மா நாகலிங்கம்
ந/ 10078 திருமதி. அன்னலெட்சுமி நாகராசா
ந/ 10092 செல்வி. லீலாவதி சுப்பிரமணியம்
ந/ 10094 செல்வி. வசந்தகுமாரி சண்முகராசா
ந/ 10105 திருமதி. மகேஸ்வரி விசுவலிங்கம்
ந/ 10134 திரு. நாகலிங்கம் சிவபாலமூர்த்தி
ந/ 10155 திரு. நீக்கிலாப்பிள்ளை பொன்னையா
ந/ 10192 திரு. மயில்வாகனம் சுப்பையா
ந/ 10219 திரு. சபாபதி செல்லப்பா
ந/ 10320 திரு. தம்பு சபாரத்தினம்
ந/ 10373 திருமதி. சிவபாக்கியம் வேலுப்பிள்ளை
ந/ 10405 திரு. மார்க்கண்டு சின்னத்தம்பி
ந/ 10420 திரு. சின்னையா தம்பிமுத்து
ந/ 10429 திரு. இளையதம்பி வைத்திலிங்கம்
ந/ 10432 திரு. அம்பலவாணர் இரட்ணசபாபதி

ஆறுமுகம்

ந/ 10435 திருமதி. சவுந்தரவல்லி சோமசுந்தரம்
ந/ 10439 திரு. தம்பிமுத்து சச்சிதானந்தம்
ந/ 10461 திருமதி. நாகரத்தினம் செல்லையா
ந/ 10490 திரு. இராமசாமி தவேந்திரன்
ந/ 10514 திரு. இளையவர் ஆசைப்பிள்ளை
ந/ 10515 செல்வி. ராஜி நாகேந்திரா

(வளரும்)

# மழைக்கு முன் கழிவுகளை அகற்றி நோய்களைத் தடுக்க முன்வாருங்கள்!

சண்டை முடிந்துவிட்டதா? முடியவில்லையா? சமாதானம் வந்துவிட்டதா? வரவில்லையா? சண்டைவருமா? வரமாட்டாதா? இவையெல்லாம் பொதுமக்களுக்குத் தெரியவும் இல்லை; தெரியவும்மாட்டாது.

ஆனால் நோய்வரும். அதனை வரமுன் தடுக்கவேண்டும். இல்லையேல் துன்பப்படப் போவது நாங்களே. இது அனைத்து மக்களுக்கும் தெரியும்.

இதனால், நோய்கள் வரமுன் தடுக்கவேணடும். நோய்பரவும் முன் கட்டுப்படுத்தவேண்டும். இவையாவும் அ;னைத்து மக்களுக்கும் நன்கு தெரியும்; நன்குபுரியும்.

யாழ். குடாநாட்டில் மழைகாலம் ஆரம்பிப்பதற்கு இன்னும் கொஞ்ச நாள்களே உள்ளன. ஆனால், சுற்றுச்சூழல் சுகாதார நிலையோ மிகவும் மோசமாகக் காணப்படுகின்றது.

கழிவுநீர் செல்வதற்காக கட்டப்பட்ட வாய்ககால்கள் பலவும் கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தத்தினால் அழிக்கப்பட்டுள்ளன.

யுத்தத்தைக் காரணங்காட்டி பெரும்பகுதி வாய்க்கால்கள் சுயநலத்திற்காக அழிக்கப்பட்டுள்ளன. இதுதவிர, வாய்க்கால்கள் அத்துமீறி ஆக்கிரமிக்கப்பட்டு அவற்றின் மேல் கட்டடங்கள் கட்டப்பட்டு கழிவுநீர் செல்ல முடியாத அளவுக்கு அடைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகரசபைப் பகுதிக்குள் இந்த நிலைமை மிகவும் மோசமாகக் காணப்படுகிறது.

அத்துமீறி ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குளங்கள் சம்பந்தமாக நல்லூர், யாழ்ப்பாண பிரதேச செயலாளர்களுக்கு மாநகர ஆணையாளர் கடிதம் அனுப்பியுள்ளார் என்று தெரிகிறது.

இந்த இரண்டு பிரதேச செயலகங்களிலும் தற்போதைய மாநகர ஆணையாளர் முன்னர் பிரதேச செயலராகக் கடமையாற்றியிருந்தார்.

கழிவு வாய்க்கால்கள்மேல் கட்டப்பட்ட கட்டடங்களை அகற்ற நடவடிக்கை எடுப்பதுடன், அடைபட்டுள்ள வாய்க்கால்களைத் திறந்துவிடவேண்டும். இல்லையேல், மழைகாலத்தில் மக்கள் பல்வேறு நோய்களின் தாக்கங்களுக்கு உள்ளாவதுடன், வெள்ளம் ஓட முடியாமல் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயரவேண்டிய அவல நிலைமையும் ஏற்படலாம்.

இதுமட்டுமல்ல, சந்திக்குச் சந்தி கொட்டப்பட்டு அகற்றப்படாமல் இருக்கும் குப்பை மேடுகள் அகற்றப்படல்வேண்டும்.

பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனை சுற்றுச்சூழலுக்குத் தீங்கு ஏற்படுத்துகிறது என்பதை உணர்ந்து தேசியத் தலைமை சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஏனையோர் அதை ஏற்றுக்கொள்வது போன்று வெறும் அறிக்கையிட்டால் மட்டும்போதாது.

**வில்லவன்**

தேசியத் தலைமையின் கொள்கையை ஏற்று செயற்படுத்துவதாக இருத்தல் மனத்தூய்மையுடன் அவற்றை ஏற்று உயர் அதிகாரிகளும் செயற்படவேண்டும்.

ஆகவே, மழைக்கு முன்னர் வீதிக்கு வீதி குப்பை மேடுகளாகக் குவிந்துள்ள குப்பைகள் யாவும் அகற்றப்படுவதுடன், தொடர்ந்து குப்பைகள் பொது இடங்களிலும், மக்கள் நடமாடும் வீதிகளிலும் கொட்டப்படுவதைத் தடுககவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல், அடுத்துவரும் மழைகாலத்தில் பல்வேறு நோய்களுக்கும் மக்கள் முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே காணப்படும்.

வருமுன் காப்போனாக இருக்கவேண்டிய அவசியமும் அவசரமும் பொதுமக்களுக்கு இருககிறது. காரணம், யாழ். குடாநாட்டின் மருத்துவசேவையின் மகிமையும் கூட அந்தளவுக்குச் சென்றுள்ளது.

அண்மையில் லண்டனில் இருந்துவந்த ஒருவருக்கு அடுத்தநாள் காய்ச்சல் ஏற்பட்டது. அவரை தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பல்வேறு பரிசோதனைகளும் செய்யப்பட்டு நெருப்புக்காய்ச்சல் என அறிக்கை பெறப்பட்டது.

ஆனால், அதற்கு மறுத்த உறவினர்கள் நோயாளியை வீட்டுக்குக் கொண்டுவந்து விட்டுவிட்டனர். அடுத்தநாள் காய்ச்சல் மாறிவிட்டது. ஆனாலும், பயம் காரணமாக யாழ்நகரில் வேறு ஒரு தனியார் வைத்தியசாலையில் பரிசோதனை செய்யப்பட்டபோது அவருக்கு எந்த நோயும் இல்லை என்பதும் பிரயாணம் செய்தமையால் ஏற்பட்ட உடல்நோ காரணமாக வந்த காய்ச்சல் எனக் கூறப்பட்டது.

இந்நோயாளியை அரச வைத்தியசாலைககுக் கொண்டுசென்றிருந்தால் எயிட்ஸ் நோயாளி எனக்கருதியும் கூட சிகிச்சை அளிககப்பட்டு இருக்கும். இதனைக் கூட ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இங்கு நோய்க்கான மருந்து என்பது சூழலை மையப்படுத்தியே வழங்கப்படுகின்றது. நோயாளிகள் தெரிந்தோ, தெரியாமலோ மரணம் அடைந்துவிட்டால் செப்ரீமியா எனக்கூறி மருத்துவசேவை தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்ளும் நிலைமையே இன்று யாழ். குடாநாட்டில் காணப்படுகிறது.

ஆகவே, மழைகாலத்திற்கு முன்னர் யாழ். குடாநாட்டில் நீர்தேங்கும் இடங்களில் நோய் பரவாமலும், நீர் தேங்கவிடாமல் தடுக்கவும் வேண்டும். கழிவுப் பொருள்களை மக்கள் நடமாடும பொதுஇடங்களில் தேங்கவிடாமல் அகறற நடவடிக்கைஎடுத்து பொதுமக்களை நோய்களில் இருந்து காப்பாற்றவேண்டியது இம்மண்ணில் உள்ள அனைவரதும் கடமையாகும். ★




# மந்திகை கிளினிக்குக்கு வரும் நீரிழிவு நோயாளரின் ஆதங்கம்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வாரந்தோறும் நடக்கும் நீரிழிவுநோய் சிகிச்சைக்கு நூற்றுக்கு மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சைபெற வருகின்றனர். வடமராட்சியின் பிரதான கேந்திரமாக விளங்கும் இவ் வைத்தியசாலைக்குத் தினமும் அதிக எண்ணிக்கையான வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருவது யாவரும் அறிந்ததே. இங்கு வடமராட்சி கிழக்கு, அம்பன், குடத்தனை, பருத்தித்துறை, நெல்லியடி, தொண்டைமானாறு, கரவெட்டி, துன்னாலை, வரணி, கப்பூது, மந்துவில், கொடிகாமம் மற்றும் பல பிரதேசங்களில் இருந்தும் இவ்வைத்தியசாலைக்கு நோயாளிகள் சிகிச்சை பெறவருகின்றனர். நீரிழிவு சிகிச்சைக்கு வாரந்தோறும் வரும் சனிக்கிழமைகளில் சராசரி 150 இற்கு மேற்பட்ட நோயாளிகள் வருகின்றனர். இவர்கள் காலை 8 மணிக்கு முன்பே இங்கு வந்து சிகிச்சைப் புத்தகங்களைக் கருமபீடத்தில் கொடுத்து இலக்கத்துண்டையும் பெற்றுக் கொணடு பின்பு சலப் பரிசோதனை என்பவற்றை முடித்துக்கொண்டு டாக்டர்கள் வரும்வரை காத்திருக்க வேண்டும். இச்சிகிச்சைக்குப் பல தரப்பட்ட வயதுடையவர்கள், நடக்க முடியாதவர்கள், கைத்தடித் துணையுடன் வரும் நோயாளர்கள், பார்வையற்றவர்கள் துணைக்கு உதவியுடன் வருபவர்கள் எனப் பலரும் அடங்குவர். அங்கு இந்நோயாளிகள் டாக்டர்கள் வரும்வரை மண்டபத்துக்கு வெளியேதான் காத்து நிற்கவேண்டும். சிகிச்சை நிலையத்துக்கு அண்மை யில் வெற்றுத் தகரங்களை கூரைத் தகடுகளாக்கிப் போடபபட்ட கொட்டிலில்தான் இவர்கள் இருக்க வேண்டும். இரண்டு வாங்குகள் மட்டும் போடப்பட்டுள்ளன. இவைகளில் எல்லோரும் அமரமுடியாது. நோயாளிகள் பலர் நிலத்திலும், வெளியிலும் டாக்டர்கள் வரும்வரை கொளுத்தும் வெய்யிலில்தான் காத்து நிற்கவேண்டும். இந்த கொட்டில் முன்பு சைக்கிள்களை வாடகைக்கு நிறுத்தும் நிலையமாக பாவிக்கப்பட்டதும் உயரம்குறைந்த மண்டபமாகவும் உள்ளது. இதை மண்டபம் என அழைப்பது பொருத்தமானது அல்ல. கால்நடைகளுக்கு போடப்படும தகரக்கொட்டில்களைப் போன்றது என்றே குறிப்பிடலாம்.

கடந்த 07.08.2004 அன்று சிகிச்சைக்கு வந்த நோயாளிகள் வழமையான புத்தகங்களைக் கொடுத்து இலக்கத்துண்டு பெற்றுக் கொண்டு வழமையான சலம் பரிசோதனை இவைகளை முடித்துக்கொண்டு டாக்டர்கள் வருமவரை காத்திருந்தனர். காலை 10 மணிவரையில் டாக்டர் ஒருவர் வந்து அறைக்குள் செனறு பின்பு திரும்பிச் சென்றுவிட்டார். பின்பும் சிறிது நேரம்கழித்து அடுதத டாக்டர் வந்து நோயாளிகளைப் பார்வையிடாமலே திரும்பிச் சென்றுவிட்டார். சிறிது நேரம் கழித்து வைத்தியசாலை ஊழியர் ஒருவர் இலக்க ஒழுங்கின்படி 30 நோயாளிகளை முதலில் அழைத்தார். அவர்கள் உரிய சிகிச்சை மண்டபத்தில் அமர்ந்திருந்தனர். டாக்டர்கள் எவரும் வரவே இல்லை. பின்பு அவர்கள் வெளியேற்றப்பட்டு வேறொரு வழியாக வேறு இடத்துக்கு அதாவது, வெளிநோயாளர் பிரிவுக்குப் போக ஒழுங்கு செய்யப்பட்டது. இரண்டாவது முறையாக மேலும் 30 பேரை இலக்க ஒழுங்கின்படி ஊழியர் அழைதது அவாகளை வாங்கில் அமரவைத்தார். சுமார் அரைமணிததியாலத்துக்கு மேலாக டாக்டர்கள் எவரும் நோயாளிகளைப் பார்வையிட வரவேயில்லை. இதனால டாக்டர்களின் வரவை எதிர்பார்த்து இருந்த நோயாளிகள் குழம்பிய நிலையில் இருந்தனர். பின்பு சரியாக 11.30 மணிக்கு டாக்டர் ஒருவர் வந்தார். அவரிடம் நோயாளிகள் தமது நிலையை எடுத்துக் கூறி காலை 8 மணியில் இருந்தே காத்திருப்பதாகக் கூறி ஆதஙகப்பட்டனர். இரக்க சிந்தையுள்ள டாக்டர்தான் வேறோரு பிரிவில் கடமையாற்றுவதாகவும் தனக்கும் இதுக்கும் கடமைரீதியில் தொடர்பில்லை என்று கூறியதுடன் நோயாளிகளின் நலன்கருதித்தான் அவர் நோயாளிகளைப் பார்க்கவந்ததாகவும் கூறினார். அவரின் பெருந்தன்மையை மக்கள் வாயாரப் புகழ்ந்தமையை அங்கு காணமுடிந்தது. பின்பு விரைவாக அந்த டாக்டர் நோயாளிகளைப் பார்வையிட்டதுடன், நோயாளர்களும விரைவாக மருநதுகளைப் பெற்றுச்சென்றதைக காணமுடிந்தது. இப்படியான அவலநிலை கிளினிக் நோயாளிகளுக்கு தேவையா? இந்த நிலைக்கு வைத்திய சாலை நிர்வாகம் காரணமா? கடமைபுரியும் டாக்டர்களின் ஏனோதானோ என்ற மனப்பான்மையா? எப்படியாயினும் நீரிழிவு நோயாளிகள நலன்கருதி நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுத்து அவர்களின் அவலங்களை நிவர்த்திசெயது நோயாளிகளை நேரகாலத்துககுத் திரும்பிப்போக உதவி செய்ய முன்வரவேண்டும். இதுவே வைத்திய சாலை நிர்வாகம் நோயாளிகளுககுச செய்ய வேண்டிய பேருதவியாகும். ★

**- ஒரு நீரிழிவு நோயாளி -**

**மேல் மாடி வீடு விற்பனைக்கு**

சிறந்த குடியிருப்புப் பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய ஏழு அறைகள், இரண்டு குளிக்கும் அறைகள், விசாலமான மேல்மாடி பல்கனி, கராச் மற்றும் சகல வசதிகளுடன் சிறந்தமுறையில் 4½ பரப்புக் காணியில் நிர்மாணிக்கப்பட்ட மேல்மாடி வீடு பலாலி வீதியில், திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு அருகல் உடனடியாகக் குடியிருக்கக் கூடிய நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
தொலைபேசி 222 6724. (36211)

**நல்லதொரு வாய்ப்பு**

**Institute of Computer Studies**
**கணனிக் கல்வி நிறுவனம்**

Main Street, Pandateruppu. I.C.S பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

**Certificate Courses**
Micro soft Windows
Micro soft Word
Micro soft Excel
Micro soft Access
Micro soft Power Point

**சிறுவர்களுக்கான**
Micro soft Kids Programme

உங்கள் கணனித் தொழில்நுட்பத்தை வளர்த்துக்கொள்ள எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள். (35994)(34-14)

பிரத்தியேக ஆங்கில வகுப்புகள் ஒழுங்குசெய்யப்படும்.

**விற்பனையாளர்கள் தேவை**

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர்களும், பழக விரும்புபவர்களும் உடனே தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: விள.இல. 2368, மே/பா உதயன்.
(சி37492)

**REPAIRS**




UPS • Printers • Monitors • Scanners • Power supply •


**MICRO PC SYSTEMS**

யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

பிறப்பு 03 - 04 - 1929

இறப்பு 11 - 08 - 2004



அமரர் **நமசிவாயம் டேவிட் இரத்தினம்**

நாம் பிழைத்தாலும் ஆண்டவருக்கென்று
பிழைக்கின்றோம் நாம் ஆண்டவருக்கென்று
மரிக்கின்றோம் ஆகையால் பிழைத்தாலும்
மரித்தாலும் ஆண்டவருடையவர்களாய் இருக்கின்றோம்.

நாளை (10.09.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

சென்.பீற்றர்ஸ் லேன், நவாலி தெற்கு, மானிப்பாய். (36215)(34-14)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

தோற்றம் 28 - 11 - 1937

மறைவு 10 - 08 - 2004



அமரர் **முருகுப்பிள்ளை இராசரத்தினம்** (துரை)

(செருக்கன் சாட்டி அம்மன் ஆலயப் பு,சகர்)

பாசமுகம் காட்டி நேசமுடன் பழகி எம்முடன்
வாழ்ந்து மறைந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (09.09.2004) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை ஆகிய நிகழ்வுகளில் பங்குபற்றுவதோடு தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தம்பகாமம், பளை. (36214)(34-14)

# சின்னமுத்து - ருபெல்லா தடுப்பு - மிக அவசியம்

நோய்த்தடுப்பு இயக்கத்தில் சென்ற நூற்றாண்டின் அதிமுக்கிய முன்னேற்றம், தொற்று நோய்களைத் தடுப்பதற்கு வக்சீன் தடைமருந்தேற்றல் முறை வந்ததாகும். மிகக் கொடுமையான பெரியம்மை (வைசூரி - Small pox) உலகத்திலிருந்தே ஒழிக்கப்பட்டது பொதுச் சுகாதார வெற்றிகளின் உயர்ந்த மைல்கல் ஆகும். பல நோய்கள் வக்சீன் உபயோகத்தால் ஒழிக்கப்படாவிட்டாலும் ஒடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், குறிப்பிட்ட நோய்களை முற்றாக உலகிலிருந்து விரட்டுவதே சுகாதார மருத்துவ இயக்கத்தின் நோக்கம்.

சின்னமுத்து (MEASLES) ஜேர்மன்சின்ன முத்து (RUBELLA) ஆகிய இரு நோய்கள் இப்போது அத்தகைய நோய் ஒழிப்புக்கு எடுக்கப்படுகின்றன. சின்னமுத்துவும ருபெல்லாவும் வேகமாகப் பரவும் தொற்று நோய்கள், வெவ்வேறு வைரஸ் கிருமிகளால் உண்டாவன. இரண்டையும் எமது நாட்டிலிருந்து, உலகிலிருந்து முற்றாக அழித்தால் பல அனு கூலங்கள் உண்டு. நல்ல வேளையாக அவை இரண்டையும் தடுத்து, கட்டுப்படுத்தி, ஒழிப்பதற்கு ஏற்ற வக்சீன்கள் உண்டு. இன்னும் சௌகரியமாக, ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் என்ற முறையில் இரண்டு வக்சின்களையும் ஒன்றிணைத்த ஒரே வக்சீன் உண்டு.

அதுதான் MEASLES-RUBELLA (M.R.) வக்சீன். இந்த வக்சீன் இவ்விரு நோய்களைத் தடுப்பதில் மிக வல்லமை உள்ளது. எம்ஆர் தடுப்பு மருந்து 98 வீதம் பாதுகாப்பானது. அதேவேளையில் ஆபத்தில்லாதது; நம்பகரமானது.

**நோய்களைப் பற்ற்......**

**சின்னமுத்து:-**

இது ஒரு தொற்றுநோய். எல்லோருக்கும் தெரிந்த ஒரு நோயே. ஆபத்தில்லாத ஒரு நோய் என்ற ஓர் அபிப்பிராயம் எம்மிடையே உண்டு. அது தப்பானதாகும். சின்னமுத்துவின் சிக்கலாக நிமோனியா, மூளைக்காய்ச்சல் உள்காதில் அழற்சி ஆகியன ஏற்படலாம். மரணமும் நேர்ந்திருக்கிறது. சிறுவயதில் பெரும்பாலும் தோன்றும் சின்னமுத்து, எமது நாட்டில் பிள்ளையின் ஒன்பதாவது மாத காலத்திலும்,

> **தடைமருந்தேற்றும் நாள்கள்:**
> செப்ரெம்பர் 11 சனிக்கிழமை
> 12 ஞாயிற்றுக்கிழமை
> நேரம்: காலை 8மணிமுதல் மாலைவரை

M.R. வக்சீன் மூன்று வயதினிலும் போடப்படுவதால், அவர்களுக்கு வருவது இல்லை. எனினும், இத்தடுப்புமருந்தேற்றல் அண்மைக்காலங்களிலேயே போடத்தொடங்கியிருப்பதால் இத்தடுப்பூசி எப்போதும் போடப்படாத பெரியவர்களுக்கு இந்த நோய்வருவதைக் காண்கின்றோம. அப்படிப் பெரியவர்களுக்கு வந்தால் நோயின் உபத்திரவம் ஒருபுறம் இருக்க, நோய் ஒருவர் வாழ்க்கையோடு விளையாடலாம். உதாரணமாக ஜி.சீ.ஈ. (சாதாரண, உயர்தர) பரீட்சையின்போது வந்தால், ஒருவருடம் வீணாகலாம். தொழில் சம்பந்த நேர்முகப் பரீட்சை அன்று வந்தால் அந்த சந்தர்ப்பம் போய்விடும். தொழில் செய்பவரானால் 1-2கிழமை ஊதியம் நஷ்டமாகும்.

**ருபெல்லா**

சின்னமுத்து போன்ற சில அறிகுறிகள் கொண்ட நோய். அதனால் ஜேர்மன் சின்ன முத்து என்றும் அதற்குப் பெயர் உண்டு. ருபெல்லா வைரசினால் உண்டாவது. சாதாரணமாக எமக்கு ஏற்பட்டால், சின்னமுத்துக்கு கூறப்பட்டது போல் பரீட்சை, தொழில், முக்கிய நிகழ்வுகள் தடைப்படலாம். கர்ப்பிணிக்கு ஆரம்பமாத காலங்களில் ஏற்பட்டால், கர்ப்பத்தில் குழந்தையின் விருத்தி பாதிக்கப்படலாம். பிறக்கும் குழந்தை குருடாகவோ, செவிடாகவோ, இருதயக்குறைபாட்டுடனோ, மூளை வளர்ச்சி குன்றியோ பிறக்கலாம்.

**இந்தத் தடை மருந்து ஏற்றும் திட்டம்**

இது ஒரு தேசியத் திட்டம். இலங்கையில் செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் சுகாதாரச் சேவைத் திணைக்களம் நடத்துகின்றது. அதில் தொண்டரின் பங்கு முக்கியமானது. இலங்கையில் 29000 தொண்டர்கள் பங்குபற்றுகின்றார்கள். அவர்கள் டாக்டர்கள், சுகாதார தாதிகள், சுகாதார பரிசோதகர்கள், குடும்பலநல சேவையாளர் ஆகியோருக்கு உதவிசெய்வார்கள்.

**எவருக்கு?**

★ வயதெல்லை 16-20 அதாவது 1.1.1983 முதல் 1.1.1988 வரை பிறந்தவர்களுக்கு.

★ ஆண் - பெண் இருபாலாருக்கும் ஏற்றப்படுகிறது. ஆண்களும் எடுக்கவேண்டும். ஏனெனில், நோய்த்தடுப்பு மருந்து ஒரு திட்டமாக ஒரே காலத்தில் இருபாலாருக்கும் ஏற்றும் போது, அந்த நோயின் பரவும் தன்மை தடைபெறுகின்றது. அப்போதுதான் நோயை ஒழிக்க முடியும். அத்துடன், இந்த இரு நோய்களுக்கும் ஒரே வக்சீன் போடுவதால் இருபாலாரும் போடுவது அவசியமாகும். இவை இரண்டும் வேகமாகப் பரவும் நோய்கள் என்பதால் சமூகத்தில் அதிக தொடர்புகூடிய இவ்விலக்கு வயதினருக்கு (16-20 வயது) இத்தடுப்பூசி வழங்கப்படுகின்றது. இந்த வக்சீன் விலை உயர்ந்தது. ஆனால், தனிநபர், மக்கள் நலன் என்ற உயர்ந்த நோக்குடன் இலவசமாக வழங்கப்படுகின்றது. ஆகவே, கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துங்கள். அண்மையில் உள்ள தடுப்புமருந்தேற்றும் நிலையங்களில் சென்று பயன் அடையுங்கள். இத்திட்டத்தின் முழுமையான பயனுக்கு உங்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பும் அவசியமாகும். ★

**சி. லக்ஷ்மி** B.Sc. (Nursing)
*பொதுச்சுகாதார தாதி, யாழ். மாநகரசபை.*

## சனி, ஞாயிறு இரு தினங்களும்

# 16 - 20 வயதுக்குட்பட்ட இருபாலாருக்கும் சின்னமுத்து-ருபெல்லா தடுப்பூசி ஏற்றும்பணி

யாழ்ப்பாணம்,செப்.9

யாழ். மாவட்டத்தில் உள்ள 16வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களும் சின்னமுத்து - ருபெல்லா தடுப்பூசி மருந்து ஏற்றுவதற்குரிய ஏற்பாடுகள் சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

1983ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கும் 1988ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்தவர்களுக்கே தடுப்பூசிமருந்து ஏற்றப்படவுள்ளது.

காலை 8 மணிமுதல் மாலை வரை இப் பணிகள் இடம்பெறும். இதன்படி, கீழ்க்காணும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

**ஊர்காவற்றுறை**

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை, மாவட்ட வைத்தியசாலை-புங்குடுதீவு, கிராமிய வைத்தியசாலை-வேலணை, ஆரம்ப சுகாதார நிலையம் - புளியங்கூடல், கிராம சுகாதார நிலையம்-அல்லைப்பிட்டி, கிராம சுகாதார நிலையம்-மண்டைதீவு. மேற்கூறிய நிலையங்களில்

**மானிப்பாய்**

கிராமிய வைத்தியசாலை - வட்டுக்கோட்டை, மத்திய மருந்தகம் - வட்டுக்கோட்டை, மத்திய மருந்தகம் - தொல்புரம், சங்கானை சுற்றயல் கூறு, பண்டத்தரிப்பு பட்டினசபை, ஆரம்ப சுகாதார நிலையம்-பண்ணாகம், கிராமிய வைத்தியசாலை - பண்டத்தரிப்பு, மத்திய மருந்தகம் - இளவாலை, சண்டிலிப்பாய் சனசமூக நிலையம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை-மானிப்பாய், மத்திய மருந்தகமும் மகப்பேற்று நிலையமும் - மானிப்பாய், ஆரம்ப சுகாதார நிலையம் - சாவல்கட்டு, ஆரம்ப சுகாதார நிலையம் - ஆனைக்கோட்டை, நவாலி கிறிஸ்தவ இளைஞர் மன்றம்-குண்டடி சுதுமலை, சுதுமலை கல்விநிலையம்

**தெல்லிப்பழை**

தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையம், மத்திய மருந்தகமும் மகப்பேற்று நிலையமும்-அளவெட்டி, உடுவில் மத்திய மருந்தகம், இணுவில் மத்திய மருந்தகம், ஏழாலை மத்திய மருந்தகம், சுன்னாகம் மத்திய மருந்தகம், புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகம்

**சாவகச்சேரி**

கைதடி வடக்கு அம்பிகை சனசமூக நிலையம், தச்சந்தோப்பு உப அலுவலகம், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, நுணாவில் சனசமூக நிலையம், மட்டுவில் வடக்கு வேற்பிள்ளை சனசமூக நிலையம், கச்சாய் ஆரம்ப சுகாதார நிலையம், மீசாலை வடக்கு சனசமூக நிலையம், தவசிக்குளம் சனசமூக நிலையம், மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனையும்-கொடிகாமம், மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனையும்-வரணி, முகமாலை இராணுவச் சோதனைச் சாவடி, மத்திய மருந்தகம்-கைதடி, நாவற்குழி குடும்பநல சேவை உத்தியோகத்தர் அலுவலகம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை -சாவகச்சேரி, கச்சாய் உப அலுவலகம், அல்லாரை வெள்ளாம்போக்கட்டி சனசமூக நிலையம், மட்டுவில் தெற்கு சனசமூக நிலையம், கல்வயல் குடும்ப நல சேவை உப அலுவலகம், உசன் ஆரம்ப சுகாதார நிலையம், மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனையும்-வரணி, முகமாலை இராணுவ சோதனைச்சாவடி.

**கோப்பாய்**

சுற்றயல்கூறு-அச்சுவேலி, மத்திய மருந்தகம்-புத்தூர், வாதரவத்தை ஆரம்ப சுகாதார நிலையம், சிறுப்பிட்டி கிராமிய அபிவிருத்திச்சங்கம், அச்செழு ஆரம்ப சுகாதார நிலையம், நீர்வேலி கிராம அபிவிருத்திச் சங்கம், ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்கம், மத்திய மருந்தகம்-உரும்பிராய், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை-கோப்பாய், கிராம அபிவிருத்திச் சங்கம்-கட்டைப்பிராய், கிராம் அபிவிருத்திச் சங்கம்-திருநெல்வேலி, மத்திய மருந்தகம்-கோண்டாவில், மத்திய மருந்தகம்-கொக்குவில், கிராம அபிவிருத்திச் சங்கம்-கொக்குவில், யாழ்.பல்கலைக்கழகம், அரியாலை சிகிச்சை நிலையம்.

**யாழ்ப்பாணம்**

கொழும்புத்துறை சுவாமியார் சிகிச்சை நிலையம், மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனையும்-குருநகர், இராஜசிங்கம் வீதியில் உள்ள கல்வி நிலையங்கள், குருநகர் ஆவே மரியாள் முன்பள்ளி, யாழ்.பிரதான வீதி ஜுபிலி மகப்பேற்று நிலையம், நாவலர் மத்திய நிலையம், கொட்டடி நமசிவாய வித்தியாலயம், சென்நீக்கலஸ் றோ.க.பாடசாலை, அரியாலை மத்திய நிலையம், வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையம், நல்லூர் ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம், நாவலர் சிகிச்சை நிலையம், கந்தர்மடம் சனசமூக நிலையம்.

**பருத்தித்துறை**

அம்பன் குடத்தனை தென்னிந்தியத் திருச்சபை, அம்பன் கிராம சேவகர் பணிமனை, குடத்தனை வடக்கு கிராம சேவகர் அலுவலகம், உடுத்துறை பொது மண்டபம், வத்திராயன் சனசமூக நிலையம், ஆழியவளை அ.த.க. பாடசாலை, செம்பியன்பற்று - மருதங்கேணி வைத்தியசாலை, கரவெட்டி கிழக்கு கவுந்தில் பாலர் பாடசாலை, கரவெட்டி தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயம், கரவெட்டி தெற்கு மணியகாரன் தோட்டம் பாடசாலை, மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனையும், கரவெட்டி, வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, துன்னாலை - கட்டைவேலி சிகிச்சை நிலையம், உடுப்பிட்டி பிரதேசசபை, அல்வாய், பிரதேசசபை, இமையாணன் மாதர்சங்கம், மாவட்ட வைத்தியசாலை-வல்வெட்டித்துறை, பருத்தித்துறை 4ஆம் குறுக்குத்தெரு, அல்வாய் வடக்கு நக்கீரர் சனசமூக நிலையம், மத்திய மருந்தகம்-பருத்தித்துறை, மாதனை சிகிச்சை நிலையம் -புலோலி, ஆதார வைத்தியசாலை-மந்திகை, தீக்கம் சனசமூக நிலையம், தொண்டைமானாறு ஆரம்ப சுகாதார நிலையம், துன்னாலை வடக்கு கோவிற்கடவை சனசமூக நிலையம், குடும்பநல சேவை உத்தியோகத்தர் காரியாலயம்-அம்பன், மணற்காடு பொற்பதி சனசமூக நிலையம், முள்ளியான், வெற்றிலைக்கேணி பொதுமண்டபம், கட்டைக்காடு பொதுமண்டபம், செம்பியன்பற்று - மாமுனை, சோளங்கன் சிகிச்சை நிலையம், மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனையும்-கரவெட்டி, வல்வெட்டி - கொற்றாவத்தை அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, கரணவாய் ஆரம்ப சுகாதார நிலையம்-அத்தாய், வதிரி சிகிச்சை நிலையம், உடுப்பிட்டி சனசமூகநிலையம், பொலிகண்டி - கொற்றாவத்தை அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, அம்பிகை பாலர் பாடசாலை, பருத்தித்துறை 4ஆம் குறுக்குத்தெரு, வியாபாரிமூலை கலைமணி சனசமூகநிலையம், கற்கோவளம் சிகிச்சை நிலையம், கம்பர்மலை பாரதி சனசமூக நிலையம், அல்வாய் மேற்கு சக்கோட்டை ஆதார வைத்தியசாலை - மந்திகை, வல்வெட்டி ஆதி கோவிலடி, துன்னாலை தெற்கு ஆட்டுப்பட்டி பொதுமண்டபம், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை.

இதேவேளை -

தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் மாணவர்களின் வசதிகருதி கன்னாதிட்டி விஞ்ஞானக் கல்வி நிறுவனம், கன்னாதிட்டி புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம், யாழ்.விக்னா கல்வி நிறுவனம், யாழ்.பொருளியற் கல்லூரி, ஆரியகுளம் டானியல் கல்வி நிறுவனம் (டி.எம்.ஐ) ஆகியவற்றிலும் தடுப்பூசி ஏற்றுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். நல்லூர்ப் பிரதேசத்தில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்களை நடத்தும் தனியார் கல்வி நிறுவனங்கள் மேற்படி பணிக்கு வசதியாக வகுப்புகளை நிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கேட்டுள்ளது.

(10-51)

## எச்சரிக்கை விடுக்கின்றனர் சூழலியலாளர்கள்

# சேது சமுத்திரத் திட்டத்தினால் யாழ்-குடாநாட்டுக்குப் பேராபத்து!

## நிலத்தடி நீர் உவராகும்; கடலரிப்பும் அதிகரிக்கும்

கொழும்பு, செப்.9

பாக்கு நீரிணை ஊடான சர்வதேச கப்பல் போக்குவரத்தை மேற்கொள்வதற்கு வசதியாக சேது சமுத்திரத்தை ஆழப்படுத்தும் திட்டத்தை இந்தியா முழுமூச்சாக முன்னெடுக்கவிருக்கின்றது.

இதனால், வடக்கு இலங்கைக்கு - குறிப்பாக யாழ்.குடாநாட்டுக்கும் மற்றும் மன்னார் குடாவுக்கும - பேராபத்து ஏற்படும் என்று சூழலியலாளர்கள் கடும் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்கள்.

மன்னார் வளைகுடாவையும் வங்காள விரிகுடாவையும் இணைக்கும் பாக்குநீரிணையில உள்ள கடற்பகுதியில் முந்நூறு மீற்றர் அகலத்துக்கு 12.8 மீற்றர் ஆழப்படுத்தி, இருவழிக் கப்பல் போக்குவரத்துப் பாதை ஒன்றை ஐயாயிரம் கோடி இந்திய ரூபா செலவில் அமைப்பதற்கு இந்தியா தயாராகி வருகின்றது.

இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால் வடக்கு இலங்கையின் சூழலியலில் அது மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேசக் கப்பல் போக்குவரத்துக்கு பாதை அமைப்பதாயின் இப்பகுதியில் ஆழமாகத் தோண்டப்பட்டு மண் அகற்றப்பட வேண்டும் என்று சூழலியல் மன்ற நிறுவனத்தின் (Environmontal Foundation Limited) பேச்சாளர் விநோத் முனசிங்க தெரிவித்தார்.

மன்னார் வளைகுடாவின் புவியியல் அமைப்பு ஆழம் குறைந்த கடற்படுக்கையைக் கொண்டதாகும். பாக்குநீரிணை வழியே செல்லும் இராமர் அணையும் ஆழம் குறைந்த மணல் திட்டுக்களால ஆனது. இவை கரையோரத்தை அண்டி நீரோட்டம் கையைத் தடுத்து அரண் செய்கின்றன.

ஆனால், இருவழிக் கப்பல் போக்குவரத்துக்காக இப்பகுதி ஆழமாகத் தோண்டப்படுமானால இந்த மணல் திட்டுக்கள் பாதிக்கப்படும். இதனால், மன்னார் வளைகுடாவை அண்டிய கரையோரப் பகுதி பெரும் கடலரிப்பு ஆபத்துக்கு உள்ளாகும் - என்று அவர் எச்சரித்துள்ளார்.

இவை எல்லாவற்றையும்விட மோசமான பாதிப்பு யாழ்.குடாநாட்டின் நிலத்தடி நீர் வளத்துக்கு ஏற்படக்கூடிய ஆபத்தாகும். யாழ்குடாநாட்டின் நீர்மட்டம் கடல் மட்டத்தைவிடத் தாழ்ந்தது. கடல்படுக்கையை ஆழமாக்கும் நடவடிக்கையால் குடாநாட்டின் தரைப் பகுதிக்குள் கடல்நீர் புகுந்து நிலத்தடி நீர்வளம் உவர்த்தன்மையாகும் மோசமான ஆபத்தும் உள்ளது என்றார் அவர்.

இப்பகுதியில் தொடர்ந்து கப்பல் போக்குவரத்து மும்முரமாக நடைபெறுவதும் கரையோரக் கடலரிப்பைத் தூண்டும். கடலில் பவளப்பாறைகள் மற்றும் கடல் நுண்ணுயிர்கள், அங்கிகள் ஆகியவையும் இத்திட்டத்தினால் அழிவுறும நிலைமை இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. சேது சமுத்திரத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் பற்றிய ஆரவார அறிவிப்பை இந்திய அரசு கடந்த வாரம் விடுத்தது. சேது சமுத்திரத் திட்டம் பூர்த்தியாகுமானால் -

தற்போது இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக்கரைத் துறைமுகங்களுக்குப் போவதற்கு இலங்கையைச் சுற்றிச் செல்லும் நிலைமை தவிர்க்கப்படும். இந்தியக் கரையை அண்டி - இந்தியக் கரைக்கும் வடக்கு இலங்கைக்கும் இடையிலுள்ள சேது சமுத்திரம் ஊடாகக் கப்பல்கள் செல்லக்கூடியதாக இருக்கும். அந்த வசதி ஏற்பட்டால் நானூறு கடல் மைல் நீளமான - சுமார் 36 மணிநேர - கடல் பயணத்தைக் குறைக்கமுடியும் என்பது இந்தியாவுக்கு மிகவும் சாதகமான விடயம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சிவன்பண்ணை வீதியில் 2பரப்பு 1குழி காணியுடன் கூடிய வீடும், ஏழாலை மத்தி, பசுபதி கடையடியில் 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.குமாரகுலசிங்கம், ஏழாலை வடக்கு, ஏழாலை. T.P.: 077 6125140. (36226)

## கார்கள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள **Morris Minor 1ஸ்ரீ (Cream), 9 ஸ்ரீ (Black), 4 ஸ்ரீ Fiat (Black)** கார்கள் எம்மிடம் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0777 047278, 071 4941826. (36221)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1969, பரணி, உதயச் செவ்வாய், கணக்காளருக்கு (F.C.M.A) மணமகளும் 1977, உத்தரட்டாதி, அரச எழுதுநருக்கு (B.Sc.) மணமகனும் தேவை. தொடர்பு: விளம்பர இல.2369, மே/பா உதயன்.(36209)

## மணமகன் தேவை

1970ஆம் ஆண்டு பிறந்த, உத்தராட நட்சத்திரம், கொமர்ஸ் மனேஜ்மன் படித்து, அரச சேவை ஆற்றும், செவ்வாய்க் குற்றமற்ற, பாவம் 38 புள்ளி உள்ள பெண்ணுக்கு, அரசசேவை ஆற்றும் மணமகன் தேவை. அத்துடன் உள்நாடு, வெளிநாட்டில் இருப்பவர்களின் குறிப்புகள் உண்டு. தொடர்பு: செ.விஜயரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய். தொலைபேசி 012 222 3257. (36195)

## இலகு திருமண சேவை

1970ஆம் ஆண்டு பிறந்த, பூரம் நட்சத்திரம், 12இல் செவ்வாய், பாவம் 71, **B.Sc.Computer Instructor** ஆக வேலை பார்க்கும் அழகிய மணமகளுக்கு படித்த, உள்ளூர், வெளியூர் மணமகன் தேவை. தொடர்பு: துரை விமலா, நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.(36150)

## கோழிக்குஞ்சு விநியோகம்

**Prima** புறொயிலர் குஞ்சுகளும், சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும், 13.09.04 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. 3529 ரஞ்சித், 517, ஸ்ரான்லி றோட், தாரகை முதலாம் கட்டை, பருத்தித்துறை. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, ராதா, மாவடி, வட்டுக்கோட்டை, ஸ்ரீராம், பருத்தித்துறை, பஸ் நிலையம் முன்பாக. (36182)

## தவறிவிட்டது

எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ் என்னும் முகவரியைச் சேர்ந்த வீரகத்தி செல்லம்மா என்பவரது தேசிய அடையாள அட்டை (No.336280150V) 29.08.04 செல்வச்சந்நிதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் S.குமரகுரு, மடத்தடி வீதி, கொடிகாமம் என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.T.P. 0777 755137. (36238)

கடந்த மூன்று வாரங்களுக்கு முதல் **Dr. Jaganathan, Govt. Hospital P.Town Hatton** என்பவருடைய வாகன சாரதிப்பத்திரம் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து **Mr. M. Mariyanayagam, Food and Lodge, New Rest House, 19, Somasundram Avenue, Chundukkuli, Jaffna** எனும முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.T.P.: 021 222 7839. (36161)

கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த செல்வராஜா மதுசூதனன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.833070770V), கடந்த வாரமளவில் முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கோகுல வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (36230)

திருமதி ஜெயலக்சுமி என்பவருடைய X Ray படமும் கிளினிக் கொப்பியும் மாத்திரைகளும் அடங்கிய கைப்பை ஒன்று கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சங்கானை M.P.C.S கிளை இல.11, நவீனசந்தை, மேல் மாடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P. 2263153 (36197)


## வேலை வெற்றிடம்

**இலங்கையின் முன்னணித் தகவல் தொழில் நுட்ப மற்றும் கல்வி நிறுவனமான SAAMSTECH இன் யாழ். அலுவலகத்திற்குப் பட்டம் அல்லது உயர்தர தேர்ச்சியுடன் விண்ணப்பிக்கலாம். அல்லது நேரில்**

**SAAMSTECH,**
**841, Hospital Rd, Jaffna.**
T.P.: 077 3068968
(C/37509) (42-21-14-13)

## இணைய, இணையத்தள சேவை

.com .net .org .info
Doman Registration Rs.400/= per Year
Hosting upto Rs2000/= per year
Limited time offer
**SAAMSTECH, 841, Hospital Rd. Jaffna.**
**T.P.: 0773 068968**
(சி-37510)





**யாழ்.மத்திய கல்லூரியில் கடந்த மாத இறுதியில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சியில் சிங்கர் வர்த்தக நிறுவனம் நடத்திய போட்டியில் மூவர் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.**

**மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த ஜமுனவாணி இராஜநாயகம், புத்தூர் மேற்கைச் சேர்ந்த ஜே.சேந்தன், முருகேசர் வீதி, நல்லூரைச் சேர்ந்த சி.மணிவண்ணன் அதிர்ஷ்டசாலிகளுக்கு வழங்கப் படவிருக்கும் பரிசுப்பொருள்களைப் படத்தில் காணலாம்.**

# வல்லிபுர ஆழ்வார் கோயில் பெருந்திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பம்

வடமராட்சி,செப்.9

வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 17 தினங்கள் இவ்வருடாந்தப் பெருந்திருவிழா நடைபெறும்.

முக்கிய திருவிழாக்களான வெண்ணெய்த் திருவிழா எதிர்வரும் 21ஆம திகதியும் துகில் திருவிழா 22ஆம் திகதியும் பாம்புத் திருவிழா 23ஆம திகதியும் கம்சன் போர்த் திருவிழா 24ஆம் திகதியும் வேட்டைத் திருவிழா 25ஆம் திகதிவும் சம்பரத்திருவிழா 26ஆம் திகதியும் இடம்பெறும்.

இரதோற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.15 மணிகரும் சமுத்திரத் தீர்த்தம் மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கும் கேணித் தீர்த்தம் 29ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கும் நடைபெறுவதுடன், பெருந்திருவிழா நிறைவுறும்.

தினமும் பகல் உற்சவம் நண்பகல் 12 மணிக்கும் மாலை உற்சவம் இரவு 7 மணிக்கும் நிறைவடையும்.

பெருந்திருவிழாவையொட்டி பருத்தித்துறையிலிருந்து மந்திகை, தும்பளை ஆகிய இரு பாதைகள் ஊடாகவும் வல்லிபுரக் கோயிலுக்கு பஸ் சேவைகள் இடம்பெறும். அத்துடன், பருத்தித்துறை - யாழ்ப்பாணம் சேவையிலீடுபடும் சில பஸ்களும் வல்லிபுரக்கோயில் ஊடாகச் சேவையில் ஈடுபடும் என அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வல்லிபுரக்கோயில் பெருந்திருவிழாவின்போது வருகைதரும் பக்தர்களின் வசதிகருதி மேற்கொள்ளப்படவேண்டிய குடிதண்ணீர், போக்குவரத்து, சுகாதார வசதிகள் தொடர்பாகப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் தலைமையில் கூடி ஆராயப்பட்டது. (10-173)


## ஒத்திவைக்கப்பட்டுள்ளது

இன்று (09-09-2004) வியாழக்கிழமை நடைபெறவிருந்த இந்து நாகரிகத்துறை இறுதிவருட மாணவர்களுக்கான பிரிவுபசாரவிழா தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறியத்தரப்படும்.

**- 3ஆம் வருட மாணவர்கள்.**

(36244)(21-14)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 610 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 07-09-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 4921703-4937631 |

வெற்றி இலக்கங்கள்
**06 17 34 48**

லக்கினம் மகரம்

ஜக்பொட் பரிசு
ரூபா.33,21,450/-
வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமை
ஜக்பொட் ரூபா. 40,99,600/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,48,415 | 10/- | 34,84,150/- |
| 2.இலக்கங்கள் | 31,999 | 20/- | 6,39,980/- |
| 1.இல + லக்கினம் | 31,663 | 30/- | 9,49,890/- |
| 2.இல + லக்கினம் | 2,908 | 100/- | 2,90,800/- |
| 3.இலக்கங்கள் | 851 | 500/- | 4,25,500/- |
| 3.இல + லக்கினம் | 80 | 5,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 33,21,450/- | - |
| மொத்தம் | 4,15,926 | - | 78,20,570/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 78,20,570/-

தொடர் இல. 5897178 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 10ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**4927034-9-40**
**4928423-6-28**
**4922397-6-83**
**4930138-5-67**
**4928380-1-16**



அருந்துங்கள்...!

**அண்ணா கோப்பி**

**நல்லூர் ஆலய - சிவன் கோயிலுக்கு**
அருகிலுள்ள "அண்ணா"
வியாபார நிலையத்தில்
அண்ணா உற்பத்திப் பொருள்களான
❊ தோசை மா ❊ அப்பம் மா ❊ ஜீவாகாரம்
❊ அரிசிமா ❊ சரக்குத் தூள் அடங்கிய பொதியை
100/= ரூபா கொடுத்து வாங்கி நாம் வழங்குகின்ற இனாம் பொருள்களைப் பெற்றுக்கொள்ளுங்கள் (சி-37550)(34)


## மகாகவி பாரதி விழா 2004

இடம்: **யாழ்ப்பாணக் கல்லூரி "ஒட்லி" மண்டபம்**
காலம்: **10.09.2004 வெள்ளிக்கிழமை**
**மாலை 3.00 மணி**



### நிகழ்ச்சி நிரல்

- நாதஸ்வர மங்கல இசை
- மங்கள விளக்கேற்றுதல்
- இறைவணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- பாரதியின் திருவுருவத்திற்கு மலர் மாலைகள் சூட்டுதல்
- நல்லாசியுரை : பேராயர் அதி வண.முனைவர் எஸ்.ஜெபநேசன்.
- தொடக்கவுரை : உயர்திரு.நோயல் ஏ.விமலேந்திரன் *(யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர்)*
- தலைமையுரை : செல்வன் ச.நிகேஷ் *(தலைவர், தமிழ்மன்றம், யாழ்ப்பாணக்கல்லூரி)*
- சிறப்புச் சொற்பொழிவுகள்

❊ "நல்லதோர் வீணை செய்தே..."
பேராசிரியர் இரா.மோகன்
*(ஒப்பியல் இயக்கியத்துறைத் தலைவர், தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், தமிழ்நாடு)*

❊ "பாரதி கண்ட புதுமைப்பெண்"
பேராசிரியை நிர்மலா மோகன்
*(தமிழ்த்துறைப் பேராசிரியை, மதுரைச் செந்தமிழ்க்கல்லூரி, தமிழ்நாடு)*

❊ "பாரதி கவிதா நாட்டிய அரங்கு"
யாழ்ப்பாணக் கல்லூரி மாணவிகள்.

❊ "நெஞ்சு பொறுக்குதில்லையே!"
(இசையிடை அரங்க ஆற்றுகை)
யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் குழாம்.

❊ "பாரதி வரலாறு"
*(வில்லிசைப்பாட்டு விருந்து)*
"கலாவிநோதன், வில்லிசை வாரிதி **சின்னமணி** அவர்களும் குழுவினரும்

❊ நன்றியுரை
ஜூட் பிறைனர் ரஞ்சித்குமார்
*(செயலாளர், தமிழ் மன்றம்)*

❊ கல்லூரிப் பாடல்

அலைகடலெனப் பொங்கி அனைவரும் வருக!

**தமிழ் மன்றத்தினர்,**
**யாழ்ப்பாணக் கல்லூரி,**
**வட்டுக்கோட்டை.**

(C/37553)(42-21-14)


## இணையத் தளம் ஊடாக 24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது

**WORLD TAMILAR**
உலகத் தமிழர் வானொலி

இணைய முகவரி: **WWW.Wtrfm.com**
அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க
நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு
26 உற்சவ நாள்களிலும்
(ஓகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)
உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம் மூலம் செவிமடுத்து மகிழலாம்).

**உலகத் தமிழர் வானொலியுடன்**
நேரடியாக இணைய
MSN messenger chat மூலம்: live @ wtrtm.com
தொலைபேசி மூலம்: 2673969
(சி-36863)

**உலகத் தமிழர் உறவுப் பாலமாக உலகத் தமிழர் வானொலி**

**ஊடக அனுசரணை:- 'உதயன்'**

# நல்லூர்க்கந்தன்

## பெருந்திருவிழாக் காலச் சிறப்பிதழ்

(20ஆம் திருவிழா)



## அருளை அள்ளி வழங்கிடுவாய்!

நல்லை நகர் வாழும் திருக் குமரா ~ உன்
எல்லையை நாமடைந்தோம் அருட் குமரா
தொல்லை வினை தீர்க்கும் சுடர் வடிவேலா ~ உன்
எல்லையில்லா அருளை தந்திடுவாய் உமை பாலா

வள்ளி தெய்வயானையோடு வலம் வரும் குமரேசா
புள்ளி மயில்தனில் வந்தமர்ந்திடும் சண்முகா
கள்ளமில்லாமல் தொழும் அடியவர்க்கே ~ அருளை
அள்ளி வழங்கிடும் ஆறுமுக வேலா

- நீர்வை சசி.

## நலமளிக்கும் நல்லூரானவன்

ஆறுபடைவீடுடைய அலங்காரக் கந்தனவன்
அலங்கார அசுரர் குலமழித்த வேலவனவன்
ஓங்காரப் பொருளுரைத்த கருணைக் குமரனவன்
ஔவைக்கு கனிகொடுத்த ஆணழகன்
ஆடிவருமயிலேறும் அழகுகுரு பாலனவன்
கூறுமடியார் வினை தீர்க்கும் குன்றக் குமரனவன்
நாடிவரும் அன்பர்க்கு நலமளிக்கும் நல்லூரானவன்
நல்லையில் கோயில்கொண்ட எங்கள் நாதனவன்

- க.நாகேஸ்வரா.

## வரந்தருவாய் நாயகனே!

நல்லூர்ப் பதியினிலே
நலமுடனே ஆட்சி செய்யும்
நல்லூர்க் கந்தனே - கோடி
வணக்கங்கள்

தனி சிறந்த திருநாடாம்
இலங்கைத் திருநாட்டினிலே
குடிமக்கள் யாவருமே
கோடியின்பம் பெற்றிடவும்

சமாதான முயற்சிகள்
வெற்றிக்கொடி காட்டிடவும்
சகல சௌபாக்கியங்களும்
சகலருமே பெற்றிடவும்

யான் உனைத் துதிக்கின்றேன்
வரந்தருவாய் நாயகனே

- பா.திருக்குமார்.

## பேரழகு வேலன்

நல்லையம் பதிதனிலே
நல் அருளாட்சி புரிகின்ற
சிவபெருமான் உமைமகனே
இச்சாசக்தி கிரியா சக்தி மணவாளனே
ஈழத்திரு நாட்டினிலே
தமிழர் எம் மிடி போக்கி
வளமான வாழ்வழித்திட
திருவீதி வலம் வாருமையா!

- இ.தனலோஜன்.

## நற்கருணை செய்வாய் போற்றி!

பல்லவி

பன்னிரு கரம் படைத்தாய் முருகா
என்னிரு கரந்தாழ் போற்றி!

(பன்னிரு...)

அனுபல்லவி

நன்னருள் செய்வாய் நல்லூரினில்
நின்னடி தொழுதோம் நிறையருள் போற்றி

(பன்னிரு...)

சரணம்

அலங்காரக் கந்தனாய் அவதரித்தாய் போற்றி
நலந்தந்து நமைக்காக்கும் நற்கடலே போற்றி
குலமாளும் குமரா நம்குறை தீர்ப்பாய் போற்றி
சல சல போற்றி! சன்முகா போற்றி! சந்நிதியே போற்றி!

(பன்னிரு...)

- என்.பிரதீத்தன்.

# குருநகரில் நெய்தல் விழா சனியன்று ஆரம்பம்

குருநகர்,செப்.9

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பு குருநகரில் நடத்தவுள்ள நெய்தல் விழா நாளைமறுதினம் சனிக்கிழமை குருநகரில் ஆரம்பமாகவுள்ளது.

கல்விசார் போட்டிகள் அன்றையதினம் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை குருநகர் கலை அரங்கில் நடைபெறும். இந்நிகழ்வில் பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

கலை, கலாசாரப் போட்டிகள் எதிர்வரும் 13ஆம், 14ஆம், 15ஆம், 16ஆம், 17ஆம், 18ஆம் திகதிகளில் குருநகர் கலை அரங்கில் நடைபெறும். இந்நிகழ்வில் பாலர் நடனம், கிராமிய நடனம், தனிப்பாடல், கூத்து தனிப்பாடல், அம்மா பாடல், நாட்டுக்கூத்து, நாடகம் ஆகிய போட்டிகள் இடம்பெறும்.

கடல்சார் போட்டிகள் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிதொடக்கம் குருநகர் இறங்கு துறையில் நடைபெறும். இந்நிகழ்வில் 17, 18 வயதுப் பிரிவினர் கலந்துகொள்ளும் 500, 1000 மீற்றர் நீச்சல் போட்டிகளும் படகோட்டப் போட்டிகளும் நடைபெறும்.

பொதுப்போட்டிகளாக மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் ஆகியன எதிர்வரும் 18ஆம், 25ஆம் திகதிகளில் காலை 6.30 மணிக்கு குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள 31 மீனவர் நினைவுத் தூபி முன்றிலில் ஆரம்பமாகும். (10-51)

## அரசியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.9

புதிய ஜனநாயகக் கட்சியின் அரசியல் கருத்தரங்கு நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு தெஹிவளை ஜெயசிங்கா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் சட்டத்தரணி சோ.தேவராஜா தலைமையில் இடம்பெறும் இக்கருத்தரங்கில் சமாதானப் பேச்சை உடன் ஆரம்பிக்கவும், விலைகளின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்தவும், தனியார் மயத்தை கைவிடவும், தோட்டத் தொழிலாளர்கள் உட்பட அரச, தனியார் துறையினருக்குச் சம்பள உயர்வு வழங்கவும் வலியுறுத்தும் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன. (10-202)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,செப்.9

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலையின் முதல்வர் வ.ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அருளாசியுரையைப் புத்தூர் சிவன் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சாமி. சோம சுந்தரக் குருக்கள் நிகழ்த்துவார்.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இசிவஞானசுந்தரமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் அலுவலக மின் பொறியியலாளர் மு.அமுதலிங்கமும், 'சோமாஸ கந்தன்' மலர் மதிப்பீட்டுரையை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் அதிபர் இகுண நாதனும் நிகழ்த்தவுள்ளனர். (10-204)

## ஒன்றுகூடல் நிகழ்வு

குருநகர்,செப்.9

சிறுவர்களுக்கு உதவும் நோக்குடன் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்படவுள்ள ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள மில்க்வைற் தொழிலகத்தில் சிறுவருக்கான அபிவிருத்தி நிலைய இயக்குநர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகவும், இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்தியப் பொதுமுகாமையாளர் க.கணேசபிள்ளை சிறப்பு விருந்தினராகவும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (10-51)

## சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சை

மண்டைதீவு,செப்.9

இலங்கை சட்டக் கல்லூரிக்கான அனுமதிப் பரீட்சை நாளைமறுதினம் சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

212 மாணவர்களைத் தெரிவுசெய்யும் இந்தப் போட்டிப் பரீட்சைக்கு 8 ஆயிரத்து 500 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (10-88-202)

## நல்லூர்க் கந்தன் ஆலயச்சூழலில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,செப்.9

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தினர், நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு சாரதா பரஞ்சோதியின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியதாரர்களாக வயலின் - ரோகிணி அருளையா, மிருதங்கம் - எம். சிதம்பரநாதன், கெஞ்சிரா - ரி.சண்முகசுந்தரம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (10-13)

✦✦✦

யாழ்ப்பாணம்,செப்.9

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் மேற்கு வீதி, ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய மண்டப அரங்கில் நடத்தப்படும் 'கம்பராமாயணம்' தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6 மணிக்கு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா "வாலிவதம்" எனும் காட்சி பற்றி உரையாற்றுவார். (10-13)

✦✦✦

யாழ்ப்பாணம்,செப்.9

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி இந்து கலாசாரத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தி வரும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று மாலை 7 மணிக்கு நயினை மைந்தர்களின் இசைக் கச்சேரியும், "ஈழத்துச் சீர்காழி" பத்மநாதன் சிவமைந்தனின் பீட்டுக் கச்சேரியும் இடம்பெறவுள்ளன. (10-13)






## முருகா நீவா

முருகா நீவா முத்திக்கும் பத்திக்கும் சித்திக்கும் முழு வல்லவனே



உருகா மனமேன் தந்தாய் - திருமால்மருகா
உவந்துவந்து சிவந்தருள்ளினை
உச்சியில் வைச்சிடு மெச்சிய வீரனே (முருகா)

அறுமா முகனே யரனார் மகனே
குறுமாமுனிக்குப தேசஞ்சொன்ன
குருவே வருவாய் விரைவா யருள்வாய் (முருகா)

- யோகர்சுவாமிகள்.

## சாயி சிந்தனை

### அணுவிலும் இறைவன் இருப்பான்



ஒவ்வோர் அணுவிலும் ஒவ்வோர் உயிரணுவிலும் தெய்வத்தன்மை நிறைந்துள்ளது. அணுக்களின் கூட்டமைப்பு ஒவ்வொன்றும் அணுக்களால் நிறைந்தது. வேதாந்தம் அனைத்தும் ஆத்மாவால் நிறைந்தது என்று கூறுகிறது. ஆத்மா இல்லாத இடமில்லை. அணுக்கள் இல்லாத இடமில்லை. அணுக்கள் தெய்வீக சக்தி பெற்றவை. தெய்வ சக்தி! அணுவிலும் நுண்ணியது. அண்டத்திலும் பெரியது. ஒன்றை நாம் ஏற்றுக்கொண்டு மற்றதை மறுத்தலாகாது. ஒவ்வொரு அணுவிலும் உயிரணுவிலும் தெய்வீகம் உறைந்துள்ளது. மனிதன் கண்ணால் காண்பவற்றை மட்டும் ஏற்றுக்கொண்டு, மற்றவற்றை நம்பமறுக்கிறான் இது தவறு. மறைந்துள்ளவற்றில் உள்ள தத்துவத்தை அறிய மறுக்கின்றோம். ஐந்தடி உயரமுள்ள ஒருவரைக் காண்கிறீர்கள். அவர் மாநிறமானவர். அவரது தலை வழுக்கையாக உள்ளது என்று பார்க்கிறீர்கள். அவரது ஸ்தூல வடிவமே உண்மையென்று நினைக்கிறீர்கள். அவரிடம் பல பண்புகள் மறைந்துள்ளன. அவரிடம் தயை உள்ளது. அவரிடம் தியாகம் உள்ளது. அவரிடம் பிரேமை உள்ளது. அவரிடம் தெய்வீக பாவனை உண்டு. இவற்றை நீ கவனிப்பதில்லை. அதனால் இவை இல்லை என்று கூறஇயலுமா? அவை மறைந்துள்ளன. ஆனால், நீ பார்ப்பதில்லை. நீ கண்ணால் காணாத, உணராத மறைந்துள்ளவையும் உனது செயலிற்கு எதிர் காலத்தில் விளைவை ஏற்படுத்துகின்றன.

மலருக்கு மணமுண்டு. மணத்திற்கு உருவம் இல்லை. மணத்திற்கு உருவம் கொடுப்பது மலரேயாகும். மலரில்லாது நறுமணம் இல்லை. பிரேமைக்கு உருவம் இல்லை என்று கூறுகின்றோம். பிரேமைக்கு உருவம் உண்டு. தாய் தான் பிரேமையின் வடிவம். ஒவ்வொன்றிற்கும் ஒரு வடிவம் உண்டு. அறியாத மக்கள் அறியாமையில் மூழ்கி, தர்க்கத்தில் வெல்லவேண்டுமென்ற ஆசை மேலிட்டு, உருவமில்லாததை மட்டுமே ஏற்கின்றனர். உருவமில்லாத எதையும் நாம் உலகில் காண இயலாது. ஒவ்வொன்றிற்கும் வடிவம் உண்டு. காண இயலாதவற்றிற்கும் வடிவம் உண்டு. ஆகவே, தெய்வத்திடம் முழு நம்பிக்கை வேண்டுமெனில், நாம் அணுவிற்கு அணுவிலும், அண்டத்திலும், அண்டத்திற்கு அப்பாலும் முழு நம்பிக்கை கொள்ள வேண்டும். பிரபஞ்சத்தில் நம்பிக்கை கொள்ளவேண்டும்.

(ஆதாரம்: சானாதனசாரதி)

# இத்தாலிய நாட்டுப் பெண்கள் இருவர் ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தல்!

## மேலும் இருவர் அவர்களோடு பிடிபட்டனர்

பக்தாத்,செப்.9

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் வைத்து இரு இத்தாலிய நாட்டுப் பெண்களும் இவர்களோடு சேர்த்து மற்றுமிரு ஈராக் நாட்டவர்களும் தீவிரவாத அமைப்பொன்றினால் பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று பக்தாத் செய்திகள் தெரிவிக்கின்றன.

- இவ்வாறு கடத்தப்பட்ட இரு இத்தாலி நாட்டவர்களும் மனிதாபிமான அடிப்படையில் சேவையாற்றும் நிறுவனமொன்றில் பணியாற்றுபவர்கள். மற்றைய ஈராக்கியர்களில் ஒருவர் ஆண். இவர் இந்த நிறுவனத்தில் பொறியியலாளராகக் கடமையாற்றுபவர். இன்னொருவர் மற்றொரு இத்தாலிய நிறுவனமொன்றில் பணியாற்றும் பெண்ணாவார்.

பக்தாத்தை இணைக்கும் மிக முக்கியமான பாலம் ஒன்றிற்கு அருகில் அமைந்துள்ள இந்த மனிதாபிமான நிறுவனத்தின் அலுவலகத்தை முற்றுகையிட்ட ஆயுததாரிகள் அதற்குள் இருந்த சிமோனா பரி, சிமோனா டொரேட்டா ஆகிய இரு இத்தாலிய நாட்டுப் பெண்களையும் மற்றும் இரு ஈராக்கியர்களையும் கடத்திச் சென்றுள்ளனர்.

கடத்தப்பட்ட இரு இத்தாலி நாட்டுப் பெண்களும் 29 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இருபதுக்கும் மேற்பட்ட ஆயுததாரிகள் அலுவலகத்தை முற்றுகையிட்டுத் தாம் கொண்டு வந்த மூன்று கார்களில் பணயக்கைதிகளைக் கடத்திச் சென்றனர் எனச் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சியொருவர் தெரிவித்தார்.

இக்கடத்தல் சம்பவத்தைத் தொடர்ந்து இத்தாலியப் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கொனி தனது அமைச்சர்களுடன் அவசரப் பேச்சு ஒன்றினை நேற்று நடத்தினார். பின்னர் அவர் அறிக்கை ஒன்றினை வெளியிட்டார்.

எதிராளிகளின் பிரநிதிகளுடன் சந்தித்துக் கதைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். தீவிரவாதத்தினால் நாட்டின் ஒற்றுமை சீருலைந்துள்ளது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட நால்வரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு சம்பந்தப்பட்ட தீவிரவாத அமைப்பிற்கு ஈராக்கின் இரு இமாம்கள் அடங்கலான நால்வர் கொண்ட மதத் தலைவர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடத்தப்பட்ட இத்தாலிய நாட்டவர்கள் பக்தாத்தின் தண்ணீர் மற்றும் பாடசாலை கட்டடத் திட்டத்தில் பணியாற்றும் பெண் சேவையாளர்கள் என்று ரோமைத் தளமாகக் கொண்டு செயற்படும் பக்தாத் அலுவலகப் பேச்சாளர் ஒருவர் செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

கடத்தப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமென பல்வேறு தன்னார்வ குழுக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. கடத்தப்பட்ட இரு பெண்கள் பற்றிய மேலதிகத் தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. இத்தாலியப் பெண்கள் இருவர் கடத்தப்படுவது இது முதற் தடவையல்ல.

ஈராக்கில் செயற்பட்ட இத்தாலியப் பத்திரிகையாளரான என்ஸோ பல்தோனி மிகக் கோரமான முறையில் படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே.

உலக அரங்கில்

## ஈராக்கில் கார்க்குண்டுத் தாக்குதல் பக்தாத் ஆளுநர் உயிர் தப்பினார்!

பக்தாத்,செப்.9

ஈராக் தலைநகர் பக்தாத்தில் நேற்றுமுன் தினம் குண்டு வெடித்தது. இதில் பக்தாத் நகர ஆளுநர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார்.

பக்தாத் நகர ஆளுநராக இருக்கும் அலி அல் ஹெய்திரி நேற்றுமுன்தினம் பக்தாத் நகரின் மேற்குப்பகுதியில் காரில் சென்றுகொண்டிருந்த போது அவரைப்படுகொலை செய்யத் தீவிரவாதிகள் முயற்சி செய்தனர்.

அவருடைய வாகன அணிவகுப்பின் மீது துப்பாக்கியால் சுட்ட தீவிரவாதிகள், பின்னர் வெடிகுண்டுகள் நிரம்பியகாரைக் கொண்டுவந்து மோதினர். இத்தாக்குதலில் அல்-ஹெய்திரி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். இந்தக் கார் வெடிகுண்டுத் தாக்குதலில் பலர் உயிர் இழந்தனர் எனக்கூறப்படுகின்றது. வீதி முழுவதும் இரத்தம் தோய்ந்த உடல்கள் கிடந்ததாக ஈராக் உள்விவகாரத்துறை அமைச்சின் செய்தித் தொடர்பாளர் கூறினார். பலியானவர்கள் மற்றும காயமடைந்தவர்கள் பற்றிய தகவல் கிடைக்கவில்லை.

அது மட்டுமன்றி பக்தாத் நகரைச்சுற்றி நேற்றுமுன்தினம் நடந்த வெவ்வேறு குண்டு வெடிப்பு சம்பவங்களில் மூன்று அமெரிக்க இராணுவ வீரர்கள் பலியாகினர். (ஐ-க)

## 150 பலஸ்தீனர்களை இஸ்ரேல் விடுவிப்பு!

காஸா,செப்.9

இஸ்ரேல் 150 பலஸ்தீன நாட்டுக் கைதிகளை விடுதலை செய்துள்ளதாக அந்நாட்டு இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இவ்வருடம் இடம்பெற்ற மிகப்பெரிய அளவிலான பலஸ்தீனக்கைதிகள் விடுதலை நிகழ்வு இதுவாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒருவாரகாலத்தின் பின்னரே இந்த விடுதலை நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இருதரப்பினருக்கும் இடையில் 18 நாள்களாக கைதிகள் விடுவிப்புச் சம்பவங்கள் எதுவும் நடைபெறாமல் இருந்தன. இஸ்ரேலின் சிறைகளில் 7,500 பலஸ்தீனர்கள் சிறைவைக்கப்பட்டுள்ளனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அலுவலகம் தெரிவித்தது.

இவர்களில் 2,500 பேர் இவ்வருடம் ஆரம்பத்திலிருந்து மேற்குக்கரைப்பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டவர்கள் என இஸ்ரேலிய செய்திப்பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

விடுதலைசெய்யப்பட்டவர்கள் எவரும் தனது தண்டனைக்காலத்தை முடிவுசெய்யாமல் விடுதலையாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

## புதிய தடுப்புச் சுவர் அமைக்கிறது இஸ்ரேல்

ஜெருசலேம்,செப்.9

இஸ்ரேல் பகுதியில் பலஸ்தீனத் தற்கொலைப் படையினர் இரு தினங்களுக்கு முன் தாக்குதல் நடத்தியதை அடுத்து மேற்குக் கரைப் பகுதியில் புதிய தடுப்புச் சுவர் அமைக்கும் பணியை இஸ்ரேல் தொடங்கியுள்ளது.

மேற்குக்கரையின் முக்கிய பகுதியாகக் கருதப்படும் ஹெப்ரானில் இப்பணி ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. இந்தப் பகுதி வழியாகத்தான் ஹெப்ரானிலிருந்து இரு தற்கொலைப் படையினர் இஸ்ரேலுக்குள் புகுந்து பஸ்களை சிதறவைத்தனர். இதில் 16 பேர் இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அராபத்தை அகற்றுவது என்பது திட்டமிட்டபடி நிறைவேறியே தீரும் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் பவுல் மோபஸ் சூளுரைத்துள்ளார்.

அவரைக் கொல்வது அல்லது வெளியேற்றுவது அல்லது தனிமைப் படுத்துவது என்ற பொருளில் அகற்றுவது என்ற வார்த்தையை இஸ்ரேல் பயன்படுத்துகின்றது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ-3)


### "நயினை மைந்தர்களின்" இசைக்கச்சேரி



"ஈழத்து சீர்காழி" இசைமைந்தன்
செல்வன் சிவமைந்தன் பத்மநாதனின்
(யாழ். மத்திய கல்லூரி மாணவன்)
இசைக்கச்சேரி இன்று (09.09.2004)
வியாழக்கிழமை மாலை 7.00 மணியளவில்,
நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் (நல்லூர் ஆலயமுன் வீதி) நடைபெறும் என்பதை
அவரது ரசிகர்களுக்கும் சங்கீத ஆர்வலர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

திரு.திருமதி யோகலட்சுமி பத்மநாதன்
இல.9, மாட்டின் லேன்,
யாழ்ப்பாணம். (36245)

தர்மினி பத்மநாதன்
*கலைப்பீடம்,*
*யாழ். பல்கலைக் கழகம்*



### மானிப்பாய் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ/து)

### முக்கிய அறிவித்தல்

**31.12.2003இல் மீதிகளை உறுதிப்படுத்தல்**

மேற்படி சங்கத்தில் 31.12.2003இல் முடிவடையும் நிதியாண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டிருப்பதனால் சங்க கிராமியவங்கியின் வாடிக்கையாளர்கள் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் தமது மீதிகளை கிராமிய வங்கி கையேடுகளைச் சமர்ப்பித்து உறுப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| காலம் | | நேரம் |
|---|---|---|
| 09.09.2004 | - வியாழக்கிழமை - | 9.30 - 3.30 |
| 10.09.2004 | - வெள்ளிக்கிழமை - | 9.30 - 3.30 |

*நா.துரைச்சாமி*
*பொதுமுகாமையாளர்.* (C/37554)

மா.செல்வராசா
தலைவர்.



### துயர் பகிர்வு

எமது பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியை திருமதி ஜெயக்குமாரி கந்தவேள் அவர்களின் அன்புப் பேர்த்தியார்

**திருமதி நடராஜா சிவபாக்கியம்**

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அன்னாரின் குடுத்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதுடன் துயரில் பங்குகொள்கின்றோம்.

யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்
பள்ளிக்குழுமம்.

(36247)


## ரஷ்யாவின் கடத்தல் நாடகத்தில் பெற்றோர்களே முதலில் தாக்கினர்!

### ரஷ்ய நாளேடு பரபரப்புத் தகவல்

மொஸ்கோ,செப்.9

ரஷ்யாவில் பெஸ்லன் நகரில் ஒரு பாடசாலைக்குள் தீவிரவாதிகள் நுழைந்தபிறகு, பிடிபட்டவர்களின் பெற்றோர்களும், உறவினர்களும்தான் தாக்குதலை ஆரம்பித்தனர் என்று, பணயக் கைதிகளை மீட்க தாக்குதல் நடத்தும் திட்டம் அரசுக்கு இருக்கவில்லை எனவும் ஒரு ரஷ்ய நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

உள்ளூர் கலவரத் தடுப்புப் பொலீஸாருடன, பணயக் கைதிகளின் பெற்றோர்கள் இத்தாக்குதலில் ஈடுபட்டனர் என பெடரல் செக்யூரிட்டி அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகவும் அந்த நாளிதழ் தெரிவித்துள் ளது.

ஆரம்பத்தில் எந்த விதமான வெடிச்சத்தமும் கேட்கவில்லை. லேசான துப்பாக்கிச் சூட்டுடன் ஆரம்பித்து, பின்னர் கடுமையான துப்பாக்கிச் சண்டை மூண்டதாகவும் சம்பவத்தைப் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் உயிரிழப்புகளைத் தவிர்க்கவே முடியாது என ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர். தாக்குதல் நடத்துவது குறித்தும் பொறுப்புக்கள் குறித்தும் ரஷ்ய அதிரடிப்படைகள் திட்டமேதும் வைத்திருக்கவில்லை என மற்றொரு நாளிதழ் தெரிவித்துள்ளது.

இதனால்தான் இப்படைகள் அதிக அளவில் இழப்புக்களைச் சந்தித்ததாகவும் அப்பத்திரிகை கூறியுள்ளது. (ஐ-க)

## இந்திய - பாகிஸ்தான் பேச்சுக் குறித்து காஷ்மீர் பிரிவினை தலைவர் அதிருப்தி

காஷ்மீர்,செப்.9

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற பேச்சுக்கள் முழுமையாகத் தோல்வியடைந்ததாக காஷ்மீரின் முக்கிய பிரிவினைவாதத் தலைவர்களில் ஒருவரான செய்யது சலாஹு"தீன் தெரிவித்துள்ளார்.

எட்டு மாதங்களாக நடைபெற்ற பேச்சுக்களில் காஷ்மீர் விவகாரம் குறித்து எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று கிளர்ச்சிக் குழுக்களின் கூட்டமைப்பான ஐக்கிய ஜிஹாத் சபையின் தலைவரான சலாஹு"தீன் கூறியுள்ளார்.

காஷ்மீர் விவகாரத்தைப் புறந்தள்ளிவிட்டு, அதில் முன்னேற்றம் ஏற்படாத பட்சத்தில் பேச்சுக்களை முடித்துக்கொள்ளுமாறு பாகிஸ்தான் அரசை இந்தியா வலியுறுத்துவதாகக் கூறி, அவர் இந்தியாவைக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆனால், சலாஹு"தீனின் கூற்றை நிராகரித்துள்ள பாகிஸ்தானின் வெளியுறவுத்துறை அமைச்சு, காஷ்மீர் விவகாரம் குறித்துப் பேசப்பட்டதாகவும், அதில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது. (ஐ-க)


### மரண அறிவித்தல்

**கணபதிப்பிள்ளை அரிச்சந்திரன்**



காரைநகர், மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அரிச்சந்திரன் நேற்று (08.09.2004) புதன்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் காலமரனார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் கணபதிப்பிள்ளை திலகவதி, பத்மாவதி ஆகியோரின் அன்பு மகனும் சூராசி கதிரவேலு முத்தம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் அரிதரன் (வைத்தியர், பொது வைத்தியசாலை, திருகோணமலை), அருள்ராசா (பொறியியலாளர், K.G.M. இண்டஸ்றீஸ்), அருள்மதி (இறுதியாண்டு முகாமைத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்), அகில்ராஜ் (தொழில்நுட்பபீடம், நாவல திறந்த பல்கலைக்கழகம்), அரவிந்தன் (பரியோவான் கல்லூரி A/L 2006) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருளாம்பிகை (லண்டன்), அம்பிகைபாகன் (வைத்தியர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மற்றும் கமலாம்பிகை, நயினை லட்சுமி, சிவசிதம்பரம் சீதப்பிள்ளை சவுந்தரம் ஆகியோரின் பெறாமகனும் சிதம்பரப்பிள்ளை (பசறை-வர்த்தகர்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2004) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.15, முதலாம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(36246)

தகவல்:
அ. அரிதரன்
(மகன்).

# கடற்படைத் தாக்குதலைக் கண்டித்து முல்லைத்தீவு மீனவர்கள் ஊர்வலம்

முல்லைத்தீவு,செப்.9

இலங்கைக் கடற்படையினர் தமிழ் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதையும் அவர்களை அச்சுறுத்துவதையும் முடிவுக்குக் கொண்டு வருமாறு கோரி நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மீனவர்கள் நகரில் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

முல்லைத்தீவு மீனவர் சங்கங்களின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது.

கடந்த முதலாம் திகதி முல்லைத்தீவு பொக்கணைப் பகுதியில் கடற்படையினர் மீனவர்கள் மீது நடத்திய தாக்குதலில் அவர்களின் படகு சேதமடைந்தது. படகில் இருந்து கடலில் குதித்துத் தப்பிய மீனவர்களில் ஒருவரைக் கடற்படையினர் தாக்கிக் காயப்படுத்தினர்.

இதனையடுத்தே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஊர்வலத்தின் இறுதியில் தமது நிலைப்பாட்டை விளக்கி ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றையும் முல்லைத்தீவு அரச அதிபரிடம் அவர்கள் கையளித்தனர். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் மகஜரின் பிரதிகள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரிடம் இருந்து எதிர்நோக்கும் அச்சுறுத்தலை முடிவுக்குக் கொண்டுவர உங்களின் உடனடி நடவடிக்கைக்காக இந்தக் கோரிக்கையைச் சமர்ப்பிக்கின்றோம். - என்று மீனவர்கள் தமது மகஜரில் ஜனாபதிக்குத் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினர் எமது மீனவர்களை அச்சுறுத்துவதும் அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதும் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. கடற்படையினரின் செயலால் மீனவர்கள் உயிராபத்துடனேயே தமது தொழிலில் ஈடுபட வேண்டியவர்களாக உள்ளனர். இரண்டரை வருடங்களாகத் தொடரும் போர்நிறுத்த உடன்படிக்கையால் எமது சாதாரண வாழ்வில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. அண்மையில் மீனவர்கள் மீது நடத்தப்பட்ட இரு தாக்குதல்கள் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. ஊடகங்களிலும் அவை பற்றிச் செய்திகள் வெளியாகி இருந்தன. ஆனாலும் கடற்படையினரின் நடவடிக்கைகளில் எந்தவிதமான முன்னேற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை. என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் முல்லைத்தீவுக் கடலில் இடம்பெற்ற மீனவர்கள் மீதான தாக்குதல்கள் பற்றியும் மகஜரில் விளக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல் வேறு பல சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என்பதையும் சுட்டிக்காட்டும் மகஜர், இவை தொடர்பாக ஜனாதிபதி உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் கோரியுள்ளது. (க)


## சேவை நலம் பாராட்டு



சங்கானைக் கல்விக் கோட்டத்தின் பணிப்பாளராகச் சிறப்புறச் சேவையாற்றி இன்றிலிருந்து ஓய்வுபெறும்

**திரு.சி.செல்லையா**

அவர்களின் தனித்துவமான சேவையைப் பாராட்டி உடல், உள நலத்துடன் பல்லாண்டு காலம் பல நலமும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

-பாடசாலைச் சமூகம்,
யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

(36249)(29-11-12)



## புதிய பிரிவுகள் ஆரம்பம்
**External Degree**

2005 பிரிவுக்கானது
(Jaffna University)

G.A.Q. | 1st in Com | B.A. | B.Com.

ஆரம்பம்:11-09-2004

Further Details
Director
**Jaffna College Undergraduate Dept.**
**464, Hospital Road,** (Near Commercial Bank)
**Jaffna.**

(C/37560)(43-11-12)



## புதுமனை புதுவிழா அழைப்பு

அன்புடையீர்!

தாரண வருடம் ஆவணி மாதம் 26ஆம் நாள் (11-09-2004) சனிக்கிழமை பகல் 11.05 மணிமுதல் 12.00 மணிவரையுள்ள சித்தயோகம் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**ராஜகலா இல்லம்**

என்னும் புதுமனை புகுவதற்கு இறைவன் திருவருள் கொண்டு நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுத் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்:

*30/1, கோணாவில் லேன்,*
*ஸ்ரேசன் வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்,*
*யாழ்ப்பாணம்.*
*(சாயிதுர்க்கா அம்மன் கோயில், அருகில்)*

திரு.திருமதி.க.வரதராசா சசிகலா
குடும்பத்தினர்,
(நாவற்குழி).

(36253)(43-11-12)



## கண்ணீர் அஞ்சலி



எமது சக மாணவன் செல்வன் அ. அரவிந்தன அவர்களின் அன்புத் தந்தையார்

**கணபதிப்பிள்ளை அரிச்சந்திரன்**

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறோம். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

யாழ். இந்து, பரியோவான் கல்லூரி,
A/L2006 மாணவர்கள்.

(36248)(15-11-12)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி அருள்மதி அவர்களின அன்புத் தந்தையார்

**கணபதிப்பிள்ளை அரிச்சந்திரன்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இறுதிவருட முகாமைத்துவ மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(36250)(15-11-12)


# ஜனாதிபதி செயலகத்தைப் படம் பிடித்தாராம் யாழ். இளைஞர் படையினரால் கைது!

கொழும்பு,செப்.9

ஜனாதிபதி செயலகத்தை டிஜிட்டல் கமெரா மூலம் படம் பிடித்தார் எனக் கூறப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் மாலை 6.15மணியளவில் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கும் பகுதியில் வைத்து ஜனாதிபதி செயலகத்தைப் படம் பிடித்துக்கொண்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தணிகாசலம் ராஜு (வயது-19) என்ற இளைஞரே கைதுசெய்யப்பட்டார்.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இவர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். கோட்டைப் பொலீஸார் சந்தேக நபரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவராக இவர் இருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்

(க)


நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந்த் (இருவேடம்), குஷ்பு, ரோஜா நடித்த
வீரம் விளைஞ்ச மண்ணு



வெள்ளி, சனி, ஞாயிறு
STRIKE FORCE (இரவு 8.45பு.நே) தினசரி: 11.00, 2.45, 6.00(பு.நே)

லக்சுமி இணுவில்



தனுஸ், சாயாசிங், கருணாஸ் மற்றும் பலர் நடிப்பில்
திருடா திருடி
(36223)(12)
காட்சிநேரம் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடிக்க
மதுர
பு.நே.:10.30, 2.30, 6.30, 9.30



நாகம்ஸ் சுன்னாகம்
தனுஷ், சிந்துதுலானி, கருணாஸ், மணிவண்ணன், நடிப்பில்
சுள்ளான்



(சி-36415) காட்சிநேரம்: 11.00,3.00, 7.00 (புதிய நேரம்)



## யாழ்ப்பாண மாநகரசபை பதவி வெற்றிடங்கள்
### நூலகர் தரம்III- ஒப்பந்த அடிப்படையிலான நியமனம்

மேற்குறித்த பதவிக்கு க.பொ.த.(சா/த)இல் ஒரே அமர்வில் 05 பாடங்களில் திறமைச்சித்தியும், க.பொ.த.(உ/த)இல் 03 பாடங்களில் சித்தியும், நூலகவியல் சித்தியும் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

வெற்றிடமாகவுள்ள 07 பதவி அணிகளும், 03 மாத தகுதிகாண் நிலையோடு ஒரு வருட கால ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படும்.

விண்ணப்பங்கள் சுயவிவரங்களுடனும், உரிய ஆவணங்களின் நிழற் பிரதிகளுடனும் 13.09.2004ஆம் திகதிக்கு முன் நேரில் மாநகர ஆணையாளர் செயலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். 14.09.2004 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்க வேண்டும்.

(கலாநிதி க.குணராசா)
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/37561)(15-11-12)


# மரண அறிவித்தல்கள்

## முருகன் அற்புதம்

மட்டுவில் தெற்கு, சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் அற்புதம் நேற்று (08.09.2004) புதன்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் மல்லிகாதேவியின் அன்புக் கணவரும் ரஜிந்தா, ரஜீவன், ரமேஷ், ரஜிகரன், அஜந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், குணசிங்கம் மற்றும் கனகரத்தினம், அன்னலட்சுமி, சரஸ்வதி, கண்மணி, பரிமளம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.09.2004) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2மணிக்குத் தகனக்கிரியைக்காக கொத்தியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் கோயிலடி,*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

(சி-37565)(43-11-12)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி தம்பிப்பிள்ளை தங்கம்மா

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை தங்கம்மா நேற்று (08.09.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் குலநாயகம், இராசமலர், இரஞ்சிதமலர், காந்தமலர், தேவமலர், இரவீந்திரநாயகம் (இத்தாலி), ரதிமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பராசக்தி, பொன்னுத்துரை, சொக்கலிங்கம், கந்தசாமி, இரத்தினம், சத்யா, குணரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவசாமி, பிள்ளையம்மா, சின்னத்தங்கச்சி, வேதாரணியம், நடராசா, பாலசிங்கம், திலகேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சனிக்கிழமை (11.09.2004) நடைபெற்று, 10மணிக்குத் தகனக் கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*விக்னேஸ்வரா வீதி,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

(சி-37563)(29-11-12-43)

தகவல்:
த.குலநாயகம்,
த.இரவீந்திரநாயகம்.
(மகன்மார்).

## கணபதிப்பிள்ளை தயாபரன் (தயா)

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தயாபரன் (தயா) 05.09.2004 அன்று அகால மரணமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை-மனோன்மணி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினம், சரஸ்வதியின் அன்பு மருமகனும் தண்மதியின் (உமா) கணவரும் பிரேகா, நிரோஷன், நிரூஷன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும் சிறிதரன் (யாழ்.மாவட்ட செயலகம்) காலஞ்சென்ற கிருபாகரன், யோகேஸ்வரன் (கனடா), சந்திரா (வத்தளை), பாஸ்கரன் (வவுனியா), ஜெகதீஸ்வரன் (வவுனியா), கேதீஸ்வரன் (சிங்கப்பூர்) ஆகியோரின் சகோதரரும் இரத்தினாவதி (டென்மார்க்), சரோஜா (கல்வியங்காடு), வித்தியகுமார் (ஜேர்மனி), ஜெயக்குமார் (ஜேர்மனி), லோகேஸ்வரன் (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 8.00 முதல் மாலை 3.00 வரை மனம்பெரி மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 3.00 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*புதிய செம்மணி வீதி,*
*நல்லூர் வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*

(சி-37564)(29-11-12-43)

தகவல்:
நா.தங்கராசா.
(பேபி மாமா).

## வலத்திசார் மரியதாஸ் (காந்தி)



குருநகரைப் பிறப்பிடமாகவும் இல.54, மவுண்கார்மேல் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வலத்திசார் மரியதாஸ் (காந்தி) நேற்று (08.09.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வலத்திசார் மற்றும் தங்கரட்டிணத்தின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சவிரியான் - சவிரியம்மா ஆகியோரின் மருமகனும் றீற்றம்மாவின் அன்புக் கணவரும் குயின்ரஸ் (லண்டன்) காலஞ்சென்ற றொசான மற்றும் தர்சினி, நிரஞ்சன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரது நல்லடக்கம் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.54, மவுண்கார்மேல் வீதி,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*

(56251)(15-11-12-43)

தகவல்:
மனைவி.

# வாழ்[illegible] செலவுப் புள்ளியோடு சேர்த்து வேதனம் மலையகத் தொழிலாளர்களுக்கு வழங்க வற்புறுத்து

## அதற்காக நாளை நாடாளுமன்றில் விவாதத்துக்கு சந்திரசேகரன் நடவடிக்கை

தோட்டத் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் புள்ளியோடு சேர்த்து வேதனம் வழங்கும் முறையை மீண்டும் கொண்டு வர வேண்டும் எனக் கோரும் பிரேரணை ஒன்றை மலையக மக்கள் முன்னணி, நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி முதல் 1 மணி வரை ஒத்திவைப்பு வேளையில் இப்பிரேரணை மீதான விவாவத்திற்கு இந்த முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப பினருமான பெ.சந்திரசேகரன் கோரியிருக்கின்றார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வுக்கு ஏற்ப நிலுவையோடு வேதனம் கிடைப்பதை உறுதி செய்யும் இந்த முயற்சிக்கு சகல கட்சிகளும் ஆதரவு தர வேண்டும் எனவும் அவர் கேட்டிருக்கின்றார்.

எவ்வாறு எந்தெந்தக் காலங்களில் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தீர்மானிக்கப்பட்டன என்பதையும் வாழ்க்கைச் செலவுப் புள்ளிமுறை தொடர்ந்திருந்தால் தொழிலாளர்களின் சம்பளம் கடந்த ஜூலை மாதத்தில் தினசரி 207 ரூபாவாக உயர்ந்திருக்கும் என்பதையும் விளக்கி, ஒவ்வோர் அரசியல் கட்சிகளுக்கும் அவர் கடிதம் எழுதியுள்ளார்.

ஜே.வி.பி., சிஹல உறுமய உட்பட சகல சிங்கள, தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவையும் தாம் இவ்விடயத்தில் எதிர்பார்க்கிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மலையகத் தொழிலாளர்களுக்குத் தினசரி நாநூறு ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ள பெருந்தோட்டத் துறை அமைச்சரினதும் -

இவ்விடயம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டு ஜே.வி.பி., தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரதும்-

அணுகுமுறையை மலையக மக்கள் முன்னணி வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி வழங்குவதற்கு எதிராகவோ அல்லது முதலாளிமார்களின் நலனை மனதில்கொண்டு தொழிலாளர்களுக்கு எதிராகவோ ஏதாவது தொழிற்சங்கங்கள் நடந்து கொண்டால் அதன் முழுப்பாவத்தையும் தோட்டத் தொழிலாளர்களால் ஒரு காலமும் - இனி மேலும் - சுமக்கவே முடியாது என்றும் பெ.சந்திரசேரன் மேலும் கருத்துத் தெரிவித்தார். (க)

# ஹெய்டியில் அமைதிப் பணிக்குச் செல்ல இலங்கைப் படையினர் 750 பேர் தயார்!

பனாகொட, செப்.9

ஐ.நா.வின் சமாதானப் பணியில் பங்கேற்பதற்காக இலங்கை இராணுவத்தின் தெரிவு செய்யப்பட்ட படையினர் விரைவில் ஹெய்டி செல்லவுள்ளனர். இதற்கான 750 பேரைக் கொண்ட முதலாவது படையணி தனது பயிற்சிகளை முடித்துக் கொண்டு தயாராகியுள்ளது.

கடந்த சில மாதங்களாக பனாகொட இராணுவ முகாமில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டுவந்தன.

ஹெய்டியில் கடந்த ஜூன் மாதம் முதல் அமைதிப்பணியில் ஐ.நாவின் பன்னாட்டுப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இலங்கையில் இருந்து செல்லும் 750 பேரும் அவர்களுடன் இணைந்துகொள்வர். (எ-9)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச்சென்றுள்ளனர்.

'மக்' ஊழியர்களின் உதவியுடன் வாகனத்தில ஏற்றிச் செல்லப்பட்ட காயமடைந்தவர்கள் திம்பட்டிய இராணுவ முகாமுக்குக் கொண்டுசெல்லப்படுவதற்கு முன்னர் துணைப் படையைச் சேர்ந்த அவர்களில் ஒருவர் உயிரிழந்தார். அவர் நகுலன என்று அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும புலிகள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் நிறுவனமான 'மக்' அப்பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றும் தொண்டுப் பணியில் ஈடுபட்டிருக்கின்றது.

அந்த அமைப்பின் உள்ளூர் ஊழியர்களைத் தாக்கி காயமடைந்த தமது சகாக்களை ஏற்றிச் செல்லுமாறு தாக்குதலாளிகள் பலவந்தப் படுத்தியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

திம்பிட்டிய இராணுவ முகாமுக்கு மிக நெருக்கமாகச் சென்றதும் தாக்குதலாளிகள் தம்மை விடுவித்தனர் என்று 'மக்' ஊழியர்கள் எம்மிடம் தெரிவித்தனர் - என்றார் விடுதலைப் புலிகளின தளபதிகளில் ஒருவர்.

இதேவேளை, தமக்கும் இந்தத் தாக்குதலுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று கொழும்பிலுள்ள இராணுவ அதிகாரிகள் மறுத்துள்ளனர். விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டை நிராகரித்த இராணுவ வட்டாரங்கள் அது அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடந்த சம்பவம் - என்று தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 4 பேர் உயிரிழந்தனர் என்றும் இராணுவத் தரப்புத் தகவல் தெரிவித்தது.

இந்தச் சம்பவத்துடன் இராணுவம் தொடர்புபட்டிருப்பது என்று கூறுவது ஆதாரமற்றது என்று இராணுவப் பேச்சாளர் சுமேத பேரேரா தெரிவித்தார்.

சம்பவம் நடந்த பகுதியில் முப்படைகளையும் சேர்ந்த எவரும் கடமையில் இல்லை. அங்கு விசேட பொலீஸ் அதிரடிப்படையினரே பணியில் உள்ளனர். அவர்களின் கட்டுப்பாட்டிலேயே அப்பகுதி முழுமையாக இருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

நிலக்கண்ணி அகற்றும் 'மக்' அமைப்பின் கூற்றுப்படி, அவர்களில் சிலர் தாக்கப்பட்டுள்ளனர். புலிகளின் எல்லை நிலைக்கு அப்பால் இருந்த இரு சடலங்களைக் காட்டுப்பகுதிக்கு எடுத்துச்செல்ல உதவும்படி அவர்களைத் தாக்குதலாளிகள் நிர்ப்பந்தித்துள்ளனர். அந்த இடம் எது என்று சரியாகக் கூறப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து நேற்று இரவு அவா இராணுவத் தலைமையகத்துடன் தொடர்புகொண்டு பேச விருந்தார். (எ-க-9)

## யாழ். படைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ள வசாவிளான், ஒட்டகப்புலம், சென். ஜேம்ஸ் தேவாலயத்தில் மாதாந்தம் ஆராதனைகளை நடத்துவதற்கு இந்தச் சந்திப்பின்போது தளபதி சுனில் தென்னக்கோன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள ஏனைய தேவலாயங்கள் பற்றியும் அங்கு மக்கள் மதவழிபாட்டில் ஈடுபடுவது பற்றியுமே இந்தச் சந்திப்பில் பிரதானமாக ஆராயப்பட்டன என்று ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பின் போது கேணல் உடுவத்தவும் ஜெனரல் சுனில் தென்னக்கோனுடனிருந்தார். யாழ். இராணுவத் தளபதி ஆயர் இல்லத்துக்கு வந்திருப்பது இது இரண்டாவது தடவையாகும். (எ-க-9)

## தாண்டவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர், மட்டக்களப்பு பிராந்திய இராணுவத் தலைமை அலுவலகத்திலிருந்து வரவழைக்கப்பட்ட குண்டு செயலிழக்கச் செய்யும் விசேட படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவ நிபுணர்களின உதவியுடன் குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாக மட்டக்களப்பு தலைமைப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஹரிச்சந்திர பண்டார தெரிவித்தார்.

இக்கைக்குண்டு இங்கு எவ்வாறு ஏன் வைக்கப்பட்டது என்பதைக் கண்டறிவதற்கான மேலதிக விசாரணைகளைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு நகரில் அண்மைக்காலத்தில் பொலீஸாரும் இராணுவத்தினரும் தமது பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். இப்பிரதேசத்தில் தற்போது 20 சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (எ-க)

## தாக்குதல்...

என்பதனையே என்னால் கூறமுடியும்.

கண்ணியகற்றும் குழுவின் கூற்றுப்படி அந்த அமைப்பின் சில உறுப்பினர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள். அந்த உறுப்பினர்கள் எல்லைச் சாவடிக்கு வெளியே கிடந்த இரண்டு சடலங்களைக் காட்டுப்பகுதிக்கு எடுத்துச்செல்ல வற்புறுத்தினார்கள். தாக்குதலை யார் நடத்தினார்கள் என்பதை எங்களால் உறுதிசெய்ய முடியவில்லை என்றார் சுஸான். (எ-9)

## அகாஷியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயத்தின்போது சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளார்.

இலங்கை - ஜப்பானிய வர்த்தக ஒத்துழைப்புக்கான அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளார். இருதரப்புப் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இந்தச் சந்திப்புக்கள் நடத்தப்படுகின்றன.(எ-க)

## முப்படைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுச் சென்றிருந்தார்.

அவருக்குப் பின்னர் இராணுவத் தளபதி பதவிக்குச் சாந்த கொட்டேகொட நியமிக்கப்பட்டாலும் சில மாதங்களாக இந்தப் பதவி நிரப்பப்படாமல் வெற்றிடமாக இருந்துவந்தது.

தற்போது அப்பதவிக்குக் கடற்படையின் தளபதி ரியர் அட்மிரல் தயாசந்தகிரி நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதிக்கு மிக நெருக்கமான - நம்பிக்கையான - படைத்தளபதி சந்தகிரி என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-க)

## புலிகளின் நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கும் இதன் உண்மை நிலைமை விசாரணைக்குழுவின் ஊடாக விளங்கும் என நம்புகின்றேன்.

நாங்கள் அறிந்திருந்தபடி இந்த எல்லைப்புறத் தாக்குதல் நடத்தியவர்கள் படையினரே. அத்துடன் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகத் தேசவிரோத செயல்களில் ஈடுபடுகின்ற தமிழ் இளைஞர்களும் இணைந்து வந்து தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள் என்று கௌசல்யன் குறிப்பிட்டிருக்கிறார். (எ-9)

## வெள்ளவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 9.20 மணியளவில் வெள்ளவத்தைச் சந்தைப் பகுதியில் இருந்து வந்த இந்தப் பெண்மணி கடற்கரைப் பகுதிக்குச் செல்வதற்காக வீதியைக் கடக்க முயன்றார் என்று பார்த்தவர்கள் கூறினர். அப்போது வேகமாக வந்த பஸ் இவரை மோதியது. பஸ்ஸின் முன் சில்லு அப்பெண்ணின் தலைமீது ஏறியதில் அவரது தலை அடையாளம் காணமுடியாத அளவுக்குச் சிதைந்து போயிருந்தது. அப்பெண் அந்த இடத்திலேயே மரணமானார். (எ-க)

## சந்திரிகா - ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு தங்கியிருக்கும் அவர் அரசு மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களுடனும் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடனும் சமாதான முயற்சிகள் பற்றிக் கலந்துரையாட வுள்ளார்.

சமாதான முயற்சிகளில் எத்தகைய போக்கைக் கடைப்பிடிப்பது என்றும் சமாதான முயற்சிகளை எப்படி - எந்தத் திசையில் - முன்னகர்த்துவது என்றும் சொல்ஹெய்மின் வருகைக்கு முன்பாக ஆராய்வதும் ஜனாதிபதி - ரணில் சந்திப்பின் முக்கிய நோக்கங்களில் அடங்கும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க முன்வந்ததன் மூலம் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு நாடாளுமன்றில் பெரும்பான்மையைப் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே சந்திரிகா - ரணில் சந்திப்பு இடம்பெறவுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-க)

## அரசாங்கமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரும்புகிறார்கள் என்பதை அவர்கள் சொல்லிலும் செயலிலும் காட்ட வேண்டும். இலங்கையின் வடக்கு - கிழக்கு மக்களின வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கு சமாதானப் பேச்சுக்கள் துரிதமாக ஆரம்பிக்கப்படவேண்டும் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அமெரிக்கா இலங்கை அரசுக்கு முழுமையாக உதவும்.

இலங்கை அரசுடன் தெளிவான சாதகமான இணக்கப்பாடு ஒன்றுக்குப் புலிகள் வரவேண்டும். அதுவரை வெளிநாட்டுப் பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து அந்த அமைப்பை அமெரிக்காவால் நீக்கமுடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கோபர் ப்ளெக் கொழும்பில் தங்கியிருக்கும் போது அரச பிரதிநிதிகளைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்துக் கலந்துரையாடுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிராகச் செயற்படும் அமெரிக்காவின் முக்கிய அமைப்பான இராஜாங்கத் திணைக்களத்தின் பயங்கரவாதத்திற்கு எதிரான ஒருங்கிணைப்பாளராக தூதுவர் ப்ளெக் பணியாற்றிவருகின்றார் என்பதனால் அவரது இலங்கை விஜயம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (எ-க)


இணைந்த கணிதம் G.C.E (A/L)

**துரித மீட்டல் வகுப்பு**

ஆரம்பம்: 11.09.2004 சனிக்கிழமை

காலை 10.00 மணி (SLAT)

இடம்: 442, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்

ஆசிரியர்:

திரு.சு. இலட்சுமணன்

(அநுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) (சி-37551)

324, Palaly Road, Jaffna.

BIT

விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

1st Semester

New Batch will be Commenced on

10th September at 04.30 p.m

விசேட தெரிவுப்பரீட்சை முடிவுகளை எமது நிறுவனத்தில் பார்வையிடலாம்

Supported by UNDP/JRRP


## மரண அறிவித்தல்கள்

### பண்டிதர் அப்பாப்பிள்ளை ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை ஆறுமுகம் நேற்று (08.09.2004) புதன்கிழமை காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

(36256)(29-11-12)

### குமாரசாமி மனோகரன்



காரைநகர் நடுத்தெருவைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி மனோகரன் 07.09.2004 அன்று நோர்வேயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி திருநிலைநாயகியின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி, டாக்டர் புவனேஸ்வரி (லண்டன்), யோகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர், சிங்கப்பூர்), கனகேஸ்வரி (லண்டன்), ஞானேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் காலஞ்சென்ற கந்தையாபிள்ளை (அமுதா நகை மாளிகை), ரவீந்திரா (பொறியியலாளர் - லண்டன்), சிவபாதம் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), கனகலிங்கம் (கணக்காளர் - லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.09.2004 திங்கட்கிழமை நோர்வேயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

'திருமனை'
நடுத்தெரு, காரைநகர்.
தொலைபேசி - 071- 2399194

தகவல்:
கந்தையாப்பிள்ளை ஜெயந்தன் (மருமகன்). (36252)(29-11-12)

## மரண அறிவித்தல்

### வைரமுத்து சின்னத்தம்பி

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து சின்னத்தம்பி அவர்கள் நேற்று (08.09.2004) புதன்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - சிவகாமி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் செல்லப்பாவின் அன்புச் சகோதரரும் குலேந்திரனின் (பரிசாரகர் - அரசினர் வைத்தியசாலை, அச்சுவேலி) பாசமிகு தந்தையும் யமுனாவின் (பரிசாரகர்- அரசினர் வைத்தியசாலை, கோப்பாய்) மாமனாரும் லவேந்திரன், லக்ஸ்மன், ஜனன், தாரணி, நற்றணன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2004) வியாழக்கிழமை 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

தகவல்:
குலேந்திரன் (மகன்).

(36255)(29-11-12)


**முக்கிய அறிவித்தல்**

AL2005

★ நாள்தோறும் 6 p.m. இல் நடைபெறும் அலகுகள்

INORGANIC & ORGANIC
PHYSICAL & THERMO & PAPER CLASS

By: அன்பழகன் B.Sc.

இவ்வாரத்தின்பின் இப்பிரிவுக்கு எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

CHEMISTRY CENTRE
Temple Road, (Green Park முன்னே).

**புவியியல்**

S.R. பாலா B.A.(Hons).

| | |
|---|---|
| 2005 | சனி, ஞாயிறு |
| பிரிவு - I | 10.00- 11.00 |
| பிரிவு - II | 12.00- 1.00 |
| 2006 | சனி, ஞாயிறு |
| பிரிவு - I | 9.00- 10.00 |
| பிரிவு - II | 1.00- 2.00 |
| DAY | 11.00- 12.00 |

BEACON யாழ்நகர், வெலிங்டன் சந்தி. (36186)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.